Registered as a News Paper in Sri Lanka    දිනමුරසු වාරමලර්

# தினமுரசு வாரமலர்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

ரூபா 30.00
பெப்ரவரி
11 - 17, 2016
பக்கம்24
முரசு 1156

## போராடும்



## நாளிதழ்கள்






## மன உணர்வுகளை பொருட்படுத்தாத விடுதலைப்புலிகள்...



## திருடன், கொலைகாரன் எல்லோருக்குமா ஆஜராகவேண்டும்?

## கூட்டமைப்புக்கு



## "கிளீன் செக்-மேட்"! வைத்தது பேரவை



## ஓம் இந்துக்கள் எதைச் செய்யலாம் எதைச் செய்யக்கூடாது!

10. வாடிப்போன, அழுகிப்போன, பூச்சிகள் கடித்த மலர்களை உபயோகிக்கக் கூடாது.

11. அன்றலர்ந்த மலர்களை அன்றைக்கே உபயோகப் படுத்த வேண்டும்.

12. ஒரு முறை இறைவன் திருவடிகளில் சமர்ப்பிக்கப்பட்ட மலர்களை எடுத்து, மீண்டும் அர்ச்சனை செய்யக் கூடாது. வில்வம், துளசி ஆகியவற்றை மட்டுமே மறுபடியும் உபயோகிக்கலாம்.

13. தாமரை, நீலோத்பலம் போன்ற நீரில் தோன்றும் மலர்களை தடாகத்திலிருந்து எடுத்த அன்றைக்கே உபயோகப்படுத்தவேண்டும் என்ற விதி இல்லை.

14. வாசனை இல்லாதது: முடி, புழு ஆகியவற்றோடு சேர்ந்திருந்தது. வாடியது: தகாதவர்களால் தொடப்பட்டது. நுகரப்பட்டது: ஈரத்துணி உடுத்திக் கொண்டுவரப்பட்டது. காய்ந்தது. பழையது. தரையில் விழுந்தது ஆகிய மலர்களை அர்ச்சனைக்கு உபயோகப்படுத்தக்கூடாது.

15. சம்பக மொக்குத் தவிர, வேறு மலர்களின் மொட்டுகள் பூஜைக்கு உகந்தவை அல்ல.

16. மலர்களை கிள்ளி பூஜிக்கக்கூடாது. வில்வம், துளசியைத் தளமாகவே அர்ச்சிக்கவேண்டும்.

ஆன்மீகம்

## பணிவே உயர்வு தரும்!

கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தை எப்படிப்பட்டது என்பதை நாம் பார்த்தால், வானத்தையும் பூமியையும் படைத்து அதில் சகல அதிகாரமுடைய கிறிஸ்து இயேசு, தாம் தேவனுடைய குமாரனுமாயிருந்தும், தம்மை தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷர் ரூபமாய் காணப்பட்டு, மரணப்பரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, தம்மை தாமே தாழ்த்தினார்.

(பிலி 2 : 7-8)

இன்று இயேசு கிறிஸ்து நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார். மனிதர்களாகிய நமக்கு நேரிட்ட எல்லாத் துன்பங்கள், துயரங்கள், வேதனைகள் அவருக்கும் நேரிட்டது. அந்நேரங்களில் தம்மை தாழ்த்தி இயேசு ஜெயம் பெற்றார். அதுபோல அவராலே அநேக அற்புதங்கள், அதிசயங்கள், அடையாளங்கள் நடந்தது. அதிலும் தம்மை உயர்த்தியோ அல்லது பெருமைப்படுத்திக்கொள்ளவோ இல்லை. எல்லா நிலையிலும் தம்மை தாழ்த்தினார். எல்லா காரியத்திலும் ஜெயம் பெற்றார். அதுபோல நாமும் தாழ்மையாக, பொறுமையாக இருந்து ஜெயம் பெறுவோம். கிறிஸ்து இயேசுவின் சிந்தையில் நிலைத்திருப்போம்.

**D. ஜேசுராஜா, பொகவந்தலாவ.**

## அநாதைகள் யார்?

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அலி ( ரலி) கூறுகிறார்கள்: குழந்தைகள் பருவமெய்தியபின் அநாதை என்பது இல்லை.

(அபூதாவூது)

அநாதை எனப்படுவோர் தந்தையை இழந்த சிறுவரும் சிறுமியுமாவார். அவர்களுக்கு சொத்துக்கள் இருந்தபோதிலும் சரியே.

அவர்கள் வசதியற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கு உணவு, உடைக்கு உதவுவதும், அவர்களது உடல்நலம் பேணுவதும், அவர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சி வழங்கிவருவதும் அவர்களுக்கு உபகாரம் செய்துவருவதைச் சேர்ந்தவைகளாகும்.

**முஹம்மது ஹஸனி, கல்முனை -07**




# தேன் கிண்ணம்

## காதலின் வேதனை

என் இதயத்தில் நீ இல்லை
என்றால்....
என் உடலில் உயிர்
இல்லை.

என் அன்பின் வேதனையின்
விஸ்பரூபமே
ஏன் என்னை
உன் அழகிய இதயஅம்பால்
என் இதயத்தை காயப்படுத்துகிறாய்
நீ என்னை
வேதனைப்படுத்துவதைவிட
நீ என்னை தீ இட்டு
பஸ்பமாக்கிவிடு
என் உயிர் வலிக்கிறது!

ஏன் என்னைக் காதலித்தாய்
ஏன் என்னைக் காயப்படுத்துகிறாய்
முடிவுதான் என்ன?
மரணமா சொல் உனக்காக
அதுவும்
எனக்கு சுகமே.

**யுனைதீன் பசீர்,**
**கிண்ணியா – 06**



## காதலர் இருவர்

ஒருவரை ஒருவர்
காதலிக்கும் வரை - அந்தக்
காதலன் காதலி - இருவர்
இருவர்கள் தான்!
காதல் பலத்தில்
ஆளையாள் ·
கட்டுண்டு வாழ்ந்தாலும்
காதல் கல்யாணம்
எதிர்ப் போர்(க்) களத்தில்
வெட்டுண்டு மாய்ந்தாலும் - அந்த
இருவரும் ஒருவரேதான்!

இருவர் இருவராய் இருப்போர்
காதலையும்
வெல்லமுடியாது, ஆளையாள்
கல்யாணமுஞ்
செய்யவும் முடியாது!

காதலிப் போர் - ஒரு
உறவாக வேண்டாம்! - உரிமை
உயிராக வேண்டும்! - அந்த
உயிரே உணர்வாகவேண்டும்.

இதற்குக் கோழிக் காதல்
குரங்குக் காதல்
பன்றிக் காதல்
பயனளியாது!

இறையவனின் இதயம் - அதில்
உறைவது அன்பு
உடலுக்கு அழிவு
உயிருக்கு இல்லை என்பவரே
அக்காதலர் இருவர்!
அரசனென்றால் அவன்
இறைவனன்று
ஆளவந்தால்
இறைமை கொண்டு...
அரச நிதி பொது
அதுபோலே
நீதியும் பொது.

**பாண்டியூர் பொன்.நவநீதன்**



**உன்னை எண்ணாமல் இருந்த போது**
**கனமாக நான் இருந்ததில்லை**
**உன்னை எண்ணிவிட்ட போது**
**காதலால் அது கனக்காமலுமில்லை.**
**உன்னை தேடாமல் நான்**
**இருந்த போது**
**சுயமாக இருந்தேன் – என்னிடம்**
**நெருங்கி நீ வந்த போது**
**பலமாகத் துடித்தேன்.**
**நெருங்காது நீயும் இருந்துவிட்டால்**
**இயங்காமல் தான் – நானும்**
**போய்விடுவேன்.**
**எதற்காகத்தான் என்னிலே**
**இப்படி ஓர் இயக்கம்**
**எடுத்துச் சொல்லிவிடவோ**

**எனக்கேன் இந்த தயக்கம்**
**தெரிந்திருந்தும் உன்னில் ஏன்**
**இதுவரை சுணக்கம்**
**சொல்லிவிடுவாயோ எனக்கும்**
**இதற்கொரு விளக்கம்**
**இத்துடன் எழுதுவதில் நிறுத்தம்**
**இப்படிக்கு என் இதயம்.**

## இப்படிக்கு என் இதயம்

*இளம்பிறை யோகன்,*
*புத்தளம்.*

## காதல்

**சேர்ந்திருந்த காலங்கள்**
**சேர்த்து வைக்கத் தவறியது**
**பிரிந்தபின் அருமை தெரிந்தது**
**பின்னாகத்தான் நேசித்தேன்**
**நான் கூடுதலாக உன்னை!**

**ஒழுப் பிடித்த பொழுதுகளும்**
**கூடிப்பழகித்த நேரங்களும்**
**பிரிவு சொல்லாதே பிரிந்து**
**போன பருவ காலங்களும்**
**பெறுமதியற்று போன வாழ்வும்**

**இனிவரும் என்று எண்ணுவதே**
**இனிமையானதாகும்; வரப்போவதில்லை**
**சென்றகாலங்கள் திரும்பாதென**
**அறிந்தும் ஏழைமனம் ஏற்குதில்லை!**

மண்டைதீவு மதிநூன்


தினமுரசு பத்திரிகையில் உங்கள் ஆக்கங்களும் வரவிரும்புவர்கள் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி.

**தினமுரசு வாரமலர்,**
**மாநகரசபை கட்டடம்,**
**3 ஆம் மாடி,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தினமுரசு வாரமலரில் உங்கள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கத் தொடர்பு கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு: 0214503262, 0774150799**




### பெப்ரவரி 11

பிரார்த்தனை செய்யுங்கள்! கடவுளுக்கு அருகே நீங்கள் செல்லலாம். ஆனால், சேவை செய்து பாருங்கள். கடவுள் உங்கள் அருகில் வருவார்.

**அன்னை திரேசா**

# நிலைமாறு கால நீதி வேண்டாம் பரிகார நீதியே வேண்டும்!

**இலங்கைக்கு வருகைதந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹீசேன், கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட உறவு களை தேடிக்கண்டறியும் வடக்கு, கிழக்கு மாகாண சங்கங் களின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.**

இந்த சந்திப்பின்போது, கையளிக் கப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பான உள்நாட்டு செயல் முறைகளிலும், உள்நாட்டு ஆணைக்குழுக்களிலும் தாம் நம்பிக்கை இழந்தவர்களாக உள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

"நிலைமாறு கால நீதி வழங்கல்" செயல்பாட்டு முன்னெடுப்புகள் யாவும் இலங்கை அரசாங்கத்தை பாதுகாக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் அவர்கள் ஆணையாளருக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, பரிகார நீதியே தமது காயங்களுக்கு சிறந்த நிவாரணியாக அமையும் என்று தாங்கள் உணர்வதாகவும் சங்கங்களின் பிரதி நிதிகள் ஆணையாளர் சயிட் அல் ஹீசேனிடம் வலியுறுத்தினர்.

ஆட்கடத்தல் மற்றும் தடுத்து வைத்தல் சம்பவங்களினால் பாதிக் கப்பட்டுள்ள குடும்பங்களின் சமகால பிரச்சினைகள், குறைகள், தேவைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்ட ஆணையாளர், தம்முடன் நேரடி தொடர்பிலிருக்குமாறுகூறி தனது



விருந்தினர் அட்டையை சங்கங்களின் பிரதிநிதிகளிடம் இதன்போது வழங்கினார்.

ஆணையாளருடனான சந்திப்பில், கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் வடக்கு, கிழக்கு மாகாண சங்கங்களின் சார்பில் திருமதி ஜெ.நாகேந்திரன், திருமதி அமலி, திருமதி செல்வராணி ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமருக்கு நன்றி தெரிவித்தார் சரத் பொன்சேகா

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு, முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நன்றி தெரிவித்துள்ளார். மக்களுக்கு சேவையாற்றுவதற்கு நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்கியமைக்காக பிரதமர் உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவிற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொண்டு தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றிற்கு சென்று, மக்களுக்கு சேவையாற்ற முடிந்தமை மகிழ்ச்சியளிக் கின்றது என தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியின் ஊடாக மக்களுக்கு சிறந்த முறை யில் சேவையாற்ற திட்டமிட்டுள்ளதாக சரத் பொன்சேகா கொழும்பு பத்திரிகை யொன்றுக்கு தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு, சரத் பொன்சேகாவிற்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்குவது குறித்து எடுத்த தீர்மானம் தொடர்பில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

## புலம்பெயர் தமிழர்களின் அபிப்பிராயங்களும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்

### டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கைக்கு பிரதமர் ரணில் இணக்கம்



புதிய அரசியலமைப்பு திருத்தச் சட்டத் திற்கு தமிழ் மக்களின் அரசியல் உரிமை கள் தொடர்பாக பரிந்துரைகளை முன் வைப்பதற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்குள்ளேயும் கட்சிக்கு வெளியேயும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது. அந்தவகையில் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளை யும் பெற்றுக்கொள்வது அவசியமாகும் என செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

உலக நாடுகள் எங்கும் தமிழ் மக்கள் பரந்து வாழ்ந்தாலும் குறிப்பாக அமெரிக்கா இலண்டன், சுவிஸ், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே மற்றும் இந்தியா உட்பட்ட ஏனைய நாடுகளிலும் இருக்கும் கட்சியின் அமைப்பாளர்களுக்கு விடுத்துள்ள உட்சுற்று அறிக்கையில் மேலும் தெரிவித் துள்ளதாவது, இலங்கையில் நடைபெற்ற யுத்தம் மற்றும் வன்முறைகள் காரணமாக உலக நாடுகளெங்கும் எமது உறவுகள் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள். அவர்கள் வாழும் நாடுகளில் அந்த நாட்டு அரசுகள் சிறுபான்மை இனங்களுக்கு எவ்வாறு பகிர்ந்து வழங்கியுள்ளன என்பதையும், சமஷ்டி முறைமையின் பிரயோகங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பது தொடர்பாக வும் ஆராயவேண்டும்.

எனவே துறைசார் நிபுணர்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் ஒன்றிணைத்து விரிவான கலந்துரையாடல்களைச் செய்து புதிய அரசியலமைப்புத் திருத்தத்தில் இணைப்பதற்கான வரைபுக்கு அவர்களின் ஆலோசனைக்ளையும் பரிந்துரைகளையும் அனுப்பிவைக்குமாறும் குறிப்பிட்டுள்ள செயலாளர் நாயகம் அவர்கள் புதிய அரசியலமைப்புத் திருத்தத்திற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் முன்வைக்கப்படுவதற்கு அரசியல் வரைபைத் தயாரிப்பதற்காக ஐவரைக் கொண்ட குழுவொன்றை அமைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதிய அரசியலமைப்பு திருத்தத்திற்கு பொது மக்களின் அபிப்பிராயங் களைப் பெற்றுக்கொள்வதற்கான குழுவிடம் (public Representations Commitee on Constitutionel Reforms ) புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களும் அவர்கள் வாழும் நாடுகளிலுள்ள எமது தூதரகங்கள் ஊடாக இக்குழுவை தொடர்புகொண்டு காணொளி ஊடாக தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு தேவையான வசதி- களை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களிடம் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கோரிக்கை விடுத்ததை பிரதமர் அவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளதோடு அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும் என்றும் கூறியிருக்கின்றார். எனவே இந்த வாய்ப்பையும் வசதியையும் எமது மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி புதிய அரசியலமைப்புக்கான தனது அரசியல் பரிந்துரை வரைபை விரைவில் சமர்ப்பிக்கும் என்றும் கட்சி அமைப்பாளர்களுக்கான தனது உட்சுற்று அறிக்கையில் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா ஆணையாளர் இலங்கை வந்த காரணத்தை தெளிவுபடுத்தும் விமல்



ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கை யில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை கண்காணிப்ப தற்காகவே ஐ.நா ஆணையாளர் தற்போது இலங்கைக்கு வந்துள்ளார் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், போர்க்குற்றம் தொடர்பில் முற்றாக உள்நாட்டு விசாரணை மாத்திரமே முன்னெடுக்கப்படவேண்டும் என்பதற்காவே, கடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிக்கு மக்கள் ஆணை வழங்கப்பட்டது. சர்வதேச நீதவான்கள், சர்வதேச வழக்கறிஞர்கள், சர்வதேச கண்காணிப்பாளர்கள், சர்வதேச நிபுணர்கள் என முற்றுமுழுதாக சர்வதேசமாக்கப்பட்டு இராணுவத்தினருக்கு எதிராக விசேட நீதிமன்றம் ஒன்றை அமைப்பது எப்படி உள்நாட்டு விசாரணையாகும்? உள்நாட்டு விசாரணை பற்றி ஆராய்வதற்காகவா ஐ.நா ஆணையாளர் இலங்கைக்கு வந்துள்ளாரென நாம் இப்போது ஜனாதிபதி மைத்திரியிடம் கேட்கின்றோம்.

ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பதை கண்காணிப்பதற்காகவே ஐ.நா ஆணையாளர் தற்போது இலங்கைக்கு வந்துள்ளார்.

எமது நீதிமன்றக் கட்டமைப்பு பல வருட கால அனுபவம் பெற்றது. அதில் ஏதும் குறை பாடு இருந்தால் அதனை நிவர்த்திக்க இந்த அரசாங்கத்தால் முடியும். எதற்காக இங்கு சர்வதேச நீதிமன்றத்தை அமைக்கின்றனர்? நாம் இந்த தருணத்தில் ஜனாதிபதிக்கு ஒரு சவாலை விடுக்கின்றோம். அமைச்சர் மங்கள சமரவீர ஜெனீவாவில் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாட்டில் ஜனாதிபதிக்கு பங்கு இல்லையென்றால், ஐ.நா ஆணையாளர் இலங்கை வந்துள்ளநிலையில் நீங்கள் முன்னர் குறிப்பிட்ட தேசிய பொறிமுறை தொடர்பான கருத்தை மீண்டும் தெளிவுபடுத்தவேண்டும். இதில் வெளிநாட்டு பரிசோதகர்கள் இருக்கிறார்களா, சட்டத்தரணிகள் இருக்கிறார்களா, நீதிபதிகள் இருக்கிறார்களா, இது வெளிநாட்டவர்களின் தேவைக்காகவா அமைக்கப்படுகிறது அல்லது இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்திற்கு இணங்கவா செயற்படப் போகின்றது என்பது பற்றி தெளிவாகக் கூறவேண்டும் எனவும் விமல் வீரவன்ச கேட்டுக்கொண்டுள்ளார்.

## தென்னாசிய விளையாட்டு போட்டியில் இரண்டாம் இடத்தில் இலங்கை!




தற்போது இந்தியாவில் நடைபெற்று வரும் தெற்காசிய விளையாட்டு போட்டி களில் இலங்கைக்கு எட்டு தங்கப் பதக்கங்கள் கிடைத்துள்ளன. மேலும் 18 வெள்ளி மற்றும் 14 வெண்கலப் பதக்கங் களும் கிடைத்துள்ளன. இதன்படி தெற்காசிய விளையாட்டு போட்டிகளில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது. இந்த போட்டிகளில் முதலாம் இடத்தில் உள்ள இந்தியா, 30 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது. அத்துடன், 12 வெள்ளிப் பதக்கங்களையும், 3 வெண்கலப் பதக்கங் களையும் வென்றுள்ளது.

## அட்டாளைச்சேனை அந்–நூர் மகா வித்தியாலயத்தில் தேக ஆரோக்கிய நிகழ்வுகள்

ஜனாதிபதி அவர்களின் ஆலோசனைக்கு அமைய தேகஆரோக்கியத்தை மேம் படுத்தல் தேசிய வாரத்தினை முன்னிட்டு அட்டாளைச்சேனை கோட்டக் கல்வி அலு- வலகமும், அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலயமும் இணைந்து நடாத்திய உடற்பயிற்சிகள் மற்றும் விளையாட்டு போட்டிகள் அந்-நூர் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

அந்-நூர் மகா வித்தியாலய அதி- பர் ஏ.எல்.கே முஹம்மட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச் சேனை கோட்டக் கல்விப் பணிப்பளர் எம்.ஏ.சீகஸ்ஸாலி, அட்டாளைச்சேனை மாவட்ட வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி ஏ.எம் இஸ்மாயீல் மற்றும் ஆசிரியர் களும் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். இதன்போது ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்குடன் ஒழுங்குசெய்யப்பட்ட உடற் பயிற்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## புதிய சாதனை

கிளிநொச்சி மாவட்ட மட்ட பாடசாலை களுக்கிடையிலான 2016ஆம் ஆண்டிற் கான அரை மரதன் ஓட்டத்தில் உருத்திர புரம் விளையாட்டுக்கழக வீரன் இளங்கீரன் அனுஜன் உருத்திரபுரம் மகா வித்தியாலயம் சார்பில் கலந்துகொண்டு முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்டதுடன் மாவட்டத்தில் இதுவரை இருந்த சாதனையை முறியடித்துள்ளார். இதுவரை 1 மணித்தியாலமும் 18 நிமிடங்களும் இருந்தநிலையில் இவர் 1 மணித்தியாலமும் 15 நிமிடங்களில் குறித்த தூரத்தினை அடைந்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

## அணித்தலைமையை இழக்கும் அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலிய இருபதுக்கு - 20 அணியின் தலைவர் ஆரொன் பின்ச், தனது அணித்தலைமையைப் பொறுப்பை, டெஸ்ட், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் தலைவர் ஸ்டீவன் ஸ்மித்திடம் இழக்கவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அவர் அவ்வாறு இழப்பாராயின், அணியில் அவரது இடமும் கேள்விக்குள்ளாகவுள்ளது. தற்போது காயமடைந்துள்ள பின்ச், இந்தியாவில் இடம்பெறவுள்ள இருபதுக்கு - 20 உலகத் தொடருக்கு முன்னதாகக் குணமடைந்து விடுவார் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், நாளை அறிவிக்கப்படவுள்ள அவுஸ்திரேலியக் குழாமில், அணித் தலைமையை அவர் இழப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

TOPAZ
CUSTOM TAILORS
பெண் வேலையாட்கள் தேவை
எமது கடைக்கு சல்வார், சாறி பிளவுஸ் தைப்பதற்கு பெண் வேலையாட்கள் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்:-
T.P No -021 222 4643, 0769250195
கஸ்தூரியார் றோட், 01 ஆம் மாடி
புதிய மாநகரசபை கட்டிடடத் தொகுதி.

தினமுரசு வாரமலர்
கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811, 0214503262
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## வருகையின் பின்னணியில் வசந்தம் வருமா...?

நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த மக்களிடம் ஊடகங்கள் ஹுசைனின் வருகை தொடர்பாக கருத்துக் கேட்டபோது, "இப்படிப் பலர் வந்தார்கள் பல உறுதிமொழிகள் தந்தார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. இவரை நம்புகின்றோம் நடக்குமா என பொறுத்திருந்து பார்ப்போம்" என்றனர். நல்லாட்சி எனும்பெயரில் நாலு விடயங்கள் அரங்கேறினாலும்கூட சர்வதேச போர்க்குற்ற விசாரணை எனும் விடயத்தில் கொடுத்த வாக்குறுதியில் இருந்து எடுத்த முடிவுகள்வரை பாதிக்கப்பட்ட மக்களிற்கு நீதி கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை.

இளைத்த குற்றத்திற்கு எதிராக குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டியது ஒருபுறமிருக்க நீதியின்முன் இனஅழிப்பிற்கு ஒரு நியாயம் கிடைக்கவேண்டும் என்பதே இங்கு முக்கிய கருப்பொருளாகும். இதனைப் பல வழிகளில் அவ்வினங்களிற்கு ஐ.நா மனித உரிமைக் காப்பகம் வழங்கலாம். குற்றவாளிகளைத் தண்டிப்பதனூடாக மீண்டும் இனவாதம் துளிர்விட்டு தொடர்சந்ததிகளை அது பாதிக்குமென்றால் அவ்வினங்களின் எதிர்கால சந்ததிகளிற்கு வேறு வழிமுறைசார் தீர்வுப் பொறிமுறைகளிற்கூடாக நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க அரசை வலியுறுத்தவேண்டும். ஐ.நா.வின் தீர்ப்பிற்கு அமைவாக குற்றவாளிகளைத் தண்டிக்க நாட்டின் இறைமை இடங்கொடுக்கவில்லையானால் அந்த இறைமைக்குள் தலையிட்டு மாற்றுத்தீர்வினை நிலைநாட்ட ஐ.நா.விற்கு உரிமை உண்டல்லவா?.

சர்வதேச தலையீடு வேண்டாம் என ஐ.நா ஆணையாளருக்கு மஹா நாயக்கர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பில் சர்வதேச விசாரணை பொறிமுறை அவசியமில்லையென, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் செயிட் அல் ஹுசைனிடம் அஸ்கிரிய மற்றும் மல்வத்து மஹாநாயக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

தம்மை படுகொலை செய்யவந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னித்து விடுதலை அளித்தமையானது, நாட்டின் நல்லிணக்க செயற்பாட்டிற்கு சிறந்த மாதிரியென, இதன்போது ஐ.நா ஆணையாளருக்கு மல்வத்து மஹாநாக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரர் தெரிவித்தார். அத்தோடு, நாட்டின் மூவின மக்களும் ஒன்றுபட்டு செயற்படுவதாகவும், நல்லிணக்க செயற்பாடுகள் மிகச் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் ஐ.நா ஆணையாளர் செயிட் அல் ஹுசைனுக்கு மல்வத்து மஹாநாயக்கர் மேலும் தெரிவித்தார். மறுபுறத்தில் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு நீதிமன்ற கட்டமைப்பை ஏற்றுக்கொள்வதாக விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செய்யித் ராத் ஹுசைனின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் விமல் வீரவன்ச மேற்குறித்த கருத்தை வெளியிட்டுள்ளதாக பி.பி.சி. செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் போர்க்குற்றங்கள் நடைபெறவில்லை என்றும், அதுதொடர்பான எந்தவொரு விசாரணையும் தேவையில்லை என்றும் வலியுறுத்திவந்த விமல் வீரவன்சவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஒன்று ஏற்பட்டு உள்ளதையே மேற்குறித்த கருத்து வெளிப்படுத்தியுள்ளது. தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள விமல் வீரவன்ச,

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பிரிவினைவாத சக்திகளின் தூண்டுதலுக்கு ஏற்ப நடந்துகொள்வதாக குற்றஞ்சாட்டியுள்ளார். அதற்கு ஏதுவாகவே வெளிநாட்டு நீதிபதிகளைக்கொண்ட விசாரணைக் கட்டமைப்பை அவர் வலியுறுத்துவதாகவும் தெரிவித்துள்ளார். எனவே இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணைக் கட்டமைப்பு மூலமாக மட்டுமே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் விமல் வீரவன்ச வலியுறுத்தியுள்ளார்.

வேறொரு துருவத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் இலங்கை விஜயமானது மிகப்பெரிய நகைச்சுவை என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார். இலங்கையில் நடைபெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் சம்பந்தமாக ஐக்கிய நாடுகளின் வழிநடத்தலில் நடத்தப்படும் விசாரணைகளுக்கு எதிராக கையெழுத்தும் பெறும் நடவடிக்கையின்போது அவர் இதனை கூறியுள்ளார்.

வடக்கு, கிழக்கில் தமிழர்களுக்காக தனியான நாட்டை உருவாக்க சுமார் 30 வருடங்கள் போரிட்டுவந்த விடுதலைப் புலிகள் அமைப்பு 2009ஆம் ஆண்டு மே மாதம் முற்றாக தோற்கடிக்கப்பட்டது. இந்த நிலையில், இலங்கை வந்துள்ள மனித உரிமை ஆணையாளரை சந்திக்க தமிழ்ப் போராளிகளின் ஆதரவாளர்களுக்கு மாத்திரம் ஆட்சியாளர்களால் இடமளிக்கப்படுவதாக கோத்தபாய ராஜபக்ச குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இலங்கைக்கு ஒரு நாள் விஜயம் மேற்கொண்டுவிட்டு இலங்கையின் நிலைமைகளை அவரால் புரிந்துகொள்ளமுடியாது. அவரை ஒரு தரப்பினர் மாத்திரமே சந்திக்கின்றனர். இறுதிக்கட்டப் போரில் போர்க்குற்றங்கள் நடக்கவில்லை எனவும் கோத்தபாய குறிப்பிட்டுள்ளார். இத்துடன் நல்லாட்சியின் தலைவர்கள்கூட சர்வதேச விசாரணையை நிராகரித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றிற்கெல்லாம் அப்பால் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் கருத்து வெளியிடும்போது இலங்கையின் சகல இன மக்களையும் சந்தித்து அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறியப்படும் என குறிப்பிட்டள்ளார்.

மனித உரிமை ஆணையாளர் தங்கியிருக்கும் கொழும்பு சினமன் கிரேண்ட் ஹொட்டலில் அவர் இதனை கூறியுள்ளார். இலங்கைக்கு வருகைதந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். சிலகாலமாக நான் இலங்கைக்கு விஜயம் செய்ய எதிர்பார்த்திருந்தேன். அரச அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த எண்ணியுள்ளேன்.

அதேபோல், நாட்டில் உள்ள சகல இன மக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து மக்களின் தேவைகள் தொடர்பில் அவர்களின் கருத்துக்களை கேட்டறிய எண்ணியுள்ளேன். அவர்களின்கூறும் அனைத்து விடயங்களை மிகவும் அமைதியாக கவனம் செலுத்தவிரும்புகிறேன். மேலும் அடுத்த சில தினங்களின் மிகவும் பலனளிக்கக்கூடிய சில பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள எண்ணியுள்ளேன் எனவும் மனித உரிமை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் தமிழ் தலைவர்களுடன் பேசிய அவர், தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் தொடர்பான சட்டரீதியான செயற்பாடுகளை துரிதப்படுத்தவேண்டுமே தவிர அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படக்கூடாது. போர்க்குற்றம், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் அல்லது பாரதூரமான குற்றங்களை செய்த நபர்களுக்கு மன்னிப்பு வழங்கும் பொது வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது.

மேலும் போதுமான சாட்சியங்கள் இல்லாதவர்களை விடுதலை செய்வதை ஐ.நா வரவேற்கிறது. சுமார் 200 தமிழ்ப் பிரிவினைவாதிகள் தற்போது சிறைகளில் உள்ளனர் எனவும் மனிதஉரிமை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

சிறையில் இருக்கும் இந்த கைதிகளை நிபந்தனையின்றி பொதுமன்னிப்பில் விடுதலை செய்யவேண்டும் என தமிழ் அரசியல் மற்றும் சிவில் அமைப்புகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் இவரின் கருத்து இவரின் வருகைக்குப்பின்னால் பேரதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளன.

இவ்வாறான ஒரு நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் இலங்கை வருகையானது தமிழர் தரப்பிற்கு வசந்தத்தைத்தருமா? என்பதுதான் இன்றுள்ள சிக்கல்களாகும்.




## பேரவையின் பெயர் சொல்லிப் போராடும் நாளிதள்கள்

காணாமற் போனோர் ஒரு புறம், கைதிகளின் விடுதலை மறுபுறம், இனப்பிரச்சினைத் தீர்வு இதற்கிடையில் தள்ளாடும் தரணத்தில் தனித்தேசியம் பேசி போராடுகின்றன குடாநாட்டின் உள்ளூர்ப் பத்திரிகைகள். வலம்புரி சங்கெடுத்து வாய் மணக்க ஊதுகின்றனர். சிலர், அஸ்தமனவேளையில் சூரியோதயம் தேடுகின்றனர். இதுவா பத்திரிகை தர்மம் மக்களின் தேவைகள் வெவ்வேறாக இருக்க ஊடகப் போராட்டம் இன்று யாழ் மண்ணில் தலைதூக்கியுள்ளது. இதனால் உண்மைகள் உருமாறி பொய்மைக்குள் பல போராட்டங்கள் இடம்பெறுகின்றது. இதனால் கட்சிக்குள்ளும் பல கலகலப்புக்கள் உருவெடுக்கின்றன.

தமிழ் தேசிய உணர்வு என்பது வேறு, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதித்துவம் என்பது வேறு. சிலர் மக்களின் தேசிய உணர்வை தன்னகத்தே வைத்து தமிழ் மக்களின் ஏகபிரதிநிதித்துவத்தை தொடர்ச்சியாக தாம் கைப்பெற்ற முயன்றுவருகின்றனர். இதை மாற்றவேண்டும். தமிழ் தேசியத்திற்கு வேறு பாதையுண்டு வேறு அரசியல் பயணமுண்டு என்பதை அடையாளப்படுத்துவதை தனது எதிர்கால அரசியல் குறிக்கோளாகக் கொண்டு தேர்தல் தோல்வியை அடுத்து செயற்பட்டவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் சுரேஸ் அணியின் தலைவரான சுரேஸ் பிரேமச்சந்தரன்.

இத்திட்டம் தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கத்தோடும், விக்னேஸ்வரனின் ஆதரவுடனும் சற்று உயிர்ப்புப் பெறுகின்றது என்பதை உணர்ந்த கூட்டமைப்பின் தலைமைகள் இதை முறியடிக்க பல வழிகளில் பல முயற்சிகள் எடுத்தனர். அதன் ஒரு முயற்சிப் பக்கத்தை தற்போது தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவிடம் விடப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் அவரின் முயற்சியால் பல நாடகங்களும் இன்று அரங்கேறுகின்றன.

தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து தமிழரசுக் கட்சி செயற்படுவதானால் தற்போது அதில் அங்கம்வகித்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி என்பவை வெளியேற்றப்பட வேண்டுமென நிபந்தனை விதித்துள்ளார் மாவை சேனாதிராசா.

தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் உள்ளிட்ட ஏற்பாட்டுக்குழுவொன்று தமது உத்தேச அரசியல் தீர்வு திட்ட வரைபு பற்றி மாவை சேனாதிராசாவை சந்தித்து விளக்கியுள்ளது. யாழ்.நகரின் மார்டின் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சி தலைமை காரியாலயத்தில் இச்சந்திப்பு நடந்துள்ளது.

அப்போது பேச்சுக்களில் பங்கெடுத்த மாவைதான் தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து செயற்பட பூரணவிருப்பம் மற்றும் ஆர்வம்கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

எனினும் தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட தலைமை இணைந்து செயற்படும் தனது விருப்பத்திற்கு கடுமையான முட்டுக்கட்டைகளையும் நெருக்குவாரங்களையும் போட்டுவருவதாகவும் மாவை-சேனாதிராசா கவலை வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக சீ.வி.கே.சிவஞானம், குலநாயகம் மற்றும் கனகசபாபதி போன்றவர்கள் அத்தகைய நெருக்குவாரங்களை தருவதாக தெரிவித்த மாவை இவர்களை புறந்தள்ளி பேரவையுடன் பகிரங்கமாக இணைந்து செயற்படமுடியாதுள்ளமைக்கு கவலையையும் தெரிவித்துள்ளார்.

பேரவையின் ஆரம்ப செயற்பாடுகளில் தமிழரசுக்கட்சியை இணைத்துக்கொள்ளாமை தொடர்பில் கேள்வியெழுப்பியிருந்த மாவை விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது வீட்டிற்கு பல தடவை வந்திருந்ததை நினைவுகூர்ந்ததுடன் இறுதி யுத்த கால சம்பவங்களை கேள்வியுற்று தனது மனைவி கண்ணீர்விட்டு கதறியழுததாகவும் சில நாட்கள் பட்டினியாக இருந்ததையும் நினைவுகூர்ந்து பேரவை பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தியாக சிந்தனைகளுடன் தாம் செயற்பட்டு வரும்நிலையில் புலம்பெயர் தமிழர்களிடையே தம்மை பற்றி விசமத்தனமான பிரசாரங்களை பேரவையுடன் தொடர்புடைய சிலர் செய்துவருவதாகவும் மாவை கவலை தெரிவித்துள்ளார்.

இதனிடையே விடுதலைப் புலிகள் தலைவர் இல்லையென தாங்களும் தங்கள் மனைவியும் கருதுகின்றீர்களாவென பேரவையினர் கேள்வியெழுப்பிய போது அவசர அவசரமாக மாவை அதனை மறுதலித்து உள்ளார்.

இதனிடையே மற்றொரு தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரது கட்சி பத்திரிகை அனைத்தையும் திரிபுபடுத்தி செய்திகளை வெளியிட்டமை தொடர்பில் பேரவையினர் மாவையிடம் சந்திப்பின்பின்னராக விசனம் தெரிவித்துள்ளனர்.

மறுபுறத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கட்சியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) உறுப்பினரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்திய கலாநிதி சி.சிவமோகன், அந்தக் கட்சியிலிருந்து விலகி இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்துகொண்டார்.

இதற்கான விண்ணப்பத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா ஏற்றுக்கொண்டார். இந்த நிகழ்வு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையகமான யாழ்.மார்டின் வீதியில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான இரா.சம்பந்தனின் 83ஆவது பிறந்தநாளன்று இந்த இணைவு இடம்பெற்றுள்ளது.

2013ஆம் ஆண்டு நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி சார்பில் சி.சிவமோகன் போட்டியிட்டு வெற்றி பெற்று இருந்தார். அதன்பின்னர் அந்தக் கட்சியின் மத்திய குழுவிலும் இணைந்திருந்தார். அதேவேளை கடந்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போதும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் சிவமோகன் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் சார்பிலேயே அவர் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். இவ்வாறானதொரு நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உத்தியோகபூர்வமாக அவர் இணைந்துகொண்டுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைவதற்கான விண்ணப்பத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவிடம் கையளித்தார். அதனைப் பரிசீலித்த அவர், கட்சியின் அங்கத்துவத்தை வழங்கினார். குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன், தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ்.குலநாயகம் ஆகியோருடன் கட்சி அங்கத்தவர்கள் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னணிகளெல்லாம் ஓர் அச்சப்பாட்டின் வெளிப்பாடு என்பதை எவரும் மறுக்க முடியாது. சுரேஸ் அணியினை கூட்டமைப்பில் இருந்து துரத்துவதும் அதன் செயற்பாட்டை முடக்குவதுமே இதன் பின்னணிகளாகும். இவ்வாறு காலத்திற்குக் காலம் கட்சிகளின் முரண்பாடுகளும் கட்சிசார் ஊடகங்களின் முரண்பாடுகளும்தான் தமிழர்களிற்கு மிஞ்சப் போகின்றதே தவிர தெரிவுகள் திசை மாறும்வரை தீர்க்கமாக எதுவும் இடம்பெறப் போவதில்லை.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தமிழ் பத்திரிகை ஆசிரியருக்கு மரண அச்சுறுத்தல்!

அன்பார்ந்த நம் வாசகர்களே! முன்னணி தமிழ் பத்திரிகை ஆசிரியருக்கு மரண அச்சுறுத்தல் என்கிற தலைப்பில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து வாஷிங்டனில் உள்ள அமெரிக்க வெளியுறவு தலைமை காரியாலயத்துக்கு அனுப்பப்பட்ட இரகசிய இராஜதந்திர ஆவணத்தை இம்முறை பார்ப்போம்.

தமிழ் அரசியல் ஆய்வாளர் தர்மரட்ணம் சிவராம் கடந்த 29 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட நிலையில் தமிழ் ஊடகவியலாளர்களில் முக்கியமான இன்னொருவரும், முன்னிலையில் உள்ள தமிழ் தின சரி பத்திரிகையான வீரகேசரியின் பதில் பொறுப்பாசிரியருமான வடிவேல் தேவராஜ் இனம்தெரியாத நபர்களிடம் இருந்து மரண அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகிவருவதாக முறைப்பாடு செய்துள்ளார்.

சிவராம் படுகொலை இடம்பெற்று ஒரு மாதம் ஆகிவிட்டநிலையிலும் பொலிஸாரால் கொலையாளிகளை அடையாளம் கண்டுபிடிக்கமுடியாத நிலையில் மிரட்டியவர்கள் யார்? என்பது தேவராஜுக்கு தெரியாது. தேவராஜின் பாதுகாப்பு தொடர்பாக எல்லைகள் அற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டஒழுங்கு அமைச்சருக்கு இருதினங்களுக்கு முன்னர் கடிதம் சமர்ப்பித்தது.

**புலி அனுதாபி**

அதிக வாசகர்களை கொண்ட தமிழ் பத்திரிகை வீரகேசரி. நடுநிலை யானது என்று பொதுவாக கொள்ளப் படுகின்றது. இருப்பினும் கடந்த பெப்ரவரி மாதத்தில் இருந்து ஏதோ ஒரு விதத்தில் புலி அனுதாப பத்திரிகை ஆகி உள்ளது. இது புலி-களை வெளிப்படையாக ஒருபோதும் விமர்சிப்பதில்லை. அத்துடன் எந்தவொரு அரசியல் கட்சிக்கு சார்பாகவும் வெளிப்படையாக செயற்படுவதில்லை. இருப்பினும் மாற்று தமிழ் குழுக்களின் அறிக்கைகளையும் பிரசுரிக்கின்றது. உதாரணமாக ஈழமக்கள் ஜனநாயக கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி ஆகியவற்றின் அறிக்கைகளை கூறலாம்.

புலிகள் இயக்க அனுதாபி என்று நண்பர்கள் மத்தியில் தேவராஜ் அறியப்படுகின்றார். இவருக்கு புலிகள் இயக்க சிரேஷ்ட உறுப்பினர்களுடன் நல்ல தொடர்பு காணப்படுகின்றது. ஆயினும் வீரகேசரியில் இவரின்

**ஊடுருவி**

எழுத்துக்கள் மிகவும் நடுநிலை யானவை. இவரின் எழுத்துக்கள் புலிகளை வெளிப்படையாக ஒரு போதும் விமர்சிப்பதில்லை. அதே நேரம் பந்தம் பிடிப்பதும் இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக இவர் சிவராமின் வகுப்பறை தோழனும், நெருக்கமான நண்பனும் ஆவார். இவர் நேற்று பொலிஸ் அத்தியட்ச ருக்கு முறைப்பாடு மேற்கொண்டார். இனம் தெரியாத நபர்கள் இவரின் வீட்டுக்கு கடந்த 29, 30 ஆம் திகதி களில் தொலைபேசி அழைப்பு மேற்கொண்டு தமிழ், சிங்கள மொழிகளில் மிரட்டினர் என்பதே முறைப்பாடு. தேவராஜ் அப்போது ஆஸ்திரேலியாவில் இருந்தார். தேவராஜின் மருமகள்தான் தொலைபேசியை எடுத்துள்ளார். தேவராஜ்தான் அடுத்து கொல்லப் படுவார் என்று அச்சுறுத்தியுள்ளனர்.

காலம் சென்ற சிவராமின் வீட்டுக்கு கடந்த 01 ஆம் திகதி சென்ற தேவராஜ் மாலை 3.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை அங்கு காணப்பட்டார் என்று கூறினார். வீட்டுக்கு வெளியில் கிறே கலர் இன்ரர்கூலர் ஜீப் வண்டி ஒன்றை கண்டார் என்றும் இதன் ஜன்னல்கள் மூடப்பட்டு இருந்தன என்றும் கூறிய தேவராஜ் இன்னொரு விடயத்தையும் சொன்னார். சிவராம் கடத்தி செல்லப் பட்டதாக சொல்லப்படுகின்ற வாகனம் இதே மாதிரியானதுதான் என்றார். இதேநேரம் மறுநாள் நள்ளிரவு 12.30 மணிக்கும் அதிகாலை 2.30 மணிக்கும் இடையில் தேவராஜ் சொந்த வீட்டு கேற்றுக்கு வெளியில் எஞ்சின் இயக்கப்பட்டநிலையில் இதே கிறே கலர் வாகனத்தை கண்டார் என்றும் குறிப்பிட்டார்.



**சிங்கள தமிழ்**

இதே நேரம் கடந்த 01, 02 ஆம் திகதிகளில் இவரின் அலுவலக நேரடி தொலைபேசி இணைப்புக்கு அழைப்பு விடுத்து அச்சுறுத்தினார்கள் என்றும் தேவராஜ் சொன்னார். ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் அச்சுறுத்தினார்கள். இதனால் அச்சம் அடைந்த நிலையில் நாட்டைவிட்டு வெளியேறி கனடாவில் சகோதரிகளின் வீட்டில் கடந்த 06 ஆம் திகதி முதல் கடந்த 21 ஆம் திகதிவரை தங்கி இருந்தார் என்று தேவராஜ் விளக்கினார். ஆனால் நாட்டுக்கு திரும்பி வருகின்ற வரை மிரட்டல் அழைப்புக்கள் வரவே இல்லை என்றார்.

தேவராஜ் மனம் உடைந்து, மிரண்டு காணப்படுகின்றார். சிவராமை ஆதரித்த காரணத்தால் கொல்லப் படுவார் என்று சொல்லி மிரட்டினார்கள் என்று இவர் எமது தூதரக அதிகாரிகளுக்கு கூறினார். தேவராஜ் அலுவலகத்தில் இருந்த போது மூன்று தினங்கள் தொடர்ந்து அழைப்புவிடுத்து மிரட்டினர் என்று கூறப்படுகின்றது. ஆனால் மிரட்டல் காரர்கள் யாழ்ப்பாண தமிழிலோ, மட்டக்களப்பு தமிழிலோ பேசி இருக்கவில்லை. மாறாக சிங்கள தமிழில் பேசினர் என்று சொல்லப் படுகின்றது. சிவராமுக்கும் தேவராஜுக்கும் இடையிலான நெருக்கமான நட்பு கடந்த 06, 07 வருடங்களுக்கு மேற்பட்டதாகும்.

கருணா குழுவை தேவராஜ் விமர்சித்துள்ளார். ஆனால் சிவராம் படுகொலையாளிகள் அல்லது இம்மிரட்டல் பேர்வழிகள் கிழக்கு புலிகள் அல்லர் என நம்புகின்றார் என்று தேவராஜ் சொன்னார். மாறாக சிவராம் படுகொலைக்கு பின்னால் அரசாங்கத்தின் பங்காளி கட்சியான ஜே.வி.பியோ, அரச புலனாய்வு பிரிவோ இருக்கலாம் என்றார்.

தமிழ் ஊடகவியலாளர்களில் அநேகர் கலக்கத்தில் உள்ளார்கள். இவருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் களை தொடர்ந்து பல ஊடகவிய லாளர்கள் எழுத்துக்களை சுய தணிக்கைகளுக்கு உட்படுத்தி உள்ளனர். ஆனால் சுயதணிக்கை செய்யவேமாட்டார் என்று தேவராஜ் விபரித்தார்.

அண்மைய மிரட்டல்களுக்கு பிற்பாடும் இவர் வீரகேசரி வார வெளியீட்டில் சிவராம் ஞாபகார்த்த கட்டுரையை எழுதி வெளியிட்டார். இருப்பினும் நாட்டைவிட்டு வெளியேறி சென்று பாதுகாப்பு தேடுங்கள் என்று பொலிஸ் அதிகாரி நட்புடன் கூறினார் என்று தேவராஜ் குறிப்பிட்டார். இதன் அர்த்தம் பொலிஸாரால் இவரை பாதுகாக்கமுடியாது என்பதே ஆகும் என்றார் தேவராஜ்.

**கனடா விசா**

ஆனால் தூதரக அதிகாரிக்கு வீரகேசரியின் செய்தி ஆசிரியர் இரத்தினசபாபதி பிரபாகரன் கூறிய விடயம் முரண்பாடானது ஆகும். உண்மையிலேயே தேவராஜுக்கு அச்சுறுத்தல் உள்ளது என்று உறுதிப்படுத்தி சொல்லமாட்டார் என்று பிரபாகரன் கூறினார். கனடாவுக்கு அரசியல் தஞ்சம் பெற்று சென்று குடியேற தேவராஜ் வகுத்த தந்திரமாக இது இருக்கலாம் என்றார். தேவராஜ் கனடாவில் தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு வேலை செய்ய விசாவுக்கு விண்ணப்பித்து விசா நிராகரிக்கப்பட்டார் என்று பிரபாகரன் சுட்டிக்காட்டினார்.

ஆனால் தேவராஜுக்கு விடுக் கப்பட்ட அச்சுறுத்தல் மிகவும் பார தூரமானதுதான் என்று இன்னொரு சிரேஷ்ட ஊடகவியலாளரான லூசியன் ராஜகருணநாயக்க கூறினார். சிவராமின் நெருக்கமான நண்பர்களில் தேவராஜும் ஒருவர். சிவராமின் கட்டுரை ஒன்று கடந்த மாதம் 24 ஆம் திகதி வீரகேசரி ஞாயிறு பத்திரிகையில் வெளிவந்தது. இதில் நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கடுமையாக விமர்சிக்கப்பட்டு இருந்தார். அத்துடன் சமாதான முன்னெடுப்புகளும் பொதுவாக விமர்சிக்கப்பட்டு இருந்தன. மிரட்டல் அழைப்புக்கள் தேவராஜுக்கு வந்தவையாக இருக்கலாம். ஆனால் தமிழ் ஊடகவியலாளர்களின் நிலைமையை காட்டுகின்றன. பல தரப்புக்களும் தேவராஜை மிரட்ட விரும்புகின்றன. தேவராஜ் சொந்த பாதுகாப்பை தேடுகின்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். ஆனால் ஏனைய தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும் இம்மிரட்டல் அழைப்புக்கள் தாக்கம் செலுத்தும் என்று லூசியன் மேலும் தெரிவித்தார்.

வீரகேசரி பத்திரிகை இப்போது புலி அனுதாப நிலைப்பாட்டை பெரிதும் வெளிப்படுத்துகின்றது. புலிகளின் அழுத்தம் இதற்கான காரணமாக இருக்கலாம். ஏனென்றால் மாற்றுக்கருத்துடைய தமிழ் ஊடகவியலாளர்களை புலிகள் மன்னிக்கவேமாட்டார்கள்.

சிவராம் படுகொலையாளிகள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. ஆயினும் சிவராம் கொல்லப்பட்டு மூன்று வாரங்களில் இனம்தெரியாத சிங்கள குழு ஒன்று இப்படுகொலைக்கு உரிமைகோரி தூதரகங்கள், ஊடக நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு கடிதம் அனுப்பி உள்ளது. ஆனால் தேவராஜை மிரட்டியவர்கள் யார்? என்பதற்கு எந்தவொரு தரவும் இல்லாமல் உள்ளது.

தேவராஜ் சொன்ன மிரட்டல் சம்பவம் உண்மையானதுதான் என்று நாம் கொள்ளவேண்டி உள்ளது. இதற்கு ஒரு காரணம் தேவராஜின் அதிர்ச்சி கலந்த பதற்ற நிலை. அத்துடன் பொலிஸ் விசாரணைகளுக்கு பல மணி நேரங்களை ஒதுக்கி செலவழிக்கவும் விருப்பமாக உள்ளார் என்பது இன்னொரு காரணம். எது எப்படி இருந்தாலும் முக்கிய ஊடகவியலாளரான இவருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் இலங்கை ஊடகவியலாளர்கள் பலரையும் ஊடக சுதந்திரம் குறித்து அச்சம் கொள்ள வைத்து உள்ளது. மிரட்டியவர்கள் யார்? என்பது தெரியாதபோதிலும் ஊடகங்களை அச்ச பீதி ஆக்கிரமித்து உள்ளது. இதனால் ஊடகங்கள் சுயதணிக்கைகளை அதிகம் மேற்கொள்ள கூடும். நாம் தொடர்ந்து இப்பதற்ற நிலைமையை அவதானித்து அடுத்தகட்டம் குறித்து அறிக்கை அனுப்புவோம்.

**(யாத்திரை தொடரும்)**

# அரசியல் அமைப்பின் தேவையும் தெரிவும்



இலங்கை 2015ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட ஜனநாயக ரீதியான ஆதாயங்களை மேலும் பலப்படுத்தவேண்டுமானால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த பிரதமர் விக்கிரமசிங்கவும் தமக்கிடையிலான வேறுபாடுகள், பகைமைகள் மற்றும் கருத்தியல் ரீதியான வேறுபாடுகள் என்பவற்றை மறந்து மூன்றாவது குடியரசு அரசியலமைப்பை அறிமுகம் செய்துவைப்பதற்கு அவர்கள் கூட்டாக தலைமைத்துவத்தை வழங்குதல் வேண்டும். 1972 மற்றும் 1978 ஆகிய வருடங்களில் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட அரசியலமைப்புக்களில் காணப்படும் தவறுகளிலிருந்து படிப்பினைகளை பெற்றுக்கொள்ளும் ஒரு புதிய அரசியலைமப்பு, சர்வதேசத்தின் மிகச் சிறந்த நடைமுறைகளிலிருந்து அதற்குத் தேவையான கூறுகளை பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த் அரசியலமைப்பு, அரசியலமைப்பியலின் அடிப்படை கோட்பாடுகளுடன் பொருந்திச் செல்லவேண்டும். நல்லாட்சி, மனித உரிமைகளின் பாதுகாப்பு, தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை என்பவற்றை அறிமுகம் செய்து வைப்பதற்கு இத்தகைய ஓர் அரசியலமைப்பு நாட்டுக்குத் தேவைப்படுகின்றது.

**எமக்கு ஒரு புதிய அரசியலமைப்பு தேவைப்படுவது ஏன்?**

முதல் இரு அரசியலமைப்புக்களும் பக்கச்சார்பானவையாக இருந்து வந்ததுடன், அவை அதியுத்தம தன்மையையும் கொண்டிருக்கவில்லை. ஒரேவிதமான அடிப்படை குறைபாடுகளை அவை கொண்டிருந்தன.

**அ)** அதிகாரத்தில் இருந்த கட்சியின் நோக்கு மற்றும் கருத்தியல் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் அவை வடிவமைக்கப்பட்டிருந்தன.

**ஆ)** அவை பெரும்பான்மைவாதத்தை எதிர்ப்பதற்குப் பதிலாக அதனை வேரூன்ற செய்தன மற்றும்

**இ)** அவற்றின் முதன்மைச் செயலூக்கி அல்லது தர்க்க நியாயம் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஆட்சியாளரின் சௌகரியமாகவே இருந்து வந்தது. மக்களுக்கு வலுவூட்டும் விதத்தில் அவை வடிவமைக்கப்பட்டு இருக்கவில்லை.



1972ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசியலமைப்பு அவசியமாகவே ஐக்கிய முன்னணி அரசின் ஒரு அரசியலமைப்பாக இருந்துவந்தது. தமது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுத்துச் செல்வதற்கென அரசாங்கங்கள் அரசியல் அமைப்பை பயன்படுத்திக் கொள்வதற்கான ஒரு "கருவியை" அது வழங்கியதாக நீலன் திருச்செல்வம் குறிப்பிடுகின்றார். 1978ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு அதன் முக்கியமான விமர்சகர்களில் ஒருவரான சானக அமரதுங்க எடுத்து விளக்கியதை போல, அதன் பிதாமகராகிய ஜே.ஆர். ஜயவர்தனவின் எதேச்சாதிகார அரசியல் சாணக்கியத்தை அறிமுகம் செய்துவைத்தது. இந்த இரு அரசியல் அமைப்புக்களும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைகளை கொண்டிருந்த அரசாங்கங்களினால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டிருந்தன.

அதன்காரணமாக அரசியல் கட்சிகளுக்கிடையிலும், இனக் குழுக்களுக் கிடையிலும் ஒரு கருத்தொற்றுமையை பெற்றுக்கொள்வதற்கான தேவை அவற்றுக்கு இருந்து வரவில்லை. இவ்விரு அரசியல் அமைப்புக்களும் தனியொரு நிறுவனத்திடம் அதிகாரத்தை குவியச்செய்தன. (1972 அரசியல் அமைப்பின்கீழ் தேசிய அரசுப் பேரவை அல்லது நாடாளுமன்றத்தின் கைகளில் முழு அதிகாரமும் ஒன்று திரண்டிருந்தது. 1978 அரசியல் அமைப்பின்கீழ் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியிடம் அதிகாரங்கள் அனைத்தும் கையளிக்கப்பட்டிருந்தன). இந்த இரு அரசியல் அமைப்புக் களும் பயனுள்ள விதத்திலான பொதுமக்களின் பங்களிப்பு எவையுமில்லாத விதத்திலேயே வரைவு செய்யப்பட்டு, நிறைவேற்றிவைக்கப்பட்டன. குறை-பாடுகள் ஒரே தன்மையானவையாக இருந்துவந்தபோதிலும், ஒரு அரசியல் அமைப்பை மிகக் கடுமையாக விமர்சனம் செய்த ஒருவர் இரண்டாவது அரசியல் மூலகர்த்தாகவாக இருந்துவந்தார்.

இலங்கை 2015ஆம் ஆண்டில் ஈட்டிக் கொண்ட ஜனநாயகரீதியான சாதனைகளைப் பலப்படுத்திக்கொள்வதிலும், நாடு 1982 தொடக்கம் அனுபவித்துவந்த எதேச்சாதிகார ஆட்சிமுறை மீண்டும் தலைதூக்குவதை தடுத்துக்கொள்வதிலும் உண்மையில் ஆர்வம்காட்டுவதாக இருந்து வந்தால், அது அதிகாரத்தை பகிர்ந்துகொள்ளும், தாக்கமான விதத்திலான பரீட்சிப்புக்கள், கட்டுப்பாடுகள் என்பவற்றை கொண்டிருப்பதுடன், மக்களுக்கு வலுவூட்டும் புதிய அரசியலமைப்பொன்றை அறிமுகம்செய்து வைத்தல் வேண்டும்.

[தேவையும் தெரிவும் தொடரும்]




# முதுமையிலும் புதுவாழ்வு கண்ட மண்டேலா!!

கோர் நாளுக்கு நாள் மண்டேலாவை தன் பக்கம் இழுக்க முயற்சி செய்துகொண்டே இருந்தான். மண்டேலாவும் கோரின் நட்பின் பிடியில் சிக்குண்டதால் கோர் இழுத்த இழுப்புக்கெல்லாம் மறுக்காமல் சென்று கொண்டிருந்தான். ஒருமுறை மண்டேலாவும் கோரும் விவாதிக்கும்போது "நெல்சன், கல்வியால் மட்டும் முன்னேற்றம் கண்ட நாடு என்று ஏதாவதொரு நாட்டையாவது உன்னால் சொல்லமுடியுமா?" என்று கேட்க மண்டேலா வாயடைத்துப்போக கோர் தொடர்ந்தான் "கல்வி சிறந்ததுதான் நான் மறுக்கவில்லை. ஆனால் அந்த கல்வியையும் பி.ஏ. பட்டத்தையும் வைத்துக்கொண்டு நாம் சும்மா இருந்துவிட்டால் நம் இலட்சியம்தான் நிறைவேறுமா? கல்வியை மட்டுமே நாம் நம்பிக்கொண்டிருந்தால் இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் இலவுகாத்த கிளிகள்போல காத்திருக்க வேண்டியதுதான்" என்று ஒரு குட்டி பிரசங்கமே செய்துவிட்டான். அது உண்மைதான் என்று தோன்றியது மண்டேலாவுக்கு. கல்லூரி புத்தகங்கள் வாயிலாகவும் நூலகத்தில் படித்த வேறு பல புத்தகங்கள் ஊடாகவும் மண்டேலா வரலாறு வாசித்திருந்தான்.

"பேராசிரியர்களும் ஆசிரியர்களும் பல நுணுக்கமாக விஷயங்களை விவாதித்திருக்கிறார்கள். ஆனால் கோர் ஒரே கையசைவில் நான் இதுவரை படித்த கல்வியையே புறக்கணிக்கின்றான். புத்தகங்களை கேள்விக்குள்ளாக்குகிறான். நான் அறிந்துவைத்திருக்கும் உண்மைகளை திரிபுகள் என்கிறான். எனக்குச் சற்றும் பரிச்சயம் இல்லாத ஒரு கோணத்திற்கு என் சிந்தனை பார்வையை மாற்றியமைக்க முயல்கிறான். பட்டம் பெற்ற நான் பட்டம் பெறாத அவனிடம் பல சந்தர்ப்பங்களில் தோற்றுப்போகிறேன்" என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டான்.

கோர் அழைத்துச் செல்லும் ஒவ்வொரு கூட்டமும் ஒரு புது விஷயத்தை மண்டேலாவுக்கு அறி-முகம் செய்துவைத்தது. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நடத்தும் கூட்டங்கள் மிகவும் துடிப்பாக இருந்தபடியால் மண்டேலாவை கவர்ந்துவிட்டது. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கூட்டங்களில் ஆபிரிக்க மக்களை நேரடியாகப் பாதிக்கும் விஷயங்களை மட்டுமே எடுத்துக்கொண்டு விவாதித்தார்கள். ஆபிரிக்கர்களுக்கு எதிரான சட்டங்கள், முட்டுக் கட்டைகள், உரிமைகள், வாடகைகள், பேரூந்துக் கட்டணங்கள் போன்ற அனைத்து விடயங்களும் தாமாகவே சரியாகி விடும் என்று நாம் நம் வேலைகளை மட்டும் கவனித்துக்கொண்டிருந்தால் எதுவும் மாறப்போவதில்லை. நம் உரிமைகளை நாம் போராடியே பெற்றாகவேண்டும் என்ற கொள்கையை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நடத்தும் கூட்டங்கள் மண்டேலாவுக்கு கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டின.

சில மாதங்கள் பிறந்து மடிந்தன. ஜோங்கிந்தாபா ஜொஹன்னர்ஸ்பெர்க் வந்திருப்பதாகவும் மண்டேலாவை சந்திக்க விரும்புவதாகவும் மண்டேலாவுக்கு ஒரு செய்தி வந்தது. அந்த செய்தியை கொண்டு வந்து சேர்த்தது அவனது உற்ற நண்பன் சிசுலு. மண்டேலாவோ வளர்ப்புத் தந்தையான ஜோங்கிந்தாபாவை நீண்டகாலத்திற்கு பிறகு சந்திக்கப் போவதை நினைத்து உச்சி குளிர்ந்து அகமகிழ்ந்தான். ஆனாலும் அவன் மனதில் பழைய நினைவுகள் வந்து முட்டிமோதி சங்கடத்தையும் பயத்தையும் வரவழைத்தன.

அநாதையாக எதிர்காலமே சூனியமாகிப் போய், வாழ்க்கையே வெட்ட வெளியாய் வெறுமையாகிய நிலையில் தன்னந்தனியாக தத்தளித்துக் கொண்டிருந்த தன்னை தத்தெடுத்து அரவணைத்து பஞ்சணையில் தூங்கவைத்து அழகுபார்த்து சொந்தமகனாகவே நினைத்து வளர்த்து ஆளாக்கிய அந்த அப்பாவி ஜீவனைவிட்டு ஓடி வந்துவிட்டேனே என்ற குற்ற உணர்வு அவனை மென்மேலும் தர்மசங்கடத்திற்கு உள்ளாக்கியது. இவன் மனதை அறிந்தவனான

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

உற்ற நண்பன் சிசுலு "மண்டேலா நீ பழையதை எல்லாம் நினைத்து வருந்தாதே. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்ற தூயஎண்ணத்துடன் நீ உன் தந்தையை சந்தித்து முதலில் மனம் விட்டு மன்னிப்பு கேள். இப்போது கலங்காதே. நானும் உன் தந்தையை சந்திக்க உன்னுடன் துணைக்கு வருகிறேன்" என்று ஆறுதல் கூறி தேற்றியதும் மண்டேலாவும் சமாதானமடைந்தவனாக தயக்கம், சங்கடம், குற்ற உணர்வு அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு தந்தையை சந்திக்கும் ஆவலுடன் அம்பிலிருந்து புறப்பட்ட வில்லாக சிசுலுவுடன் விரைந்தான்.

(தொடரும்)



# ஈராக்கில் மீண்டும் சமாதானம் ஏற்படுமா?

மனித நாகரிகம் பற்றி வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடும்போது 'மொசப்பத்தேமியா' நாகரிகம் என்பது உலக நாகரிகத்தின் தொட்டில் எனக் கூறப்படுவதுண்டு. இன்றைய ஈராக் நாடு அன்றைய மொசப்பத்தேமியா என மீண்டும் நினைவுகூரத்தக்கது. நாகரிகத்தின் தொட்டில் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டமைக்கான காரணங்களைப் பார்ப்போம். முதன் முதலில் மனிதன் எழுத்துக்களை வாசிக்கவும் எழுதவும் சட்டங்களை உருவாக்கவும் குடியிருப்புக்கள நிர்மாணிக்கவும் தொடங்கியது மொசப்பத்தேமியாவில் என்பதால் அப்பிரதேசம் நாகரிகத்தின் தொட்டில் எனப் அதுமட்டுமல்ல ரைகிறிஸ், யுப்பிறைற்றீஸ் என உலகின் புகழ்பெற்ற இரண்டு ஆறுகள் அப்பிரதேசத்தில் வளம் நிறைந்த மண்ணை செழிப்பாக்கியது. ஆகையால் மொசப்பத்தேமியா, இன்றைய ஈராக். ( இரட்டை ஆறுகளின் நாடு) என வர்ணிக்கப்படுகிறது. நவீன ஈராக்கின் அயல்நாடுகள் சவுதி அரேபியா, சிரியா, ஈரான், ஜோர்டான், குவைத், துருக்கி ஆகியனவாகும். முப்பத்தாறு மில்லியன் சனத்தொகையைக் கொண்ட நாடாகும். பிரதானமாக இரண்டு இன மக்கள் அராபிய, குர்திஸ் மக்களைக் கொண்ட நாட்டில் வேறு சிறிய இனக் குழுக்களும் வாழ்கிறார்கள். அராபியாக்களின் சுனிசியா எனும் இரு இஸ்லாமிய பிரிவைச் சேர்ந்தவர்கள் 95 வீதம் ஆகும். கிறிஸ்தவர்களும் வாழ்கிறார்கள். சவுதி அரேபியாவுக்கு அடுத்ததாக மிகுந்த எண்ணெய் வளங்கள் அமையப் பெற்ற நாடாகும்.

முன்னர் மன்னராட்சியின்கீழ் ஈராக்கிய இராஜ்ஜியமாகவிருந்த நாடு பிரித்தானிய கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது. 1932 இல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம்பெற்றது. 1958இல் முடியரசு கவிழ்க்கப்பட்டு ஈராக்கிய குடியரசு பிரகடனப்படுத்தப் பட்டது. முடியாட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. 14.07.1958 இல் குடியரசு அமைக்கப்பட்டது. இதனை ஆடி புரட்சி என சதாம் ஹுசைன் ஆட்சிக்காலத்தில் சுதந்திர தினத்துக்குரிய பெறுமானங்களுடன் கொண்டாடப்பட்டது.

1958 இற்குப் பின்னர் அரசியற் ஸ்திரத்தன்மை பெரியளவில் காணப் படவில்லை. அராபிய பாத் கட்சி மக்களிடையே செல்வாக்குப் பெறத் தொடங்கியது. பாத் கட்சி என்பது அராபிய தேசியத்தின் சோசலிசக் கொள்கைகளையும் உள்வாங்கியது. 1968 இல் பாத் கட்சி ஆட்சியில் செல்வாக்கு செலுத்தியது. இராணுவ ஜனநாயக பதவிவகித்த சதாம் ஹுசேன் இரண்டாம்நிலைத் தலைவராக இருந்தாலும் அவரே ஆட்சியின் பிரதானியாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். 1979 ஆடியில் சதாம் உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியாகப் பதவியேற்றார். ஈராக்கின் நவீன வரலாற்றில் பாத் கட்சி கொள்கைகளின்கீழ் சதாம் மேற்கொண்ட மக்கள் நலத்திட்டங்கள் உலகளாவிய ரீதியில் நயக்கப்பட்டது. நாட்டின் பிரதான வருவாயைக் குவிக்கும் எண்ணெய் கைத்தொழிலை தேசியமயமாக்கினார். 1973 இல் Opec அமைக்கப்பட்ட பின்னர் ஈராக்கின் எண்ணெய் வருமானம் கோடிக்கணக்கில் கிடைத்தது. மன்னராட்சியின் கீழிருந்த அயல் நாடுகள் அதிகரித்த வருமானத்தை மக்கள் நலத்திட்டங்களில் முதலிட வில்லை. மாறாக சதாம் எல்லோருக்கும் இலவசக் கல்வி, இலவச மருத்துவம், உட்கட்டமைப்பு வசதிகள், வீதிகள், பாலங்கள் கட்டமைப்பு, துறைமுகம் விமானத் தளங்கள் விஸ்தரிப்பு என பெரும் திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். ஈராக்கிய மக்களின் வாழ்க்கைத் தரம் ஐரோப்பியர்களுக்கு இணையாக அதிகரித்தது.

1979 இல் ஈரானில் மன்னர் ஷாவின் அமெரிக்க ஆதரவு ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அயோத்துல்லா கொமேய்னியின் இஸ்லாமிய புரட்சியின்மூலம் ஈரானின் ஆட்சி மாறியது மட்டுமல்ல மேற்கத்தைய செல்வாக்கில் வாழ்ந்த ஈரானியர்கள் இஸ்லாமிய கடும் கோட்பாட்டு வாழ்க்கை முறைக்கு மாற்றப்பட்டனர். ஆரம்ப காலங்களில் ஈராக் - ஈரான் உறவுகள் சீராக இருந்தன. ஆனால் கொமேய்னி இஸ்லாமிய புரட்சி கோட்பாடுகளை அராபிய நாடுகளில் விதைக்கத் தொடங்கின. ஈராக்கிலும் பெரும்பாலான அராபியர்கள் இஸ்லாமிய சியா பிரிவைச் சேர்ந்தவர்கள். ஈரானும் சியா பிரிவைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மையினர், ஈராக்கிலுள்ள சியா பிரிவினையும் குர்திஸ் மக்களையும் சதாமுக்கு எதிராக கொமேய்னி தூண்டினார். ஈராக், ஈரான் எல்லைகளில் சச்சரவுகள் தலைதூக்கின. புரட்டாதி, 1980இல் சதாம் ஈரானுக்கு எதிரான யுத்தத்தை பிரகடனம் செய்தார். இந்த யுத்தம் 1988 வரை நீடித்து பல்லாயிரக்கணக்கான மக்களைக் காவுகொண்டது. இருநாட்டின் பொருளாதாரங்களும் சிதைவுற்றன. கொமேய்னிக்கு எதிரான யுத்தத்தில் அராபிய நாடுகளும், அமெரிக்காவும் ஈராக்கிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவின. இஸ்லாமிய புரட்சி பரவக்கூடாது என்பதற்காகவே இந்த உதவிகள் செய்யப்பட்டன. இக்காலகட்டத்தில் குர்திஸ் கிளர்ச்சியை அடக்கும்போது ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட குர்திஸ் மக்களை ஈராக்கிய படைகள்கொன்று குவித்தன என்று சதாம் மேல் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

ஆவணி, 1990 இல் சதாமின் படைகள் சிறிய அயல்நாடான குவைத்தின் மேல் படையெடுத்து குவைத் நாட்டை ஈராக்குடன் இணைத்துக் கொண்டது. அமெரிக்காவின் தலைமையில் கூட்டுப்படைகள் ஈராக் படைகளை குவைத்திலிருந்து பின்வாங்கச் செய்தன. ஈராக்கிய படைகள் நிலைகுலைந்தன. சதாமின் ஆக்கிரமிப்புக்கெதிராக ஐ.நா. பாச தீர்மானம் நிறைவேற்றியது. இக்காலகட்டத்தில் சியா, குர்திஸ் அதிருப்தியாளர்களால் ஈராக்கின் பல பிரதேசங்களில் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அவை அடக்கப்பட்டன. ஒரு இலட்சம் மக்கள் இறந்ததாக கருதப்படுகின்றது.

UN பாச தீர்மானத்தின்படி அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், துருக்கி ஆகிய நாடுகள், குர்திஸ் பிரதேசத்துக்கு மேலாக ஈராக்கிய தாக்குதல் விமானங்கள் பறப்பதை தடைசெய்யும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தின. குவைத்தின்மீது ஈராக் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து ஆவணி, 90 இல் ஐ.நா. பாச தீர்மானம் ஈராக் வெளியேற வேண்டும் என்பது மட்டுமல்ல குவைத்திற்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் விமானங்கள் பறப்பதை தடை செய்யவேண்டும் என்றும் தடைவிதித்தது.

பின்னர் இவ்விடயங்களுடன் நாசகார ஆயுதங்களை ஈராக் அழிக்கவேண்டும் எனும் ஐ.நா. பாச தீர்மானித்தது. இதனையே ஈராக்கிற்கு எதிரான பொருளாதார தடை என அறியப்படுகிறது. ஈராக்கின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து மக்களை வறுமை நிலைக்கு தள்ளப்பட்டனர். ஐ.நா. இதனை கருத்திற்கொண்டு உணவுப் பண்டங்கள், அத்தியாவசியப் பண்டங்கள், மருந்து வகைகளை ஈராக் இறக்குமதி செய்யலாம். அதற்கான எண்ணெய், பத்தி ஏற்றுமதி ஐ.நா பொறிமுறையின் கீழ் மேற்பார்வை செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக ஐ.நா. வால் நியமிக்கப்பட்ட 'பரிசோதனைக் குழுக்கள்' ஈராக்கிற்கு விஜயம்செய்து நாசகார ஆயுதங்களை தேடும் பணியில் ஈடுபட்டன. ஒருபோதுமே நாசகார ஆயுதங்கள் இருப்பதாக பரிசோதனை அறிக்கைகள் நிரூபிக்கவில்லை. ஆனால் அமெரிக்காவும் நேசநாடுகளும் சதாமின் ஆட்சியை மாற்ற வேண்டும் என்ற தமது அரசியல், இராணுவ அட்டவணையில் உறுதியாக நின்றார்கள். அமெரிக்கா, ஈராக்கின்மீது படையெடுப்பு நிகழ்த்தப்போகிறது என 2002 - 2003 இல் நம்பத் தகுந்த ஊகங்கள் அரசியல், இராஜதந்திர வட்டாரங்களில் கிளம்பின. 2003, வைகாசி மாதம் அமெரிக்கப்படைகள் ஈராக்கினுள் புகுந்தன. இதன் தொடர்ச்சியான அம்சங்களும், சதாமின் மரணமும், பின்னர் ஈராக்கில் தொடருகின்ற உள்நாட்டுப் போரையும் அடுத்த வாரத்தில் பார்ப்போம்.

**தேவ தர்மா**

# கூட்டமைப்புக்கு “கிளீன் செக்-மேட்” வைத்தது தமிழ் மக்கள் பேரவை

தமிழ்க் கூட்டமைப்பின் பிரதான கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சி. புலிகளின் காலத்தில் பதுங்கிக் கிடந்த - புலிகளின் “ஏவல் நாய்”களாக செயற்பட்ட - அதன் தலைவர்கள், புலிகளின் அழிவுக்குப் பின்னர் தங்களை பிரபாகரன் நிலைமைக்கு கற்பனை செய்து நடக்கத் தொடங்கிவிட்டதால்தான் ஆரம்பித்தது. இந்த விபரீதங்கள் எல்லாம் என தமிழ்க் கூட்டமைப்பில் என்ன குறைபாடுகள் பிரதமானமாக இருக்கின்றனவோ, அவற்றை எல்லாம் சுட்டிக்காட்டி முதலமைச்சர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு - முக்கியமாக சம்பந்தன், சுமந்திரன் கூட்டணிக்கு - “கிளீன் செக்-மேட்” வைத்திருக்கின்றார் என பத்தி எழுத்தாளர் வசிட்டன் தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் தீர்வுத்திட்ட முன்மொழிவு தொர்பான கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்புக்கு “கிளீன் செக்-மேட்”!

வைத்தது தமிழ் மக்கள் பேரவை

- வசிட்டன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு - முக்கியமாக சம்பந்தன், சுமந்திரன் கூட்டணிக்கு - “கிளீன் செக்-மேட்” வைத்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன்.

தமிழ்க் கூட்டமைப்பில் என்ன குறை-பாடுகள் பிரதானமாக இருக்கின்றனவோ, அவற்றைச் சுட்டிக்காட்டிய முதலமைச்சர், அந்தக் குறைபாடுகள் அற்றவகையில் சில விடயங்களை ஒப்பேற்றியதன் மூலம் தனது சாதுரியத்தை நிலை நிறுத்தியிருக்கின்றார் என்று கூறலாம்.




தமிழ்க் கூட்டமைப்பின் பிரதான கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சி. விடுதலைப் புலிகளின் காலத்தில் பதுங்கிக் கிடந்த - புலிகளின் “ஏவல் நாய்”களாக செயற்பட்ட - அதன் தலைவர்கள், புலிகளின் அழிவுக்குப் பின்னர் தங்களை பிரபாகரன் நிலைமைக்கு கற்பனைசெய்து நடக்கத் தொடங்கிவிட்டதால்தான் ஆரம்பித்தது இந்த விபரீதங்கள் எல்லாம்.

பிரபாகரனாவது ஒரு பலம் பொருந்திய இராணுவக் கட்டமைப்பின் தலைவர். இராணுவக் கட்டமைப்பு ஒன்றை நடத்துபவர், அந்தப் பாணியிலே தான் அதனை முன்னெடுக்கவேண்டும் முன்னெடுக்க முடியும். இராணுவ இயக்கத்தை அரசியல் கட்சிப் பாணி யில் - ஜனநாயகவழியில் - நடத்த முடியாது. அங்கு ஜனநாயகம் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது எதிர்பார்க்கவும் கூடாது.

ஆனால் ஜனநாயகக் கட்சி என்று கூறிக்கொள்ளும் தமிழ்க் கூட்டமைப்பும் - அதன் பிரதான அம்சமான இலங்கைத் தமிழரசுக் கட்சியும் - ஜனநாயக மார்க்கத்தைத் தாண்டி, வேறு வழி பயணிக்கின்றன. அக்கட்சியின் தலைவர்கள் - குறிப்பாக சம்பந்தர், சுமந்திரன், மாவை சேனாதிராஜா போன்றோர் - தங்களை ஜனநாயகக் கட்சி ஒன்றின் காவலர்கள் என்று வெளியில் படம்போடுவார்கள். ஆனால் நடந்துகொள்வது ஏனோ இராணுவ சர்வாதிகாரிகள் போல்தான்.

அதுதான் - அந்தப் போக்குத்தான் - முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்ற சிறுவிதையில் இருந்து தமிழ் மக்கள் பேரவை என்ற விருட்சம் விஸ்வரூபம் எடுக்க உரமளித்து என்பதே இன்று புலனாகும் உண்மை.

இலங்கைத் தமிழரசுக் கட்சியை எடுத்துக்கொள்வோம். ஒரு பெரிய ஜனநாயக இயக்கம்போல அதனைக் காட்டிக்கொள்வார் அதன் தலைவர் மாவை சேனாதிராசா. ஆனால் கட்சிக்குள் அவர் நடந்துகொள்வதோ முற்றிலும் சர்வாதிகாரப் பாணிதான் தந்தை செல்வாவின் வழிக்கு முற்றிலும் முரணான முறையில்தான்.

ஏதோ ஜனநாயக மரபின் உச்சிக் கொப்பில் நிற்பதுபோல கட்சியின் தேசிய மாநாட்டைக் கூட்டுவார். கட்சியின் கீழ்மட்டத்திலிருந்து கருத்துக்களை உள்வாங்கி கட்சி நிர்வாகிகள் தெரிவு செய்யப்படுகின் றார்கள் என்பதுபோல ஒரு மாயை காட்டுவார். ஆனால் அப்படி ஏதும் நடப்பதில்லை. கட்சி மாநாட்டு மேடையில் வைத்து தனக்கு விருப்பமானவர்களை கட்சி நிர்வாகிகளாக மாவை சேனாதி ராசா அறிவிப்பார். அவருக்கு விருப்ப மானவர்கள்தான் - அவருக்குப் பிடித்தமானவர்கள்தான் - “ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட” (?) கட்சி நிர்வாகிகள் என்று மற்றவர்கள் கருதிக் கொள்ள வேண்டியதுதான்.

வடக்கில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குள் புகுந்து விளையாடி, தின்று ஏப்பம்விட்ட “பெருச்சாளி“ ஒன்றுதான் மாவைக்குப் பிடித்தமான கட்சிப் பொருளாளர். கட்சி மாநாடுகளின் கட்சியின் வரவு - செலவுக் கணக்கு களைக் காட்டாத அந்தப் பிரகிருதிகூட மாவையின் விருப்பின்பேரில் “ஜனநாயக முறையில் “தெரிவான பொருளாளராக அறிவிக்கப்படுவார் மாவை விரும்பும்வரை அவரே பொருளாளர்.

இப்படி ஜனநாயகத்தின் பேரால் சம்பந்தரும், சுமந்திரனும், மாவையும் மேற்கொண்ட சர்வாதிகாரமே தமிழ் மக்கள் பேரவையின் பிறப்பாக்கத்துக்குப் பிரதான காரணம் என்பதை தற்போதைய அரசியலின் பார்வையாளர்கள் யாவரும் ஒப்புக்கொள்வர்.

ஆறு தசாப்த கால போராட்டங்களின் விளைவாக - அளப்பெரும் தியாகங் களையும் சொல்லொணாத் துயரங் களையும் சுமந்த போராட்டங்களின் பெறுபேறாக - தமிழர்களுக்குக் கிடைக்கவேண்டிய - அல்லது கிடைக்கக்கூடிய - தீர்வு எத்தகையது என்பதைத் தீர்மானிக்கும் உரிமைகூட ஜனநாயகத்தின்பெயரால் தங்களிடம் மட்டுமே விட்டு வைத்திருக்கப்பட்டுள்ளது என்று சம்பந்தர் - சுமந்திரன் குழு தீர்மானித்துச் செயற்பட்டதன் முரண் நகையே தமிழ் மக்கள் பேரவை.

இந்த விடயத்தில் “சம்பந்தன் - சுமந்திரன்” கூட்டுக்குள் மாவையின் பெயர் அதிகம் சிக்கிக்கொள்ள வில்லை. வெறுமனே இவ்விடயம் சம்பந்தமாக இடம்பெறும் உள்வீட்டுக் குசுகுசுப்புக்குள், தலையைக்காட்டி விடுவதுடன் மட்டும் மாவையின் பங்களிப்பு அடங்கிவிடுகின்றது.

அதற்கும் காரணம் உண்டு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். தீர்வு, யோசனை, அதிகாரப்பகிர்வு, அரசமைப்பு சரத்துக்கள்..... இப்படி மூளைக்குக் காத்திரமான விடயங்களை கையாளும் - அல்லது விவாதிக்கும் - தகைமையோ, தலையோ மாவையிடம் இல்லை என்பதுதான் உண்மை. அதனால் அந்த விடயத்துக்குள் அதிகம் சிக்காமல் - சிக்குவதற்கான தகைமை, ஆளுமை இல்லாததால் - விலகிநிற்கின்றார் அவர்.

ஆனால், சம்பந்தனும் சுமந்திரனும் ஈழத் தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஏகபோக உரிமை தங்களிடம் மட்டுமே விட்டு வைக்கப்பட்டுள்ளது என்றபோக்கில் மமதையுடன் விடயங்களைக் கையாள்வது வெளிப்படையானது.

அதுவே தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி அலைகளைத் தோற்றுவித்துள்ளது.

அந்தக் காரணத்தில்தான் தமிழ் மக்கள் பேரவை உருக்கொண்டது என்பதும் அப்பட்டமான உண்மை.

இந்தப் பின்புலத்தில் இன்னும் சில ஒளிவு, மறைவான சம்பவங்களும் உள்ளன. சம்பந்தர் - சுமந்திரன் கூட்டு, தென்னிலங்கையில் மைத்திரி - ரணில் அணியுடன் காய்களை நகர்த்தி எப்படியோ அதிகாரத்துக்கு வந்துவிட்டது.

மைத்திரி - நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ரணில் - பிரதமர், சம்பந்தர் - எதிர்க்கட்சித் தலைவர். இந்த முக்கூட்டுத் தரப்பு தங்களுக்குள் மூடுமந்திரமாக நகர்த்தும் புதிய அரசமைப்பு ஏற்பாடுகள் பற்றிய செய்திகள் அரசல்புரசலாக வெளி வந்தமையே தமிழர் தரப்பில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. சம்பந்தரையும் சுமந்திரனையும் நேரில் அழைத்து சில விடயங்களைத் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் வெளிப்படையாகவும் பிரதமர் ரணில் விக்கிரசிங்க கூறிவிட்டார் என்பதை நம்பிக்கையான கொழும்பு அரசியல் உயர்வட்டாரங்கள் அடித்துக் கூறி உறுதிசெய்கின்றன.




புதிய அரசமைப்பில் - சமஷ்டி கிடையாது.

வடக்கு - கிழக்கு இணைப்பு சாத்தியமே இல்லை.

மாகாணங்களுக்கு சுயாட்சி என்ற கதையே கிடையாது.

இந்த மூன்று விடயங்களையும் ரணில் மிக உறுதியாக சம்பந்தர் - சுமந்திரனிடம் தெளிவுபடுத்திவிட்டார்.

”அப்படி இந்த மூன்று விடயங்களும் இப்போதைக்குக் கிடைக்கும் எனக் கனவுகூடக் காணாதீர்கள். தெற்கில் ஏற்பட்டுள்ள தற்போதைய அரசியல் கொந்தளிப்புநிலையை எதிர்கொண்டு தாண்டுவதே இப்போது மிகமுக்கிய விடயம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கும் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதே தற்போதைக்கு பிரதான விவகாரம்.

அதற்கு முட்டுக்கட்டையாக வரக்கூடிய மேற்படி அதிகாரப் பகிர்வு விடயங்களை பேச்சுக்குக்கூட பரிசீலிக்க முடியாது. இப்போதைக்கு இவை இல்லாத அரசமைப்பை நிறைவேற்றி நடைமுறைக்குக் கொண்டுவருவோம்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

**தமிழ்க் கூட்டமைப்பு ஈழத் தமிழ் மக்களின் ஏகோபித்த அரசியல் சக்தி என்று கூறினாலும்கூட, விரும்பும் எந்த தமிழ் அரசியல் தரப்பும் அதில் இணைத்துவிட முடியாது. சம்பந்தர், சுமந்திரன், மாவை போன்றோர் விரும்பினால் மட்டும் யாருக்கும் இடம் அங்கத்துவம் ‘சீட்’ எல்லாம். ஆனால் தமிழ் மக்கள் பேரவை அப்படியல்ல. வருகின்றவர்கள் எல்லோரையும் - அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவராயினும், எந்தப் புத்திஜீவி அல்லது அரசியல் தரப்பைச் சார்ந்தவராயினும் அவர்களுக்குத் கதவு திறந்தே இருக்கிறது என்கிறது பேரவை. டக்ளஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான் போன்றோருக்கும் பேரவையின் கதவுகள் திறந்தே இருக்கின்றன என்று அதன் இணைத் தலைவர்களுள் ஒருவரான முதல்வர் விக்னேஸ்வரன் ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்திருக்கின்றமை மறக்கக்கூடியதல்ல.**

**எல்லா விடயங்களிலும் அனைத்துத் தரப்பினரின் கருத்துக்கள் உள்வாங்கப்படுகின்றன. ஒட்டியும், வெட்டியும் சூடான கருத்துப் பரிமாற்றங்களுக்கு இடமளிக்கப்படுகின்றது. முழு அளவில் ஜனநாயக முறைமை ஓங்கி ஒலிக்கின்றது. தமிழர்களின் - ஒரு தேசிய இனத்தின் - அரசியல் ரீதியான வரலாற்றுத் தலைவிதியைத் தீர்மானிப்பதில் அனைத்து மக்களின் கருத்துக்களும் உள்வாங்கப்படுவது அவசியமானது. பிரதானமானது. அப்படியில்லாமல் ஒரு சிலரின் மூடுமந்திரமான நடவடிக்கைகள் மூலம் ஒட்டுமொத்தத் தமிழினத்தின்மீதும் ஒரு கட்டாய தலைவிதி திணிக்கப்படுவதைத் தகர்த்தெறியும் ஆரம்பப் புள்ளியாகவே பேரவை முகிழ்ந்திருக்கின்றது.**

நன்றி - வசிட்டன்

மேல் மாகாணத்தில் ஹொரணை வலயத்தில் சொரணை பிரதேசத்தில் அமைந்துள்ள மேல்மாகாண ஹொரண எல்லகந்த தமிழ் மகா வித்தியாலயமானது தரம் 06 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்களைக் கொண்டுள்ளது. இப் பாடசாலையில் 16 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். மாணவர்கள் 255 பேர் கல்வி கற்கின்றனர். இங்கு தரம் 6 வகுப்பில் கல்வி கற்பித்தலின்போது அம்மாணவர்களில் சிலர் பேச்சுத்திறன், தர்க்கிக்கும் திறன், விவாதிக்கும் திறன், செயலாற்றல் என்பவற்றைக் கொண்டவர்களாக இருந்தார்கள். இவ்வாறு இருப்பினும், இம்மாணவர்கள் மேலதிக பாட செயற்பாடுகளை (Home Work) பற்றிக் கவனம் செலுத்திய போது அவர்களது பாடச் செயற்பாடுகள் மிகக் குறைவாகக் காணப்பட்டதை அவதானிக்க முடிந்ததுடன், இம் மாணவர்களது மொழித்திறன் விருத்தி குறிப்பாக வாசிப்புத்திறன் மிகக் குறைவாக இருப்பதை அவதானிக்கமுடிந்தது.

தரம் 05 புலமைப் பரீட்சைகளில் சித்தியடைந்த அநேகமான மாணவர்கள் பிரபல்யமான பாடசாலைகளிற்கு செல்லும்நிலையில் ஏனைய மாணவர்கள் அனுமதிப் பரீட்சைகள் எதுவுமின்றி இப்பாடசாலைக்கு தரம் 06 இல் கல்வி கற்கவருகின்றனர். இவர்களில் அநேகமான மாணவர்கள் மிகக் குறைவான அடைவுமட்டத்தைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இம்மாணவர்களது நிலையிலும், தண்டனைகள் சீர்திருத்த முடியாதென்ற நோக்கிலும், ஆசிரியரின் வழிகாட்டல்கள் செவிமடுக்காத நிலையிலும் காணப்பட்டனர். இதன் பின்னணிக்கான காரணம் யாதென கண்டறியும்நோக்கிலும், இவர்களை மேலதிக பாடசெயற்பாடுகளை தூண்டச் செய்யும்நோக்கிலும் இவ்வாய்வை முன்னெடுத்துச் செல்கின்றன.

03. ஆய்வுப் பின்னணியை விளக்கல்

ஆசிரியர்களினால் மாணவர்களுக்கு வீட்டில் செய்வதற்கான பயிற்சிகள், ஒப்படைகள் என்பன வழங்கப்படுதல் மரபுரீதியாக கற்றல், கற்பித்தல் செயலொழுங்கில் நடைபெறும் ஒரு விடயமாகும். இவ்வாறு ஆசிரியர்களால் வழங்கப்படும் வீட்டில் செய்வதற்கான பயிற்சிகள், ஒப்படைகள்மூலம் மாணவர்களின் கற்றல் விருத்தி ஏற்படுகின்றதா? மாணவர்களின் செயலாற்றல் அதிகரிக்கின்றதா? அல்லது இதற்கு எதிர்மாறான நிலைமைகள், விளைவுகள் தோன்றுகின்றதா? என்பது பற்றிய விவாதங்கள் இன்று பெற்றோர்களிடையே பரவலாக எழுந்துள்ளது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கற்றல், கற்றல் பிரச்சினைகள், கற்றல் முன்னேற்றங்கள் தொடர்பாக கலந்துரையாடும்வேளைகளில் வீட்டுப்பாடங்கள், பயிற்சிகள், ஒப்படைகள் பற்றிய விடயத்திற்கும் அதி முக்கியத்துவம் கொடுக்கும் நிலைமை காணப்படுகின்றது. இவ் செயல்நிலை ஈடுபடும்விதத்தில் பயனுறுதிப்பாடு மிக்க ஆசிரியர்கள் கற்பிப்பதற்குத் தமக்குக் கிடைக்கும்நேரத்தில் பெரும் பகுதியை ஒதுக்குகின்றார்கள்.

பயனுறுதிவாய்ந்த கற்றலை ஏற்படுத்துவதற்கு மேலதிக பாட செயற்பாடுகளை ஒரு செயல்முறையாக எண்ணி அதை அணுகும் ஆசிரியர்கள், ஒழுங்கை நிலைநிறுத்துவதையே தமது வகிபங்கென வலியுறுத்தும் ஆசிரியர்களைவிட, தமது பணியில் அதிக வெற்றியடைகிறார்கள் என்று ஆராய்ச்சி சுட்டிக்காட்டுகின்றது. மாணாக்கர்களின் ஒத்துழைப்பைப் பெற்று, மேலதிக பாடசெயற்பாடுகளில் அவர்களுடைய ஈடுபாட்டை நிலைத்து நிற்கச் செய்வதற்கு, பயனுறுதிவாய்ந்த ஆசிரியர்கள், முகாமை உத்திகளைப் பயன்படுத்துவதால் . மாணாக்கரின் நடத்தைப் பிரச்சினைகளில் அதிக நேரத்தைச் செலவிடவேண்டிய அவசியம் அவர்களுக்கில்லை. கற்கும் சமுதாயமொன்றின் கோட்பாட்டின் உட்கிடைக்கேற்பச் சாதகமானதொரு வகுப்பறைச் சூழலில் பணிபுரியும்

ஓர் ஆசிரியர் மாணாக்கர்களின் வகுப்பறை நடத்தை தொடர்பாகப் பொதுவாகவும் பாடங்களிலும் பாடசெயற்பாடுகளிலும் பங்குபற்றுதல் தொடர்பாகச் சிறப்பாகவும் ஆசிரியர் தெளிவான தனது எதிர்பார்ப்புக்களைச் சுட்டிக்காட்டுவார். மேலதிக பாட செயற்பாடுகளின்போது ஆக்கபூர்வமான ஈடுபாட்டை வளர்க்கும் நடைமுறைகளையும் அவற்றிற்கிடையில் இடம் ஒவ்வொரு வருடமும் மிக அதிக நேரத்தைப் பாடவிதானத்துடன் தொடர்புற்ற மேலதிக பாடசெயற்பாடுகளுக்குச் செலவிடுவார். மாணாக்கர்கள் கற்பதற்கு, ஆசிரியர்கள் உதவும் மூன்று பிரதான வழிகள் உண்டு. முதலாவதாக, அவர்கள் தகவல்களை முன்வைப்பார்கள். பின்னர், எண்ணக்கருக்களை விளக்குவார்கள். அதைத் தொடர்ந்து திறன்களைக் கற்பிப்பார்கள். இரண்டாவதாக அவர்கள் விளக்கங்களைக் கேட்டு, உள்ளடக்கம் பற்றிய மாணாக்கர்களின் கலந்துரையாடல்களையும் வேறு வடிவிலமைந்த பேச்சுக்களையும் வழி நடத்துவார்கள். மூன்றாவதாக தாம் கற்பவற்றை நடைமுறையில் பின்பற்றுவதற்கும் பிரயோகிப்பதற்கும் சந்தர்ப்பங்களை வழங்கும் மேலதிக பாட செயற்பாடுகளில் அல்லது ஒப்படைகளில் மாணாக்கர்களை ஈடுபடுத்துவார்கள். இலாவகமாகவும் தன்னியக்கமுள்ள விதத்திலும் உச்ச அளவிற்குப் பயிற்சி செய்யப்படும் திறன்கள், நிரந்தரமாக நிலைக்கும் போக்கைக் கொண்டனவாக இருக்க, ஓரளவிற்கு மட்டும் கற்கப்படும் திறன்கள் காலப் போக்கில் மறைந்து போகும் போக்கைக் கொண்டனவாக இருக்குமென்று ஆராய்ச்சி காட்டுகின்றது. மேலதிக பாட செயற்பாடுகள் கால எல்லைகள் நன்கு பகிரப்படும்போதும் பல்வேறுபட்ட பணிகளுக்குள் பொதிந்திருக்கும் போதுமே, பாடசாலைப் பாட விதானத்தில் உள்ளடக்கப்பட்டு இருக்கும் பெரும்பாலான திறன்கள், மாணாக்கர்களினால் சிறப்பாகக் கற்கப்படுகின்றன. எனவே, தாம் கற்றவற்றைப் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பிரயோகிப்பதற்கான வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்கக் கூடிய மீள் நோக்குச் செயற்பாடுகளைக் கற்பிக்கத் தொடங்கும் தருணத்திலிருந்தே அவ்வப் போது வழங்குவதனூடாகப் பின்தொடர் நடவடிக்கைகளில் மாணாக்கர்கள் ஈடுபடுவது முக்கியமாகும்.

ஒரு பிள்ளையின் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தி, சமூக ஒருமைப்பாடு போன்றவற்றுக்கு அடிப்படையாக இருப்பது மேலதிக பாடசெயற்பாடுகள் ஆகும். மாணவரிடையே காணப்பட்ட மேலதிக பாடசெயற்பாடுகள் குறைபாடு காரணமாக இச்செயல்நிலை ஆய்வு முன்னெடுப்பது என உணரப்பட்டது. மொழி என்பது ஒருவரோடு ஒருவர் தத்தம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும்

# மாணவர்களைச் சீரமியப்படுத்தல்

குடும்ப, பொருளாதார நிலைமைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டபோது அம் மாணவர்களது பெற்றோர் கொழுந்து பறிக்கும் தொழில், கடற்றொழில், மேசன், விவசாயம், அச்சுவேலை, கூலித்தொழில் போன்ற தொழில்களை மேற்கொண்டு வாழ்க்கையை நடாத்துபவர்களாகக் காணப்படுகின்றனர். இம் மாணவர்களது பெற்றோரின் நிரந்தரமற்ற வருமானம் - பொருளாதார ஏற்றத்தாழ்வு, பெற்றோரின் கல்வி நிலை என்பன போன்ற பல காரணங்கள் மாணவர்களது கல்வியிலும், மேலதிக பாடசெயற்பாடுகளை செய்யாத மாணவர்கள் உள்ளமையிலும் தாக்கம் செலுத்துகின்றன.

கல்வி அறிவு மிக்க பெற்றோர்கள், மாணவர்கட்கு அமைவது ஒரு வரப்பிரசாதமாகும். மாணவரின் கல்வி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கும், அவ்வப்போது மாணவர்களுக்கு எழும் ஐயப்பாடுகளை தெளிவாக்குவதற்கும் கல்வியறிவுள்ள பெற்றோரின் பங்களிப்பு இன்றியமையாததாகும். பெற்றோரின் பொருளாதாரப் பின்னடைவு மாணவனின் கல்வித் தர வீழ்ச்சிக்குப் பிரதான காரணியாக அமைகின்றது. தேவைக் கொள்கைக் கமைய உடலியல் தேவைகள் பூர்த்தியடையும் இடத்தே தான் கல்விமீது ஒரு மாணவன் கரிசனையுடன் ஈடுபட முடியும். அத்துடன் குடும்பப் பின்னணிகளும் - உளவியல் பின்னணிகளும் கல்விமீது ஆதிக்கம் செலுத்தத் தவறுவதில்லை.

இந்த வகையில் மேலதிக பாட செயற்பாடுகளை செய்யத் தவறும் குறிப்பிட்ட ஆறு மாணவர்களைக் கவனத்தில் எடுத்தபோது ஏனைய மாணவர்களுடன் ஒப்பிடுகையில், இவர்களின் செயற்பாடுகள் கல்வி நடவடிக்கையில் அசமந்த நிலையிலேயே காணப்பட்டது. ஏனெனில் மேலதிக பாட செயற்பாடுகளை செய்யாத தறுவாயில் அவர்களால் முற்றுமுழுதாக பாடங்களில் தொடர்பினை ஏற்படுத்தமுடியாத



ஆய்வானது ஆசிரியர்களினால் வழங்கப்படும் மேலதிக பாட செயற்பாடுகள் செய்வதன் முக்கியத்துவத்தையும், மாணவர்களை சீர்மியப்படுத்தும் நோக்கிலும் முன்கொண்டு செல்லப்படுகிறது.

எந்தவொரு கல்விப்பரம்பலிலும் கற்றலை நிர்ணயிக்கும் பிரதான விடயம், பாடசாலையில் அப்பரப்பில் (ஆட்சியில்) எந்த அளவிற்கு ஈடுபாடு இடம்பெற்றதென்பதாகும். பாடசாலை நாள் ஒன்று எவ்வளவு நீளமானது, பாடசாலை வருடம் எவ்வளவு நீளமானது என்பவை . கற்பதற்கு பிள்ளைகள் பெறும் சந்தர்ப்பம் தொடர்பான உச்சவரம்புகளை ஏற்படுத்துகின்றன. இத்தகைய வரையறைக்குள், பிள்ளைகள் கற்பதற்குப் பெறும் சந்தர்ப்பங்கள், கிடைத்தநேரத்தில் எவ்வளவு நேரத்தை அவர்கள் கற்பதிலும் கற்றல் தொடர்பான செயற்பாடுகளிலும் செலவிடுகிறார்கள் என்பதிலேயே தங்கியிருக்கும். கற்பித்தல் இலக்குகளை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட பாட செயற்பாடுகளில் மாணாக்கர்கள் பெறும் நிலை மாற்றங்கள் ஆரவாரமின்றி அமைதியாக அமையவேண்டும் என்பதையும் கற்பிப்பர். அவசியப்படும் இடங்களில் நினைவுபடுத்துவதற்கு உதவும் சொற்களையும் வழங்கி, ஆசிரியர் தொடர் வேலையில் ஈடுபடுவர்.

வகுப்பறையைப் பொறுத்தவரையில் கற்பதற்கு எவ்வளவோ விடயங்கள் உண்டெனினும் அவற்றைக் கற்பதற்குள்ள நேரம் போதியதாக இல்லை. எனவே வரையறைக்குட்பட்ட வகுப்பறை நேரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்தவேண்டியது அத்தியாவசியமாகும். பயனுறுதிவாய்ந்த ஆசிரியர்கள், இந்நேரத்தின் பெரும்பகுதியை சொற்பளவு பாடவிதானஞ்சார் பயன் அல்லது பாடவிதானங்கள் பயனேதுமற்ற, கல்விசாராத நேரப் போக்குகளுக்குச் செலவிடுவதை விடுத்து, பாடங்களுக்கும் மேலதிக பாடசெயற்பாடுகளுக்கும் செலவிடுவார்கள். எனவே கற்பித்தல் இலக்குகளில் குறைந்த கவனம் செலுத்தும் ஆசிரியர்களை மாணாக்கர்களைவிட அவற்றில் பெருங் கவனம் செலுத்தும் மாணாக்கர்கள்


T.தவப்பிரியா (ஆசிரியர்)
மே/மா ஹொரண எல்லகந்த
தமிழ் மகா வித்தியாலயம்


கருவியாகும். அக்கருத்துக்களை பேச்சு வடிவமாகவோ அல்லது எழுத்து வடிவமாகவோ அல்லது மேலதிக பாட செயற்பாடுகள் வடிவமாகவோ வெளிப்படலாம்.

எனவே "பாடசாலையில் ஆசிரியர், மேலதிக பாடசெயற்பாடுகளைக் கிரகிக்கும்போதும் தரங்களை வழங்கும் போதும் அவற்றை காலதாமதமின்றித் திருத்தி, வழங்கும் போதும் பிரதானமாக, முதலில் சமர்ப்பித்த விடயத்தை ஒப்புவிப்பதற்குப் பயன்படுத்தும் போதும் மாணவர்கள் மிகச் சிறப்பாகக் கற்கிறார்கள்."(பெற்றோரும் கல்வியும் - கலாநிதி ஜெரே பிரோஃபி, பக் 27)

மொழிப்பாடம் என்பது திறன்பாடம், திறன் வளரப் பயிற்சி இன்றியமையாததது. மாணவர்கள் பாடத்தின் வாயிலாகக் கற்றவற்றைப் மேலதிக பாட செயற்பாடுகளை பயிற்சி, செய்து தெளிவு பெறுவதற்கும் பயன்படுவது பயிற்சி பாடங்களின் மாணவர்களின் கற்றல் எவ்வாறு இருந்தது என்பதைச் சோதித்தறிய ஆசிரியருக்கு உதவுவது பயிற்சி, பயிற்சியில் பாடப்பொருளுக்கும் மொழிக்கும் தக்க இடமிருக்கவேண்டும். பெரும்பாலும் மேலதிக பாட செயற்பாடுகளை பயிற்சி பாடப்பொருளையே சார்ந்திருந்த நிலை மாறி மொழிக்கு இடம் கொடுக்கும் நிலை இன்று காணப்படுகிறது. இருப்பினும் பயிற்சிகளான மேலதிக பாட செயற்பாடுகளை மேலும் கூட்டுவதற்கும் மேம்படுத்துவதற்கும் நிறைய வாய்ப்புகள் உள்ளன.



# காதலோ! காதல்!

## கன்னியே ஆகும் வேறு அதற்கு ஐயுறவு இல்லையே!

**“மருங்கு இலா நங்கையும் வசை இல் ஐயனும், ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினர்”**

உயிர் ஒன்றாயினும் என்று சொல்வதோடு மாத்திரம் அமையாமல் உடல்களைப் பற்றிச் சொல்லும்போது கூட ‘ஒருங்கிய இரண்டு உடல்’ என்று சொல்லுவான். இங்கும் இராமனையும் சீதையையும் குறிப்பிடும் அழகு நோக்கத்தக்கது. ‘மருங்கு இலா நங்கை’ என்று சீதை குறிப்பிடப்படுகிறாள். ‘வசை இல் ஐயன்’ என்று இராமன் குறிப்பிடப்படுகிறான். இருவருக்கும் ஒன்று இல்லை; அதாவது குறையொன்று இருக்கிறது என்று சாதாரணவர் நினைக்கும்போது பழிப்பதுபோல அவ்விருவரும் குறிப்பிடுகின்றனர். ஆனால் அந்த இன்மையின் மூலமாகவே அவர்களுடைய சிறப்பு எடுத்துக் காட்டப்படுகிறது. ‘மருங்கிலா நங்கை’ என்பதற்கு ‘இல்லை என்று சொல்லுமளவிற்குச் சிறுத்திருக்கும் இடையையுடைய மகளிரில் சிறந்த வளான சீதை’ என்பது இங்கு பொருள்.

**- காத்தார் -**

இடை சிறுத்திருத்தல் பெண்டிருக்கு அழகு. இல்லையென்னுமளவுக்குச் சிறுத்த இடையினைச் சீதை பெற்றிருந்தாள் என்பது அவளுடைய அழகின் சிறப்பை உயர்த்தி நிற்கும். ‘வசை இல் ஐயன்’ என்ற சொற்றொடர் இகழ்ச்சி அல்லது குறை அல்லது பழிப்பு இல்லாத இராமன் என்று பொருள்படும். ஆக குறையில்லாத இராமன் என்று சொல்வதன்மூலம் இராமனுடைய சிறப்பு உணர்த்தப்படுகிறது. இங்கு வேறொரு நயத்தையும் காணமுடிகிறது. சீதையைக் குறிப்பிடும்போது அவளுடைய உடலழகின் சிறப்பு உணர்த்தப்படுகிறது. இராமனைப் பற்றிக் குறிப்பிடும்போதோ அவனுடைய பண்புநலனும் ஒழுக்கத்தின் சிறப்பும் உணர்த்தப்படுகின்றன.

பாயிரத்திலேயே, ‘நடையினின்றுயர் நாயகன்’ என்று இராமனைக் கம்பன் குறிப்பிடுவான். இராமனுடைய சாயல் இப்போது அந்த நடையின் நின்றுயர் நாயகன் என்ற தகைமைக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்று ஐயப்பாடு எழக்கூடுமல்லவா? அதாவது கன்னிமாடத்தில் ஒரு பெண் நிற்கிறார். வீதி வழியே சென்றுகொண்டிருக்கும் இராமன் அவளைப் பார்க்கிறான். கண்டதும் காதல் கொண்டுவிடுகிறான். இது முறையா? இராமனுடைய இந்தச் செயல் இழுக்கானதாகாதா? என்ற கேள்விகள் எழக்கூடும்.

தமிழர் வாழ்க்கையில் திருமணத்திற்கு முன் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் கண்டு பேசிக் காதல்கொள்வது இயற்கையானதாகவும் பொருத்தமான தாகவும் நியாயமானதாகவுமே கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழில் தோன்றியுள்ள அகத்துணை நூல்கள் அனைத்தும் இதற்குச் சான்று பகரும். எனவே இராமன் சீதையைக் கண்டவுடன் அவள் மேல் காதல்கொண்டது தமிழர் பண்பாட்டிற்கு எந்தவகையிலும் புறம்பானதாகாது. என்றாலும், அப்படிக் கருத்தொருமித்துவிட்ட இருவருக்குமிடையே திருமணம் நடைபெறுவதற்கு எந்தத் தடையும் இருக்காது என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும். பழந்தமிழர் வாழ்வில் இந்த நிலையினை அடைந்துவிட்ட பிறகு திருமணத்திற்குப் பெற்றோர் தடையாக இருந்தனர் என்பது இல்லை. அப்படியானால், இங்கு வேறென்ன தடை இருக்கமுடியும்?

கண்டதும் உண்டாகும் காதல் இப்படியெல்லாம் சிந்திப்பதில்லை. இங்கு சம்மந்தப்பட்டவனோ நடையினின்றுயர் நாயகன். அவனளவில் திருமணத்திற்குத் தடையாக இரண்டை எதிர்பார்க்கமுடியும். ஒன்று இதனைச் சாதிப்பவனுக்குத்தான் தன் மகளைத் திருமணம் செய்து கொடுப்பதாக அவள் தந்தை நிபந்தனை விதித்திருப்பது. அப்படி நிபந்தனையாக விதிக்கப்பட்டதை சாதித்துவிடும் வல்லமையும் திறமையும் இராமனுக்கு உண்டு. ஆகையால் அத்தகைய நிபந்தனை எதுவும் தடையாக இருக்க முடியாது. இங்கோ சிவதனுசை வளைப்பவனுக்கே சீதையை மணம் செய்விப்பதாக ஜனகன் நிபந்தனை விதித்திருந்தான் என்றும், அந்த நிபந்தனையை நிறைவேற்றக் கூடியவனே இராமன் என்பதை உணர்த்தும் வகையிலேயே கம்பன் ‘வரிசிலை அண்ணல்’ என்று குறிப்பிட்டான் என்பதைக் கண்டோம். ஆக முதலா வதாக எடுத்துக்கொள்ளப்பட்ட தடை இங்கே இருப்பதற்கு இடமில்லை.

இரண்டாவதாக வேறொரு தடை இருக்கக்கூடும். அதாவது அந்தப் பெண் முன்னதாகவே திருமணமானவளாக இருத்தல். அப்படி இருந்தால் இப்படிக் கண்டதும் காதல் கொண்டவர்களிடையே திருமணம் ஆகமுடியாது. இது பற்றி இராமனே பின்னர் பேசுவான். தனித்திருக்கும் இராமன், சீதையைப் பற்றிய நினைவாகவே இருக்கிறான். அப்போது இந்த எண்ணம் அவன் மனதிலே தோன்றுகிறது. சிந்தனையின் முடிவாக அவன், ‘சீதை கன்னியே; கடிமணம் ஆகாதவளே’ என்ற முடிவுக்கு வருகிறான். இராமனுடைய இந்த சிந்தனையை,

**“ஏகும் நல்வழி;அவ்வழி என் மனம்**
**ஆகுமோ? இதற்கு ஆகிய**
**காரணம்,**
**பாகுபோல் மொழிப் பைந்தொடி,**
**கன்னியே,**
**ஆகும். வேறு அதற்கு ஐயுறவு**
**இல்லையே!”**

என்ற பாட்டில் கம்பன் வடிப்பான்.

‘என் மனம் நல்லவழியின்றித் தவறான வழியில் போகுமோ? போகாது. அப்படி யிருக்க, இந்தச் சீதையின்பால் என் மனம் செல்லுமாயின் நிச்சயமாக அவள் கன்னியே ஆவாள். இதற்கு எந்தவிதமான ஐயமும் இல்லை’ என்று இராமன் முடிவு கட்டுகிறான். இதுகாறும் தன்மனம் சென்ற நெறியைத் தெரிந்தவன் அவன். இதுவரையில் அவன் மனம் தவறான வழியில் சென்றதே இல்லை. ஆகையால் சீதையின்பால் தன்மனதை இழந்த போதும் அந்த மனம் தவறான வழியில் சென்றிருக்கமுடியாது. ஆகவே அந்தச் சீதை கன்னியாகவே இருக்க வேண்டும். இதில் எவ்வித ஐயமும் இல்லை என்ற திட்டவட்டமான முடிவுக்கு வந்துவிடுகிறான்.

இவ்வாறு தன் மனச்சாட்சியையே உறைகல்லாகக் கொண்டு ஐயத்திற்கு இடமிருக்கக்கூடிய கட்டங்களில் ஒரு முடிவுக்கு வருவது மனோதத்துவ அடிப்படையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றே ஆகும். காளிதாசர் தம் சகுந்தல நாடகத்தில் ‘சான்றோர், ஐயப்பாட்டிற்குரிய இடங்களில் தம் அந்தக்கரணத்தில் ஆழந்த ஈடுபாட்டையே பற்றுக்கேடாகக் கொள்வர்’ என்று கூறியிருப்பது இதனை வலியுறுத்தும். எனவேதான், சீதையின் பால் தன் கருத்தை இராமன் இழந்தது குற்றத்திற்கு உள்ளாகாது என்பதை வலியுறுத்த ‘வசை இல் ஐயன்’ என்று குறிப்பிடுவான் கவிஞன்.

ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே உள்ள ஈர்ப்புச்சக்தி எவ்வளவு வலிமை உடையதாக இருந்தபோதிலும், அது வரம்பு மீறி எல்லை கடந்து கரைபுரண்டு விடுவதில்லை. அப்படி இருக்குமானால் திருமணம் என்ற நியதிக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொருள் இல்லாமலேயே போய்விடும். ஆகவே இராமன் தன் மனதிலே சீதையிடத்துத் தனக்கு உண்டான காதலை சிந்தித்து, சோதித்து, பொறுப்போடு நடந்தது, ‘அவன் நடையின் நின்று உயர் நாயகன்’ என்ற காரணத்தால் மாத்திரமல்ல; தமிழில் அமைந்துள்ள இலக்கியம் அனைத்தின்படியும் எந்த ஆண்மகனும் அப்படிச் சிந்தித்துப் பார்க்கக்கூடியவனே. இதன் காரணமாகவேதான் சீதைக்கும் இதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. கன்னிமாடத்தின் மேல்நின்று கொண்டிருந்த அவள் வீதியிலே நடந்து சென்ற இராமனைக் கண்டு தன் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டாள் என்பது உண்மை. ஆனால் அப்படிச் சென்றவன் யார்! அவன் பெயர் என்ன? அவனுடைய தகுதி என்ன? என்பது பற்றியெல்லாம் அவளுக்கு எதுவும் தெரி யாது. அதேசமயத்தில் சிவதனுசை வளைப்பவன் யாரோ அவனுக்குத் தான் தன்னைத் திருமணம்செய்து கொடுப்பதாகத்தான் தந்தையாகிய ஜனகன் முடிவு செய்திருக்கிறார் என்பதும் தெரியும். ஆகவே அவள் காதல் நிறை வேற வேண்டுமானால், வீதியிலே அவள் கண்ட இராமன் சிவதனுசை வளைக்கக்கூடியவனாக இருக்க வேண்டும்.

இராமன் சிவதனுசை முறித்துவிட்ட பிறகு, நீலமாலை என்னும் அவளுடைய தோழிவந்து நடந்ததைக் கூறுகிறாள். அப்படிச் சொல்லும்போது இராமனைச் சிந்திக்கிறாள். “பூங்கணை மயல் விளை மதனர்க்கும் வடிவு மேன்மையான்’ என்று அவனுடைய வடிவத்தை வர்ணிக்கிறாள். இராமன் என்பது அவன் பெயர் என்றும் குறிப்பிடுகிறாள். அவன் தசரதன் மகன் என்றும் சொல்லுகிறாள்.

**“இளைய கோவொடும், பராவ அரு முனியோடும், பதிவந் தெய்தினாள்”**

என்று சொல்கிறாள். வில்லை எடுத்து வளைக்கையில் அது முறிந்து விழுந்தது என்றும் சொல்கிறாள். முதல் நாள் வீதியிலே சென்றவன் தசரதன் மகன் என்பதோ, இராமன் என்பதோ சீதைக்குத் தெரியாது. ஆனால், அவள் கண்டிருக்கிறாள். ஆகையால் நீலமாலை சொன்னவற்றிலிருந்து வில்லை வளைத் தவன் அவனாகத்தான் இருக்க வேண்டும் என்று ஓரளவு உறுதியும் செய்து கொள்கிறாள். என்றாலும் அவன்தானாவென்று அவளால் நிச்சயமாக முடிவு செய்வதற்கு முடியவில்லை. அப்படி வில்லை வளைத்தவன் யார் என்பதைக் கண்ட பிறகுதான் முதல் நாள் அவன் பார்த்தவன்தானா அவன்? அல்லது வேறு ஒருவனா என்று தெரியும். அதேசமயத்தில், சீதையினுடைய மனநிலையில் அப்படி ஒரு திடமான முடிவுக்கு வரவும் முடியாது.

(தொடரும்)

வாரமொரு வாழ்வியல்
## சிந்தனை

# முரண்பாடுகளை தீர்க்கும் சமன்பாடு



**சிறந்த வழிமுறை**

1. மற்றவரின் கருத்துகளை மதிக்கவும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையையும் பெறுதல்.
2. அமைதியாயிருத்தல், மறுக்காதிருத்தல், மரியாதை கொடுத்தல்.
3. மன்னிக்கவும், மறக்கவும் தயாராயிருத்தல் மற்றும் சீற்றத்தைக் கைவிடுதல்.
4. சமாதானத்தை எதிர்பார்த்து தண்டனையைத் தவிர்க்கும் குணம்.
5. முரண்பாட்டை நேர் கொள்வது இருவருக்கும் நன்மையே என்ற நம்பிக்கை உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் திறனும் முரண்பாட்டுத் தீர்வும்:

முரண்பாடுகள் வலிமையான உணர்வுகளைத் தூண்டிவிடுவதோடு மனக்காயத்தையும், ஏமாற்றத்தையும், உடல் - மன நலக்கேட்டையும் விளைவிக்கும். முரண்பாடுகளை ஆரோக்கியமற்ற வழிகளில் கையாளும்போது கோபத்தையும், உறவு முறிவையும் சரிசெய்ய முடியாத விளைவுகளையும் ஏற்படுத்தும். ஆனால், சரியான வழியில் கையாளும் போது மற்றவர்களைப் புரிந்து கொள்வதோடு நம்பிக்கை மற்றும் உறவுகளை வலுப்படுத்தலாம். கணவன், மனைவியருக்கிடையே ஒன்றுமில்லாத விஷயங்களுக்கு எல்லாம் விவாதம் ஏற்படுவதும் பிரிவதும் முரண்பாடுகளைக் கையாளும் திறன் இல்லாததே. வீட்டை ஒழுங்குபடுத்துவது உடையணிவதில் ரசனையில்லாமல் இருப்பது போன்ற சிறு பிரச்சினைகளுக்குக்கூட சண்டை ஏற்படுகிறது. அமைதியாக இருப்பதன்மூலம் மற்றவர்களின் வார்த்தைகளையும் நடத்தைகளையும் சரியாகப் புரிந்துகொண்டு உறவாடலாம். உணர்ச்சிகள் கட்டுப்பாட்டில் இருக்கும்போது உங்களுடைய தேவைகளை பயமுறுத்தாமலும் கோபப்படாமலும் தெரிவிக்கலாம்.

மற்றவர்கள் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளுக்கும் பேசுவதற்கும் இடம்கொடுத்து கவனியுங்கள். மரியாதைக் குறைவான வார்த்தைகளையும் நடத்தைகளையும் தவிருங்கள். முரண்பாடுகள் அழுத்தும் சூழ்நிலைகள்: நீங்கள் சந்திக்கும் பிரச்சினை எதுவாக இருந்தாலும் அந்தநேரத்தில் சமநிலையிலும், ஒருமுகப்பட்டும், கட்டுப்பாடாகவும் இருப்பது முக்கியம். இல்லை என்றால் முரண்பாடுகளை முறையற்ற வழிகளில் கையாண்டு பிரச்சினை தீவிரம் அடையக்கூடும். மக்கள் பொதுவாக முரண்பாடுகளைக் கையாளத் தெரியாமல் கீழ்க்காணும் வழிகளில் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறார்கள். நெருப்பின் மேல்நிற்பது: ‘சுடுதண்ணியைக் காலில் ஊற்றிக் கொண்டதைப் போல’ என்று சொல்வார்களே அதுபோல் உணர்ச்சிகள் சூடேறியும் முடுக்கிவிடப்பட்டும் அதிக உணர்ச்சிவயப்பட்டு ஓரிடத்தில் உட்காராமல் இருப்பது.

**அதீத அமைதி :**

எந்த உணர்ச்சியையும் வார்த்தைகளையும் வெளிப்படுத்தாமல் விலகியிருத்தல், மௌனம் காத்தல். மௌனப் போராட்டம்: இது இருவேறு உணர்ச்சிகளின் கலவையான வெளிப்பாடு. செயலற்ற வெளித் தோற்றமும் உள்ளுக்குள் புகைமூட்டமுமாக இருப்பது. மனஅழுத்தம் முரண்பாட்டைக் கையாளும் திறனைக் குறைக்கிறது. அதாவது,

அடுத்தவர்களின் உடல் மொழியைப் (body language) புரிந்துகொள்ள இயலாது.

ஒருவர் சொல்வதைக் கேட்கும் மனநிலை இருக்காது.

உங்கள் உணர்ச்சிநிலை பற்றிய விழிப்புணர்வு இல்லாமை.

உள்மனத் தேவைகளோடு தொடர்பு இல்லாமை.

உங்கள் தேவைகளை தெளிவாக வெளிப்படுத்த இயலாமை.

நீங்கள் மனஅழுத்தத்தோடு இருப்பதை எப்படித் தெரிந்து கொள்வது?

உங்கள் உடலின் ஏதேனும் ஒரு பகுதி அழுத்தமாகவோ, இறுக்கமாகவோ உணரலாம்.

மூச்சு விடும்போது வயிறு மற்றும் மார்புப் பகுதி இயல்பாக அசையாமல் இருக்கலாம்.

முரண்பாடு உங்கள் நேரத்தையும் கவனத்தையும் உறிஞ்சிக்கொள்ளலாம்.

உணர்ச்சிகளைப் பற்றிய விழிப்புணர்வு வேண்டும்.

மற்றவர்களைப் பாதிக்கும் காரணிகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

உங்களை நீங்களே புரிந்து கொள்வதோடு உங்களைப் பாதிக்கும் காரணிகளையும் புரிந்துகொள்ள வேண்டும்.

முரண்பாடு தீரும்வரை அந்த நோக்கத்திலிருந்து விலக வேண்டாம்.

கோபம், கவலை, பயம், மகிழ்ச்சி போன்ற மெய்ப்பாடுகளைப் பொருத்தமான இடத்தில் பொருத்தமான முகபாவனையோடு வெளிப்படுத்த முடிகிறதா?

முரண்பாடுகளைப் பற்றிய முடிவெடுக்க வேண்டியவரின் உணர்ச்சிகளுக்குக் கவனம் செலுத்தமுடிகிறதா? முரண்பாடு என்பது இயல்பானது, வரவேற்கத்தக்கது, நலமான உறவுமுறை என்ற நோக்கத்திற்குத் தேவையானது. இதை சிறப்பாகக் கையாண்டால், நண்பர்கள், உறவினர்கள், உடன் பணியாற்றுபவர்கள், வாழ்க்கைத் துணைவர்கள் ஆகியோருடன் உள்ள பிணைப்பு வலுவாகவும் நீடித்தும் இருக்கும்.

(தொடரும்...)

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

### குறுக்கெழுத்துப் போட்டி - 663

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | | 16 | 17 | 18 |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| 25 | | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | |

### குறுக்கெழுத்துப் போட்டி 661 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ரு | 3 ச் | 4 சி | 5 ப் | 6 பு |
| 7 சோ | 8 ட | 9 சா | 10 வ | 11 தா | 12 னி |
| 13 க | 14 ம் | 15 ர | 16 சா | | 18 த |
| 19 வ | | 21 அ | 22 மி | 23 ம் | 24 மா |
| 25 ன | 26 ஊ | 27 ம் | | 29 க | 30 ன |
| 31 ம் | 32 கை | | 34 ந் | 35 சி | 36 து |

**இடமிருந்து வலம்**

01. கண்ணுவ முனிவரின் சாபத்திற்கு ஆளான காதலன்.
07. எதிர்பேசுதல். (4ஆம் எழுத்து இடம் மாறியுள்ளது)
16. அரிசியில் செய்த சிற்றுணவு. (குழம்பியுள்ளது)
22. இறைவனிடம் இருந்து கிடைப்பது. (திரும்பியுள்ளது)
27. மிகவும் பயந்தநேரத்தில் வெளிவிடும் சத்தம். (குழம்பியுள்ளது)
31. மரவேலை செய்வன். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. கிருஸ்ணராச்சியம்.
2. ஒரு கற்பனைப் பறவை. (திரும்பியுள்ளது)
3. உலர, காய. (திரும்பியுள்ளது)
4. இருள், மனவிருள். (குழம்பியுள்ளது)
5. பயமுறுத்துதல், அச்சுறுத்தல். (குழம்பியுள்ளது)
6. இடையன், சமர்த்தன். (குழம்பியுள்ளது)
27. தண்ணீர் மொள்ளும் பாத்திரம், உறவு கலப்பை போற பாதை. (திரும்பியுள்ளது)
31. "............... லிங்கு டம்பக்கு"

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 22.02.2016 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 663
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்பியோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.661 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

P.சுரேந்திரன்,
100, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கே.இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், வட்டுக்கோட்டை.
02. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
03. சி.நேத்ரா, பேராதனை, கண்டி.
04. எம்.இமான், முஸ்லிம் தெரு, யாழ்ப்பாணம்.
05. ச.யதுஸா, மிருசுவில், உசன்.
06. என்.எம்.எப்.நிமால், பிரதான வீதி, பதுளை
07. இ.அஸ்வினி, புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.
08. தா.ஜெகநாதன், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
09. அ.காவியா, பசல்ஸ் லேன், வெள்ளவத்தை.
10. கு.நிசாந்தினி, ஹட்டன்.



## தங்கையின் முக்கியத்துவத்துக்காக வேதாளத்தில் நடித்தேன்

### லட்சுமி மேனன்

அஜித் நடிப்பில் வெளிவந்து மிகப்பெரிய வெற்றியடைந்த வேதாளம் படத்தில் அஜித்துக்கு தங்கையாக நடித்தவர் லட்சுமிமேனன். முன்னணி ஹீரோயின்கள் வரிசையில் இருந்த லட்சுமிமேனன், திடீரென்று தங்கை கதாபாத்திரத்தில் நடித்தது தமிழ் திரையுலகினரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அஜித் என்ற பெரிய நடிகரின் படம் என்பதால் லட்சுமிமேனன் இந்த படத்தில் அவருக்கு தங்கையாக நடிக்க ஒப்புக்கொண்டார் என்றும் கூறப்பட்டது. ஆனால், தற்போது அஜித்துக்காக இந்த படத்தில் தங்கை வேடத்தில் நடிக்கவில்லை என்று லட்சுமிமேனன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, வேதாளம் படத்தில் தங்கை வேடத்தில் நடித்ததற்கான காரணம் அஜித் என்பதற்காக அல்ல. இப்படத்தின் கதைதான் காரணம். ஒரு தங்கை கதாபாத்திரம்கூட பெரியளவில் பேசப்படும்படியாக இந்த கதை இருந்தது.

இந்த படத்தின் முழுக்கதையையும் இயக்குனர் அஜித் சேரிடம்கூட சொல்லவில்லை. என்னிடம் மட்டும்தான் முழுக்கதையையும் கூறினார். அந்த கதையில் என்னுடைய கதாபாத்திரம் ரொம்பவும் வலுவாக இருந்ததை உணர்ந்து இதில் நடிக்க சம்மதித்தேன். இனிவரும் படங்களில் தங்கை வேடத்தில் என்னை நடிக்க அழைத்தால் கண்டிப்பாக மறுத்துவிடுவேன் என்று கூறினார்.

## தனுஷ் தம்பிக்கு இசையமைக்கும் அனிருத்

வேலையில்லா பட்டதாரி படத்தில் தனுஷின் தம்பியாக நடித்தவர் ஹிரிஸ்கேஷ். இவர் தற்போது ரம் என்ற படத்தில் கதாநாயகனாக நடித்துவருகிறார். இப்படத்தை சாய் பரத் என்பவர் இயக்குகிறார். இப்படத்தில் இவருக்கு ஜோடியாக சஞ்சிதா ஷெட்டி, மியா ஜோர்ஜ் ஆகியோர் நடிக்கிறார்கள்.

இந்த படத்திற்கு அனிருத் இசையமைக்கவிருக்கிறார். பீப் பாடல் சர்ச்சைக்கு பிறகு அனிருத் இசையமைக்க



## தொடர்ந்து முதலிடத்தில் சிம்பு

சூப்பர்ஸ்டார் சிம்பு கடந்த சில வருடங்களாக தொடர்ந்து பல பிரச்சினைகளில் சிக்கி வந்தார். கடைசியாக வந்த பீப் சாங் பிரச்சனையிலிருந்து அச்சம் என்பது மடமை-யடா படத்தின் தள்ளிப்போகாதே பாடல் மூலம் மீண்டுவந்தார். பாடல் வெளியானதிலிருந்து இளைஞர்களின் ரிங்டோனாக மாறிப்போனது. 36 இலட்சத்தை தாண்டி பார்வையாளர்களை கவர்ந்துள்ளது. இந்த பாடல் தொடர்ந்து கடந்த சில வாரங்களாக டொப் 10 வரிசையில் இடம்பிடித்துவருகிறது. சென்னையின் பிரபல வானொலிகளில் தள்ளிப்போகாதே தான் முதலிடத்தில் இருக்கிறதாம். இதனையடுத்து என்னம்மா இப்படி பண்றீங்களே பாடல் இரண்டாவது இடத்தில் உள்ளது.

## அறிவழகன் இயக்கத்

பிரம்மாண்ட இயக்குனர் ஷங்கர் தயாரிப்பில் வெளிவந்த ஈரம் படத்தை இயக்கியவர் அறிவழகன். இப்படத்தை தொடர்ந்து இவர் இயக்கிய ஆறாது சினம் வருகிற இம்மாதம் 12ஆம் திகதி வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், அறிவழகன் இயக்கும் அடுத்த படத்தில் நடிக்க அருண் விஜய் ஒப்பந்தமாகியுள்ளதாக கொலிவூட் வட்டாரங்களில் பேசப்படுகிறது. அதிரடி

அக்சன் க
வெளிவந்த
இப்படத்
மற்றும் தெ
வருவதாக
அறிவிப்பு
அறிவழ
அருள்நிதி,
தத்தா உ
குறிப்பிடத்த



## சாக

## விமர்ச

பள்ளி ஆசிரியராக
மகள் மற்றும் மகன்
வருகிறார். மிகவும் க
குடும்பத்தை நடத்தி
பணம் சம்பாதிக்கல
பிரசாந்துக்கும் கரு
வாக்குவாதமாக
பேசுகிறார் பிரசா
அதை 2 மணி
காட்டுகிறேன்"
ஏற்ற நாசரும்
கொடுக்கிறார்
அந்த
"மேட்ச் பி
செல்கிறா
யில் ஒரு
செல்கிற
செல்கிற
அப்
பற்றி பே
மேட்ச்
கொண்
இறக்கி

## ...ஷ் தம்பிக்கு ...மக்கும் அனிருத்

...டதாரி படத்தில் தனுஷின்
ஹிரிஸ்கேஷ். இவர் தற்போது
தாநாயகனாக நடித்துவருகிறார்.
த் என்பவர் இயக்குகிறார்.
ந ஜோடியாக சஞ்சிதா ஷெட்டி,
பார் நடிக்கிறார்கள்.
அனிருத்
றார். பீப் பாடல்
னிருத்

ஒப்பந்தமாகியுள்ள படம் என்பதால், இப்படத்தின்மீது இப்போதே எதிர்பார்ப்பு அதிகமாகியுள்ளது. ஹிரிஸ்கேஷ் அறிமுகமான வேலையில்லா பட்டதாரி படத்துக்கும் அனிருத் இசையமைத்திருந்தார். தற்போது ஹீரோவாக களமிறங்கியுள்ள ரம் படத்திற்கும் அனிருத் இசையமைக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் காமெடி நடிகர் விவேக்கும் நடிக்கவிருக்கிறார். ரம் படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் இன்று வெளியாகியுள்ளது. இப்படத்தை ஆல் இன் பிக்சர்ஸ் நிறுவனம் சார்பில் விஜய ராகவேந்திரா தயாரிக்கிறார். இவர் ஏற்கெனவே, பாபி சிம்ஹா, சிவா, கௌரவ் நடிப்பில் வெளிவந்த மசாலா படம் என்ற படத்தை தயாரித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





வீரசிவாஜி

## ...கன் இயக்கத்தில் அருண்விஜய்

...பக்குனர் ஷங்கர்
...வந்த ஈரம் படத்தை
...ழகன். இப்படத்தை
இயக்கிய ஆறாது
...மாதம் 12ஆம் திகதி
எதிர்பார்க்கப்படுகிறது.
அறிவழகன் இயக்கும்
...நடிக்க அருண் விஜய்
...ாக கொலிவூட்
...சப்படுகிறது. அதிரடி

அக்சன் கலந்த இந்த படத்தை ஆறாது சினம் படம் வெளிவந்த பிறகு தொடங்கவிருப்பதாக கூறப்படுகிறது.

இப்படத்தில் நடிக்கும் பிற நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு நடைபெற்று வருவதாகவும், விரைவில் இதுகுறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அறிவழகன் இயக்கியுள்ள ஆறாது சினம் படத்தில் அருள்நிதி, ஐஸ்வர்யா ராஜேஷ், ஐஸ்வர்யா தத்தா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## காதலர் தினத்தில் யுவனின் பாடல்

கழுகு படம்மூலம் புகழ்பெற்ற கிருஷ்ணா நடிப்பில் கடைசியாக யட்சன் படம் வெளியானது. இப்படம் சுமாரான வரவேற்பை பெற்றது. இப்படத்தையடுத்து ஆண்மை தவறேல் படத்தை இயக்கிய குழந்தை வேலப்பன் இயக்கத்தில் யாக்கை என்னும் படத்தில் நடித்துவருகிறார்.

இந்த படத்தில் கிருஷ்ணாவிற்கு ஜோடியாக ஸ்வாதி நடித்துவருகிறார். மேலும் பிரகாஷ்ராஜ் உள்ளிட்ட பலர் இப்படத்தில் நடித்து வருகிறார்கள். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்துவருகிறது. இந்நிலையில், இப்படத்தின் பாடல் ஒன்றை காதலர் தினத்தை முன்னிட்டு 13ஆம் திகதி வெளியிட இருக்கின்றனர்.

யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ள இப்படத்தின் பாடலை நா.முத்துக்குமார் எழுதியுள்ளார். இப்பாடல் நல்ல வரவேற்பை பெரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்படம் மே அல்லது ஜூன் மாதம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தெறி படத்தின் கதாபாத்திரத்தை கசியவிட்ட எமி ஜாக்சன்

நடிகை எமி ஜாக்சன் தற்போது விஜய்யின் தெறி படத்திலும், ரஜினியின் 2.0 படத்திலும் நடித்து வருகிறார். இந்நிலையில் இப்படங்களில் என்ன கதாபாத்திரத்தில் நடிக்கிறார் என்பது தற்போதுவரை தெரியாமலே இருந்துவந்தது.

இன்று நமக்கு கிடைத்த தகவல்படி, தெறி படத்தில் எமி மலையாள ஸ்கூல் டீச்சராகவும், 2.0 வில் ரஜினிக்கு உதவும் விஞ்ஞானியாக நடித்துள்ளாராம். இதில் தெறி படம் ஏப்ரல் மாதம் வெளியாக உள்ளதால் கூடுதல் எதிர்பார்ப்பு எகிறியுள்ளது.



## சாகசம் விமர்சனம்

நடிகர் : பிரசாந்த், நடிகை: அமண்டா, இயக்குனர் : அருண்ராஜ் வர்ம, இசை : தமன், ஒளிப்பதிவு : சக்தி சரவணன்

பள்ளி ஆசிரியராக பணிபுரிந்துவரும் நாசர், மனைவி, மகள் மற்றும் மகன் பிரசாந்துடன் சென்னையில் வாழ்ந்து வருகிறார். மிகவும் கஷ்டப்பட்டு பணம் சம்பாதித்து குடும்பத்தை நடத்திவரும் நாசருக்கும், கஷ்டப்படாமல் பணம் சம்பாதிக்கலாம் என்று கூறும் மகன் பிரசாந்துக்கும் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. இது வாக்குவாதமாக மாற, தந்தையிடம் வாய்ச்சவடால் பேசுகிறார் பிரசாந்த். "10 ஆயிரம் கொடுங்கள் அதை 2 மணிநேரத்தில் 1 இலட்சமாக மாற்றிக் காட்டுகிறேன்" என்று பிரசாந்த் கேட்க, சவாலை ஏற்ற நாசரும் 10 ஆயிரம் ரூபாயை பிரசாந்திடம் கொடுக்கிறார்.

அந்த பணத்தை எடுத்துக் கொண்டு "மேட்ச் பிக்சிங்கில்" பந்தயம் கட்டுவதற்காக செல்கிறார். அப்போது சோனு சூட் தலைமையில் ஒரு கும்பல் வங்கியில் கொள்ளையடிக்க செல்கிறது. அவர்களிடம் லிப்ட் கேட்டு செல்கிறார் பிரசாந்த்.

அப்போது அவர்களிடம் மேட்ச் பிக்சிங் பற்றி பேசுகிறார் பிரசாந்த். அவர்மூலம் மேட்ச் பிக்சிங் நடக்கும் இடத்தைத் தெரிந்து கொண்ட சோனு சூட் கும்பல், அவரை இறக்கிவிட்டதும், பொலிசை திசைதிருப்பி வங்கியை கொள்ளையடிப்பதற்காக, மேட்ச் பிக்சிங் நடப்பதை பொலிசுக்கு தெரிவிக்கிறார்கள்.

இதனால், பொலிஸ் பிடியில் சிக்குகிறார் பிரசாந்த். அவர்களிடம், உங்களை திசை திருப்பிவிட்டு அந்த கும்பல் வங்கியில் கொள்ளையடிக்கிறது என்று கூறுகிறார். இதை நம்பாத பொலிஸ் பிரசாந்தை அழைத்துக்கொண்டு வங்கிக்கு செல்கிறது. அங்கு கொள்ளைக் கும்பலுக்கும் பொலிசுக்கும் மோதல் ஏற்படுகிறது. இதில் சோனு சூட்டின் தம்பி கொல்லப்படுகிறார். சோனு சூட் பொலிசிடம் மாட்டிக்கொள்கிறார்.

மறுநாளே தப்பிக்கும் சோனு சூட் தன்னை காட்டிக் கொடுத்த பிரசாந்தைக் கொல்ல நினைக்கிறார். சோனு வெளியில் வந்ததை அறிந்த பிரசாந்த் குடும்பத்தினர், பிரசாந்த் இறந்துவிட்டதாக பேப்பரில் விளம்பரம் செய்து சோனுவின் எண்ணத்தை திசை திருப்பிவிட்டு, பிரசாந்தை கோயம்புத்தூருக்கு அனுப்பி வைத்துவிடுகிறார்கள்.

கோயம்புத்தூரில் பிரசாந்த், நாயகி அமண்டாவை பார்த்து காதலிக்க ஆரம்பிக்கிறார்.

இறுதியில் சோனு சூட், பிரசாந்த் இருவரும் சந்தித்தார்களா? பிரசாந்த், அமண்டா காதல் என்ன ஆனது? என்பதே மீதிக்கதை.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு பிரசாந்த் நடித்திருந்தாலும், நடனம், சண்டைக்காட்சிகளில் இன்னும் அதே இளமைத் துள்ளலுடனும் அதே புத்துணர்ச்சியுடனும் சிறப்பாக நடித்திருக்கிறார். நாயகி அமண்டா நடிப்புக்கு புதுசு என்றாலும் அழகாக வந்து அளவான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். பாடல் காட்சிகளில் கவர்ச்சியால் ரசிகர்களை சூடேற்றியிருக்கிறார்.

தெலுங்கில் வெற்றி பெற்ற இப்படத்தை தமிழில் சாகசம் என்ற பெயரில் ரீமேக் செய்திருக்கிறார் இயக்குனர் அருண் ராஜ் வர்மா. தமிழில் இப்படத்தை எடுத்திருந்தாலும் தெலுங்கு சாயல் அதிகம் தெரிகிறது. குறிப்பாக கிளைமாக்ஸ் காட்சி, தெலுங்கில் வந்த அதே காட்சியை அப்படியே வைத்திருக்கிறார்கள். இதை மாற்றியிருந்தால் கூடுதலாக ரசித்திருக்கலாம்.

தமன் இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்கும் ரகம். பின்னணியிலும் சிறப்பான இசையை கொடுத்திருக்கிறார். ஷாஜி குமாரின் ஒளிப்பதிவு படத்திற்கு பலம்.

மொத்தத்தில் சாகசம் எடுபடவில்லை.



பீப்பாடல் புகழ் சிம்புவின் இது நம்ம ஆளு




# மன உணர்வுகளைப் பொருட்படுத்தாத விடுதலைப் புலிகள்



> விடுதலைப் புலிகளின் மேற்படி நடவடிக்கைகளில் பெரும்பாலும் விவசாய முதலாளிகள் தவிர்க்கப் பட்டார்கள். அதிலும் குறிப்பாக பங்கர் வெட்டும் நடவடிக்கையிலிருந்து விவசாய முதலாளிகள் முற்று முழுதாகத் தவிர்க்கப்பட்டார்கள். இதனால்... எமது குடியிருப்பைச் சேர்ந்தவர்களுக்கும் புலிகளுக்கும் இடையில் முரண்பாடுகளும், முறுகல் நிலையும் ஏற்படத் தொடங்கியது. மக்களின் மனஉணர்வுகளை பொருட்படுத்தாத விடுதலைப் புலிகள் கட்டாய இராணுவ சேவையிலும் பங்கர் வெட்டும் பின்தள வேலை களிலும் துணைப்படைப் பிரிவிலும் இணைந்துகொள்ளுமா அடிக்கடி மக்களை நிர்ப்பந்தித்தார்கள்.

**தங்கன்**

இவ்வாறு விவசாய முதலாளிகளால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விசமத்தனமான பிரச்சாரங்கள் பூரணமான வெற்றியைக் கொடுக்காவிட்டாலும், ஓரளவு வெற்றியை அவர்களுக்குக் கொடுத்தது என்றே சொல்ல வேண்டும். மேற்கூறப்பட்ட அவர்களது பிரசாரங்களால் எமது குடியிருப்பின் உருவாக்கத்தைத் தடுத்து நிறுத்தமுடியவில்லையென அவர்கள் மிகவும் பெருமிதத்துடன் கூறியபோதும்... அந்தக் குடியேற்ற நடவடிக்கைகளிலிருந்து பலர் விலகிச் சென்றுவிட்டார்கள் என்பதையும் தமது நிலஉரிமைக்காகத் துணிந்து நிற்கும் அளவுக்குப் புலிகள்மீது அவர்களிற்கு நம்பிக்கை ஏற்படவில்லை என்பதையும் மிகவும் மனவருத்தத்தோடு அவர்கள் எமக்குக் கூறினார்கள்.

இறுதியாக ஒரு அறுபது, அறுபதுதெட்டு வரையான குடும்பங்கள் மட்டுமே அந்த நில உரிமைக்கான போராட்டத்தில் தமக்கு ஏற்படப்போகும் இழப்புக்களைப் பற்றிக் கவலைப்படாமல் மிகவும் உறுதியுடன் நின்று எமது குடியிருப்பு சம்மந்தமான பணிகளை உறுதியுடனும் மிகுந்த உற்சாகத்துடனும் மேற்கொண்டனர். இதனால் எமது காணி திருத்தவேலைகள் மிகவும் வேகமாகச் செய்து முடிக்கப்பட்டது.

காணிகள் யாவும் திருத்தப்பட்டு முடிந்ததும் உதவி அரசாங்க அதிபர் திருத்தப்பட்ட காணிக்கு வந்தார். எமக்குரிய காணியை கால் ஏக்கர் வீதம் அளந்து எம்மிடம் கையளித்தார். அத்தோடு பொது நோக்கு மண்டபத்திற்கும் ஏனைய சமூகப் பணிகளிற்குமென முக்கால் ஏக்கர் வரையான காணி உதவி ஒதுக்கப்பட்டது. எமது முயற்சிக்கு முழுமையான வெற்றி கிடைத்து விட்டதாக எண்ணி நாமெல்லாம் மகிழ்ந்தோம். கிட்டத்தட்ட 150, 200 வருடங்களிற்குமுன் இந்தியாவில் இருந்து வெள்ளையனால் கொண்டு வரப்பட்டு இலங்கையின் மலை நாட்டுப் பகுதிகளில் குடியேற்றப்பட்ட நாங்கள் வன்னிப் பகுதியிலே கால் ஏக்கர் நிலத்திற்கு 2003 தான் சொந்தக்காரர்களாகினோம். அந்த நாள் எமது வாழ்க்கையிலே மறக்கமுடியாத மகிழ்ச்சி நிறைந்த நாளாக இருந்தது. இப்போது எமது குடியிருப்பிலே மேலும் பலர் நம்பிக்கையோடு வந்து குடியேறினார்கள்.

எலிவளை என்றாலும் தனிவளை வேண்டும் என்ற முதுமொழியின் அர்த்தத்தை இப்போதுதான் நாம் முழுமையாக அனுபவித்தோம். எமக்கான நிலத்தில் நாமே சிறு சிறு ஓலைக்குடிசைகளை அமைத்துக் கொண்டு குடியேறியபோதும், அந்தச் சிறுகுடிசைகள் அனைத்தும் அன்று எமக்குப் பெரும் மாளிகைபோல் தெரிந்தது. இப்போது எங்கடை காணியில் எங்கடை வீட்டில் ஓர் நிரந்தரமான வாழ்வை நிம்மதியாக வாழ ஆரம்பித்தோம்.

இவ்வாறு நாம் வாழ்ந்து கொண்டிருக்கும்போது திடீரென ஒரு நாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் வாகனம் விழுந்து எழும்பி எமது குடியிருப்புக்குள் வந்துசேர்ந்தது. வாகனத்திலிருந்து சிரித்த முகத்துடன் இறங்கிய தமிழ்ச்செல்வன் அவர்கள் எங்கள் குடியிருப்பை பார்வையிட்டார். அத்தோடு எம்முடனும் உரையாடி விட்டுச் சென்றார். அவர் எமது குடியிருப்புக்கு வந்து சென்ற ஒரு சில வாரங்களில் அவரது உத்தரவின் பேரில் ஓலைக்குடிசைகள் யாவும் உறுதியான தகரக்கொட்டில்களாய் மாறியது. எங்கள் தரக்கொட்டில்கள் அனைத்திற்கும் சோலர் பொருத்தப் பட்டு மின்சாரம் வழங்கப்பட்டது. இப்போது எமது வீடுகள் அனைத்தும் மின்சார ஒளியில் பிரகாசித்தது.

மேலும் பொது நோக்கங்களிற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தில் பொதுநோக்குச் செயற்பாட்டிற்கான மண்டபங்கள் கட்டப்பட்டன. சிறுவர் பாடசாலை மண்டபம், சிறுவர் பராமரிப்பிற்கான மூன்று மண்டபங்கள், ஒரு பொதுமண்டபம், ஒரு காரியாலய மண்டபம், ஒரு சத்துணவு தயாரிப்பதற்கான கட்டடம் என வேகமாகக் கட்டி முடிக்கப்பட்டது. மேற்படி கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டதும் எமது குடியிருப்பைச் சேர்ந்த ஆசிரியைகளான இராணி, கலா ஆகியோரும் சிறுவர் பராமரிப்பிற்காக புஸ்பா ஆகியோரும் T.R.O வால் நியமிக்கப்பட்டு ஆசிரியர்களிற்கான கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

இக்குடியிருப்பு மாணவர்களின் கல்விச் செயற்பாட்டையும் கண் காணித்து ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்ச்செல்வன் அவர்களால் திரு. கண்ணையா என்பவர் அனுப்பப்பட்டார்.

இப்போது 'புலேந்திரன் குடியிருப்பு' என்ற பெயருடன் சிறுவர் பராமரிப்பு - பாலர் பாடசாலை என எமது குடியிருப்பு செயற்படத் தொடங்கியது. பாடசாலைக்குப் போக மறுக்கும் பிள்ளைகளை வீடுவீடாகச் சென்று அவர்களை பாடசாலைக்கும் அனுப்பிக்கொண்டிருந்தார் கண்ணையா.

நாங்கள் எங்கள் பிள்ளைகளைப் பற்றி எந்த ஒரு மனக்கவலையும் இல்லாமல் எமது குடியிருப்பில் எமது வீட்டில் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தோம்.

2005ஆம் ஆண்டு தொடங்கியது. அமைதியாயும் மகிழ்ச்சியாயும் போய்க்கொண்டிருந்த எமது வாழ்வில் போர் மேகம் சூழத் தொடங்கியது. பேச்சுவார்த்தையில் நம்பிக்கை இழந்துகொண்டிருந்த விடுதலைப் புலிகள் போருக்கான ஆயத்தங்களைப் படிப்படியாக ஆரம்பித்தார்கள். பங்கர் வெட்டுதல், பொது மக்களிற்கான தற்காப்புப் பயிற்சி, புதிய போராளிகளை இயக்கத்தில் இணைத்தல் எனத் தமது போருக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளத் தொடங்கினார்கள்.

விடுதலைப் புலிகளின் மேற்படி நடவடிக்கைகளில் பெரும்பாலும் விவசாய முதலாளிகள் தவிர்க்கப் பட்டார்கள். அதிலும் குறிப்பாக பங்கர்வெட்டும் நடவடிக்கையில் இருந்து விவசாய முதலாளிகள் முற்று முழுதாகத் தவிர்க்கப் பட்டார்கள். இதனால்... எமது குடியிருப்பைச் சேர்ந்தவர்களுக்கும் புலிகளுக்குமிடையில் முரண்பாடு களும், முறுகல்நிலையும் ஏற்படத் தொடங்கியது. மக்களின் மன உணர்வுகளை பொருட்படுத்தாத விடுதலைப் புலிகள் கட்டாய இராணுவ சேவையிலும் பங்கர் வெட்டும் பின்தள வேலைகளிலும் துணைப்படைப் பிரிவிலும் இணைந்துகொள்ளுமாறு அடிக்கடி மக்களை நிர்ப்பந்தித்தார்கள்.

இதன்காரணமாக போராளி களைக் கண்டால் மக்கள் ஓடி ஒழிந்து கொண்டிருந்தார்கள். இப்படியான ஒரு சூழலில்தான் தமிழ் அரங்கக் கல்லூரியில் இருந்து சரவணன் மாஸ்ரர் என்பவர் எமது குடியிருப்புக்கு ஒரு நாள் வந்தார்.

"அரங்கின்மூலம் கல்வி" என்ற தொனிப்பொருளுடன் எமது குடியிருப்பில் கால்பதித்த சரவணன் மாஸ்ரர் அவர்கள் மாணவர்களை நோக்கியே தனது கவனத்தைச் செலுத்தினார். அவரது அணுகு முறை எமக்குச் சற்று வித்தியாசமாய் தெரிந்தது. ஆனாலும் இவர் மாணவர்களையும் இயக்கத்துள் இணைத்துவிடப் போகின்றார் என்றே இளைஞர்களாகிய நாங்கள் கருதினோம்.

எமது குடியிருப்பின் தலைவராய் இருந்த கணேஸ் அவர்களினதும் செயலாளராய் செயற்பட்ட செல்வா அவர்களினதும் உதவியுடன் எமது குடியிருப்புக்கு வந்த சரவணன் எமது சிறுவர்களிற்கான ஆசிரியர் மூலமாக அனைத்துச் சிறுவர் களிற்கான ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்தபோதிலும் எமது குடியிருப்பு இளைஞர்களின் சந்தேகம் தீரவில்லை.
சரவணன் மாஸ்ரர் இயக்கத்திற்கு ஆள்பிடிக்கவந்தவர் எனக் கருதிய இளைஞர்கள் இவரை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். இவரை இக்குடியேற்றத்தைவிட்டு எப்படியும் வெளியேற்ற வேண்டுமெனத் தீர்மானித்தனர்.

**(தொடரும்)**

வயது அதாகிறது எண்பதுச்சொச்சம். ஆனாலும் அவர் பலவீனராமன் அல்ல. பலராமன். பிள்ளைகள் வெளியூரில். அவர் வீட்டைத் தாண்டிப்போனாலே ஹோவென்று சேனலில் ஆரவாரம் கேட்டது. வோக்கிங் ஸ்டிக் மனுசன் ஹொக்கி விளையாட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார். அல்லது கால்பந்து.

தெருநாய் முகர்ந்தபடி ஓடிக்கொண்டே இருப்பதைப்போல கால்பந்து வீரர்கள், ஆனால் காலை கோல்போஸ்ட் வந்ததும் தூக்காமல் ஓடிக்கொண்டேயிருந்தார்கள். கிரிக்கெட், வொலிபோல், ஹாக்கி, டென்னிஸ் என எல்லா ஆட்டத்திலும் பந்துகள் பாவம், அபாரமாய் உதை வாங்கின. ஓர் ஆட்டத்துக்கு உதைபந்து என்றே பெயர். ஜனங்கள் இரக்கப்படாமல் கைதட்டினார்கள்.

எத்தனையோ கப்டன் பார்த்தாச்சி. மன்சூர் அலிகான் பட்டோடி. சுனில் மனோகர் கவாஸ்கர். கபில்தேவ். அசாருதீன். கங்குலி. திராவிட். கும்ளே. தோனி என்று. காலம் மாற மாற விளையாட்டு உத்திகளும் மாறிவிட்டன. அஞ்சுநாள் கல்யாணம் ஒரு காலம். இப்ப ஒருநாள் கல்யாணம். ஓடி விளையாடு பாப்பா என்றான் பாரதி.

மாமிக்கு தொலைக்காட்சித் தொடர்கள் மேல் பிரியம் இருந்தாலும் காது கேட்காது. பெட்டிக்குக் கிட்டத்தில் போய் உட்கார்ந்து கண் இடுக்கிப் பார்த்துவிட்டு பிளவுஸ் மேட்சாவே இல்லை, என்று சொல்வாள். பக்கத்து வீட்டு மாமியிடம் போய் எங்க ஓரகத்தி பொண்ணு முழுகாமயிருக்கா என்று செய்தியறிக்கை வாசிக்கப் பிடிக்கும். நியாயதர்ம பயம் உண்டு. எல்லாத்தையும் மேலயிருந்து ஒருத்தன் பாத்துக்கிட்டிருக்கான், என அடிக்கடி வசனம் பேசுவாள். மோட்டில் வெதரிங் கோஸ்ட் போட்டால்கூட அவன் எப்படியோ எல்லாத்தையும் பார்த்துக் கொண்டிருந்தான் அவளுக்கு. லேசாய் மின்னி இடி இடித்தால்கூட வெளியே இறங்கவும்மாட்டாள். அவரையும் வெளியே இறங்கவிடமாட்டாள். இடி கேட்காது என்றாலும் மின்னலுக்கு இடிக்கும் என்று தெரியும். பிள்ளைகள் வைத்துக் கொள்ளவில்லை, என்கிற வருத்தத்தைக் காட்டிக் கொண்டதில்லை இருவரும்.

பலராமன் ரயில்வேயில் இருந்து ஓய்வுபெற்றவர். கையில் முதல்நாள் நீள இரும்புக்குச்சி தந்து தண்டவாளத்தில் ரயில் வந்துநிற்கையில் இதால் தட்டிப் பார், என்றார்கள். எதற்குத் தட்டிப் பார்க்கச் சொன்னார்கள் என்று தெரியாமலேயே பதவிகாலம் முடிந்துவிட்டது. பதவி ஓய்வுபெற்றும் கையில் குச்சி பிடிப்பதை விடமுடியவில்லை. இப்போது வோக்கிங் ஸ்டிக்கே துணை. தெருவில் நாய் பயம் இல்லாமல் நடக்கமுடிந்தது.

எப்படியோ அவர்கள் வீட்டுக்கு ஒரு பூனை வந்துபோய்க் கொண்டிருந்தது. குப்பென்று வயிறை உள்ளிடுக்கி ஒருமாதிரி சோம்பல் முறிக்கும் ஜிம்னாஸ்டிக் பூனை. கிருஷ்ணவேணிக்கு அதன்மேல் பிரியம் உண்டு. கிருஷ் ண வேணி பால் ஊற்றுவாள். பலராமனைக் கண்டால் அதற்கு பயம். நிறைய விளையாட்டு சேனல் பார்க்கிற மனுசன். கையில் வேறு குச்சி.

ஆனால் பலராமனுக்கு வீட்டு விளையாட்டுகளில் இன்டோர் கேம்ஸ் ஆர்வம் இல்லை. செஸ், சீட்டு விளையாட மாட்டார். தாயம் பல்லாங்குழி என்று கிழவிகளாக ஆடினால் முகத்தைத் திருப்பிக் கொள்வார். ஆட்டுக்கிடை போட்டாப்போல கூடாரம் வரைந்து ஆடு புலி ஆட்டம். மூணு கல்லு. சதுரத்துள் சதுரம் பிரித்து வரிசையாய் ஒரே நேர்கோட்டில் மூணு கல்லும் வைத்துக் காட்ட ஜெயம் நாலுசோழி, ஜோசியம் பார்க்கிறாப்போல ஒரு விளையாட்டு. நாலும் குப்புற விழுந்தால் பதினாறு. நிமிர்ந்து மல்லாக்க விழுந்தால் நாப்பது புளிமுத்தாட்டம், ஒத்தையா ரெட்டையா பம்பையா பரட்டையா என்றெல்லாம் ஆட்டங்கள்.

விட்டால் படுத்துக்கொண்டே ஆட ஆட்டம் கண்டுபிடித்துவிடுவார்கள். பெரிய விஸ்தாரமான களத்தில் நாலு பேர் பார்க்க ஆட வேண்டும். அதுதான் விளையாட்டு. அடிக்கிறான் பார் சிக்ஸர். சேவாக் அடித்தால் மைதானத்துக்கு வெளியே போய்த்தேடுகிறார்கள் பந்தை.

ஒருநாள் அவரும் சகாக்களும் உட்கார்ந்து சுவாரஸ்யமாய்ச் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது எதிரில் உட்கார்ந்திருந்த நண்பர் அவரிடம் கேட்டார். ஏம்ளா விதின்னா என்ன, மதின்னா என்ன விதியை மதியால் வெல்லலாம்றாங்களே, அது நிசமாளா! டாக்டர் ராதாகிருஷ்ணன் சொன்னார். நீ கலைச்சிப்போட்டியே சீட்டு எனக்கு. என்கிட்ட வந்த சீட்டு, இது என் விதி.

இதை இப்பிடி அப்பிடி மாத்தி அடுக்கி, நான் ஜெயிக்கிறேன் பாரு, அது மதி நான் "ஜெயிச்சாச்சு" என்று கடைசிச் சீட்டைக் கவுத்திப் போட்டாராம்

எதும் விளையாட்டு என்றால் மைதானத்தில் எப்படி கூடிவிடுகிறார்கள். பாப்கோர்ன் சிப்ஸ் குளிர்பானம் என தின்று தீர்க்கிறார்கள். தொலைக்காட்சிகளிலேயே கூட அதுபற்றிய விளம்பரங்கள்தான். ஆட்டக்காரர்களே இதைத் தின்னு, இதைக்குடி என்று ஆட்ட

இந்த வார சிறுகதை

எஸ்.ஷங்கரநாராயணன்



# பரமபத விளையாட்டு!

நடுவில் விளம்பரத்துக்குப் பேசுகிறார்கள். ஒரேயொரு சொக்லேட் சாப்பிட்டால் உடனே சிக்ஸர் அடிக்கிறான் அந்த விளம்பரம்முடிந்து அதில் நடித்த ஆட்டக்காரர் சிக்ஸர் தூக்கப்போய், அவுட் பேரன், பேத்திகள் வந்தால் சுற்றி உட்கார்த்தி வைத்து கல்சட்டியில் தயிர்ச்சோறு மையாய்ப் பிசைந்து கையில் போடலாம் பிள்ளையும் பெண்ணுமே வர்றதில்லை. பேரன் பேத்திகள்தான் வரப் போறாங்களாக்கும். அவளது மருமகள் பூனைக்குட்டிதான் என்றாலும் தவறாமல் ராசிபலன் படிக்கிறாள். அந்தப் பிள்ளை இந்த ராசி, அவனுக்கு இந்த வாரம் எப்படி இருக்கிறது பார்க்கலாம். அவன் மூல நட்சத்திரம். ஆண்மூலம் அரசாளும் என்பாள் கிழவி. குழந்தைகளிடம் அவருக்கு ஒரு ஒட்டுதலும் இல்லை.

ஐந்து நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் அவருக்கு ஈர்ப்பு இல்லை. என்னாவுது, ரெண்டுபேரும் சரி சமமா நல்லா அடிச்சி விளையாண்டா கொள்ளாம். ஒருத்தன் வெச்சி நச்சிட்டான்னு வெய்யி, அடுத்தாள் நாதஸ்வரத்துல ஒத்து ஊதறாப்போல, உம்முனு இழுக்கறான். அந்தாள் எந்த ராகம்னாலும் பாடட்டும். என் வழி ம்ம்ம் என ஒரே இழுவைதான், என்கிற மாதிரி தடுத்து ஆடறான். நீ என்னதான் பந்துபோடு, அடிக்கமாட்டேன், மாட்டேன்னா மாட்டேன் என்று சண்டித்தனம் செய்யும் வண்டிமாடுபோல கிரவுண்டிலேயே படுத்துர்றான்.

விளையாட்டுகள் சிறந்த உடற்பயிற்சிகள், என்ற காலம் எல்லாம் மலையேறிப் போயிற்று. இது துட்டுசார்ந்த உலகம். தோன்றிற் துட்டொடு தோன்றுக, அஃதிலார் கடன்வாங்கிச் சாக என்று கிள்ளுவர் சொல்கிறார். பையன்காரன் அப்பனிடமே சொத்து என்ன வெச்சிருக்கே, என்று விசாரிக்கிற காலம். எதற்குச் சொல்ல வந்தது, விளையாட்டிலும் இப்ப நல்ல துட்டுப் புழக்கம். ஆடினால் காசு, ட்வெல்த் மேன், 13ஆவது ஆசாமி, என்று ஆடாமல் காலாட்டிட்டு உட்கார்ந்திருந்தாலே காசு. இதுதவிர விளம்பரத்தில் வேறு ஆட்டக்காரர்களையே கூப்பிடுகிறார்கள். அந்த இ'ாந்த் சர்மா பிளேடு விளம்பரத்தில் வருகிறான். அவன் சலூனுக்கே போவானோ என்னமோ, பார்த்தால் போறாள் மாதிரியே இல்லியே"

இந்த ஒரு விளையாட்டில் நாடேகிறங்கிக் கிடக்கிறது என நினைத்துக் கொண்டார். தமிழில் சென்னை ஆறுலட்சத்தி இருபத்தெட்டு, என்று கிரிக்கெட்டைப் பத்தி ஒரு படமே வந்திட்டது

விளையாட்டு மோகம் தலைக்கேறிய காலமாவுல்ல ஆயிட்டுது, என நினைத்துக் கொண்டார். சினிமாவுல நடிச்சி ஆட்சியப் பிடிச்சாப்ல இனி மேட்ச் ஆடி பாரிலிமென்டுக்குப் போயிருவாங்களோ என்று பயமாய் இருந்தது. ரசிகர் மன்றம் கின்றம்னு அவர்களுக்கும் இருக்கா என்ன தெரியாது. இனிமேல் கூட வரும். வராமல் போகாது

பகலில்தான் என்றில்லை, ராத்திரியெல்லாம் விளையாடுகிறார்கள். எப்ப தூங்குவாங்கன்னே தெரியவில்லை.

ராத்திரி விளையாட்டு அவருக்கு ஒத்துக்கொள்ளவில்லை. தினசரி மாத்திரை இருக்கிறது. கொஞ்சம் தூக்கம் குறைந்தாலும் மறுநாள் படியேற இறங்க கிர்ருங்கும். தூக்கம் முழித்து ஆட்டம்பார்ப்பது சிரமம். உடற்பயிற்சி என ஆரம்பித்த விளையாட்டு துட்டு என்று முகம் மாறிவிட்டது. ஒரு சிக்ஸருக்கு இத்தனை பணம் என்றெல்லாம் அறிவிப்புகள். வெள்ளைக்காரன் கண்டுபிடித்த விளையாட்டு கிரிக்கெட். வெயில் உடம்புல விழவேண்டும் என்பதற்காக நாள்பூரா ஆடுகிறா மாதிரி ஐந்துநாள் கிரிக்கெட் என்று அவன் வைத்தான். நம்மாட்கள் அதை இந்தச் சுட்டெரிக்கிற வெயிலில் விளையாடவும் வேணாம். இப்படி அதை ராத்திரிக்கு மாற்றியிருக்கவும் வேணாம் என்றிருந்தது.

நம்மாள் ராத்திரியில் என்ன விளையாடுவான் வைகுண்ட ஏகாதசி தூக்கம் முழிக்க என்று பரமபத சோபனப் படம் பாம்பும் ஏணியும். பாம்பு இறக்கும். ஏணி ஏற்றிவிடும். ஆனால் பாம்பு கடிச்சால் விஷம் இறங்காது, ஏறும் வரவர அவரே ரசனையில் தேறியிருந்தார். யார்க்கர் பந்துவீச்சு கண்டுபிடிக்கத் தெரியும். பீமா, தூஸ்ரா என்றால் தெரியாது. எந்தெந்த பொசி'ன்களில் ஃபீல்டிங் நிறுத்தப் பட்டிருக்கிறது தெரியாது.

ஆனால் ஆட்டக்காரன் அடிச்சால் இது சிக்ஸர் நிச்சயம், இல்லை இது "கட்ச்" என்று தெரிந்தது அவருக்கு. மட்டையாளனுக்கு ஒரு அம்பது வரும்வரை, நாற்பத்தியைந்து முதல் ஒரு படபடப்பு. வியர்த்து வழிகிறது. அம்பதைத் தொட்டாலே ஒரு அசட்டுச் சிரிப்பு. அநேகமாய் அடுத்த பந்தைக் கிழிச்சிர்றான்கள். அது நாலாக ஆறாக இருக்கலாம். நிறையத் தரம் அவ்ட் ஆவதும் உண்டு ஆறு பந்தில் ஆறு பவுண்டரி, ஆறு பந்தில் ஆறு சிக்ஸர் என்றெல்லாம் சாதனைகள்

கும்ளே என்று நம்மாள், ஒரு டெஸ்ட் மேட்சில் பத்து விக்கெட்டும் அவனே எடுத்திட்டான். மத்த பொலருக்கெல்லாம் சம்பளமே கொடுத்திருக்கக்கூடாது. கொடுத்தார்களா இல்லையா தெரியாது.

வயசு எண்பது. வேலை கிடையாது. உட்கார்ந்த வாக்கில் கொஞ்சம் இப்படி அப்படி அசங்கியபடியே முழு ஆட்டமும் பார்க்கலாம். இளைஞர்களும் இப்படி தொலைக்காட்சியில் முடங்கிக் கிடக்கிறார்களே என்றிருந்தது. பகல்-இரவு ஆட்டத்தன்று தெருவில் அத்தனை பேர் வீட்டிலும் ஆட்டத்தைத்தான் போட்டார்கள். ஹோ ஹோவென்று தெருவே அதிர்ந்து இரைந்தது.

அன்றன்றைய விளையாட்டு சுவாரஸ்யம் என்பது மட்டுமில்லை. ஐந்து டெஸ்ட். ஐந்து ஒருநாள் போட்டி என்று கோப்பை வைக்கிறார்கள். அதில் ஒண்ணு இவன் ஜெயித்து ஒண்ணு அவன் ஜெயித்தால் மூணாம் போட்டிக்கு டிக்கெட் அபாரமாய் விற்கிறது. சூதாட்டம் எல்லாம் இருக்கிறது, என்கிறார்கள்.

அதுபற்றிய விவரம் அவருக்குத் தெரியாது. ஒரு பந்துக்கு இவ்வளவு, இந்தப் பந்தின் விளைவு என்ன ஒரு ரன், நாலு, ரன்அவ்ட், அவ்ட், போல்ட் அல்லது கேட்ச் என்று துல்லியமாய் முன்பே சொல்லி இவ்வளவு காசு கட்டினால் இவ்வளவு பரிசு. சொன்னது தப்பானால் காசு போச்சு என்று சூதாட்டம் எல்லாம் கேள்விப்பட்டார்.

இதில் விளையாடற ஆள்கூடவே பேரம் பேசி சூதாடுகிறார்கள் என்றெல்லாம் கேள்விப்பட்டார். பயமாய் இருந்தது எல்லாம் ஏ தா (ஒரு கெட்ட வார்த்தை.) இதெல்லாம் எங்க கொண்டு விடுமோ. பேசாம தெரிஞ்ச விளையாட்டு விளையாடுங்களேன், என்றிருந்தது.

ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர். இந்தியா - ஶ்ரீலங்கா. ஒண்ணு நாம ஜெயித்து, ஆகான்னு ஆசுவாசப்படுமுன் அடுத்ததை அவர்கள் லபக்கிவிட்டார்கள். குப்பென்று ஆகிவிட்டது அவருக்கு. நாளை மறுநாள் மூணாவது போட்டி முக்கியமானது. தோற்றதில் அவருக்குள் குமுறலாய் இருந்தது.

எத்தனை கேட்ச்தான் விடுவார்கள். டி.வியில் அதையே திரும்பத் திரும்ப போட்டுக் காட்டுகிறான். இந்தியா பூராவுமே அவனை கெட்ட வார்த்தையில் திட்டும்வரை காட்டுவான் போல. ரன் அவ்ட், ஸ்டம்புக்கு அடிக்கிறான்னு பார்த்தால், ஃபாலோ த்ரு இல்லை. (வர்ணனையாளர் சொன்ன வார்த்தை.) பந்து இப்படி ஓடி நான்கு அதிகப்படி ரன்கள்- சச்சின் விளையாடுவான் என்று பார்த்தால் பந்தைக் கைவிரலில் வாங்கிக் கொண்டு உஸ் என்று உதறினான். அவன்ஆட்டம் முடிந்து அடுத்தாள் ஆடுகையில் அவனை பெவிலியனில் (வர்ணனையாளர் வார்த்தை.) காட்டினார்கள். தவில் வித்வான் போல கையில் தொப்பி. சர்த்தான், அடுத்த போட்டிக்கு விளையாடமாட்டான் என்றிருந்தது.

(18 ஆம் பக்கம் பார்க்க)




## உங்கள் குளியல் சோப் பற்றி தெரியுமா?

உங்கள் அழகான சருமத்தில் தினமும் குறைந்தது இரண்டு தடவையாவது சோப்பு தேய்க்கிறீர்கள். நுரைவருகிறது. மணம் தருகிறது என்று சொல்லும் பலருக்கும் அதில் என்னென்ன மூலப்பொருட்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றோ, தனது சருமத்திற்கு அது பொருத்தமானதுதானா என்றோ தெரிவதில்லை. சோப்பின் இரகசியங்களை தெரிந்துகொள்ளுங்கள்:



* ஒருவகை உப்புதான் சோப்பின் மூலப்பொருள். அதில் காரத்தன்மை பொருந்திய அர்க்கோலையும், தாவரக் கொழுப்புகளையும் சரியான விகிதத்தில் சேர்க்கும்போது குளியல் சோப் தயாராகிறது. நிறத்திற்கான பொருளும், வாசத்திற்கான பொருளும் அதில் சேர்க்கப்படுகிறது.

* உங்கள் சருமத்திற்கு ஏற்ற, சோப்பை தேர்வு செய்யவேண்டும். அதாவது சருமத்திற்கு ஏற்ற காரத்தன்மையும், அமிலத்தன்மையும் அதில் இருக்கிறதா என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

* கார, அமிலத்தன்மையை குறிக்கும் அளவீடு 'ஜீலீ 5.5' என்ற கணக்கில் இருக்கவேண்டும்.

* அவ்வாறு அமையாவிட்டால் சருமத்தின் 'ஜீலீ' அளவில் மாற்றம் ஏற்படும். அதனால் தோல் வறட்சி, அரிப்பு, எரிச்சல் போன்ற சருமப் பிரச்சினைகள் உருவாகலாம்.

* எண்ணெய் பசை நிறைந்த சருமத்திற்கு வேப்பிலை, எலுமிச்சை கலந்த சோப் நல்லது.

* வறண்ட சருமத்திற்கு கோகோ பட்டர், வெஜிடபிள் எண்ணெய், கற்றாழை, ஜோஜோபா எண்ணெய், விற்றமின் 'ஈ' (இயற்கை எண்ணெய்), அவகோடா ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட சோப் சிறந்தது.

* சோப்பின் அழகிய நிறங்களும் குறிப்பிட்ட சில இரசாயன மூலப்பொருட்களை சார்ந்தே அமைகிறது.

* டி.எப்.எம். என்பது சோப்பின் தரத்தை குறிப்பிடுகிறது.

* முதல் தர சோப் என்பது 75 சதவீதத்திற்கு அதிகமான டி.எப்.எம் கொண்டதாகும்.



## பெண்களிடம் பெண்களுக்கே பிடிக்காதது

ஒரு பெண்ணுக்கு பிடிக்கும் விஷயம், மற்றொரு பெண்ணுக்கு பிடிக்காது. மற்றொரு பெண்ணுக்கு பிடித்த விஷயம், இன்னொரு பெண்ணுக்கு பிடிக்காது. ஆனால், என்னதான் இருந்தாலும், நமது நாட்டு கலாசாரத்தோடு ஒப்பிட்டு பார்க்கையில் ஒருசில விஷயங்களை செய்யும் பெண்களை பெரும்பாலான பெண்களுக்கு பிடிக்காமல் போகிறது.

அதைப் பற்றி இனிக் காண்போம்.

வெட்டி பந்தாக் காட்டிக்கொண்டு ஆண்களுக்கு நிகராக சீன்போடும் பெண்களை பெண்களுக்கே பிடிப்பது இல்லையாம். செக்ஸியாக என்ற பெயரில் மிகவும் அருவருப்பான முறையில் ஆடை அணியும் பெண்களை பெண்களுக்கு பிடிப்பது இல்லை. பெண், ஆண் சமம் என்ற பெயரில் குடிப்பது, சிகரெட் பிடிப்பதை பந்தாவாக கருதும் பெண்களை பெண்களுக்கே பிடிப்பதில்லை.

அடிக்கடி வெவ்வேறு ஆண்களுடன் டேட்டிங் செல்வதை வழக்கமாக வைத்திருக்கும் பெண்களை பெண்களுக்கே பிடிப்பதில்லை. சிகரெட் பிடிப்பதை போலவே, போன்றே ஆபாச வார்த்தைகளை ஃபேஷன் என்ற பெயரில் வார்த்தைக்கு, வார்த்தை உபயோகிக்கும் பெண்களை பெண்களுக்கே பிடிப்பதில்லை.

வாரமொரு சிந்தனை | சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்



# இலட்சிய சமுதாயம்

மானுட வாழ்க்கை தற்செயலாக ஏற்பட்டதுமல்ல. அஃதொரு விபத்தும் அல்ல. இயற்கை நியதி. திட்டமிட்டுப் பரிணாம வளர்ச்சியில் வாய்ந்தது இந்த வாழ்க்கை. அற்புதமான ஆற்றல்மிக்க புலன்களுடனும் பொறிகளுடனும் அமைந்தது இந்த வாழ்க்கை.

இப்படி அமைந்ததொரு வாழ்க்கை பயனுடையதாக, புகழ்மிக்கதாக அமையவேண்டாமா? அமைவுகள் மிகுதியுமுடைய இந்த வாழ்க்கை எதற்காக? அறிவு அறியும் கருவிகள், செயல்செய்யும் பொறிகள் அனைத்தும் அமைந்த வாழ்க்கையின் நோக்கம் என்ன? பயன்தான் என்ன? அறிந்துகொள்ள வேண்டாமா? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டாமா?

உடம்பொடு உயிர் பொருந்திய நிலையில் வாழ்வுக்கு உயிர்ப்பாக இருப்பது மூச்சுக்காற்று! மூச்சுக் காற்று அடங்கினால் உயிர்ப்பு நின்றால் மரணம். அதனால், உடலில் உயிர்ப்பு நிலை இருக்கும் பொழுதே தகாதனவற்றையெல்லாம் புறத்தே தள்ளி, நல்லன கொள்ள வேண்டாமா? எண்ணுங்கள்! சிந்தனை செய்யுங்கள்.

தேடி, சோறு நித்தம் தின்று, சின்னஞ்சிறு கதைகள்பேசி, வேடிக்கை மனிதராய் மாண்டு போகக்கூடாது. புகழ்மிக்க வாழ்க்கை வாழ்தல் வேண்டும். அதனாலன்றோ, திருக்குறள் அறத்துப்பால், இல்லறவியலின் முடிவில் 'புகழ்' என்று ஓர் அதிகாரம் வைத்து, புகழ்பெறுதல் என்பது எளிதன்று, இமயத்தின் உச்சியில் ஏறுவதினும் கடினமானது. பேச்சால், எழுத்தால், பாராட்டுவரலாம். அது புகழன்று. பதவிகளால் சுற்றிநின்று பயனடைவோர் வானளாவப் புகழலாம். அதுவும் போலியேயாம்! விளம்பரம்தான்! புகழன்று!

செயல்வழிச் சாதனைகள் செய்வதுதான் புகழ் பெறுவதற்குரிய வழி! அந்தச் சாதனைகளும்கூட நாட்டின் வரலாற்றை நகர்த்துவதாக அமையவேண்டும். மானுடத்தை அரித்துத் தின்று அழிக்கும் சாதிப் பிரிவினைகள், கொடிய நோய்கள், வறுமை ஆகியவற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் பணியே புகழ்மிக்க பணி! அதுவே வாழ்க்கையின் குறிக்கோள்! இலட்சியம்.

சென்ற காலத்தில் இலட்சிய வாழ்க்கை வாழ்ந்த சிலர் சாதித்த சாதனைகளாலேயே இன்று நம்முடைய வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் மனித சமுதாயத் திற்கும் குறிக்கோள் தேவை. இலட்சியம் தேவை! இன்று, இலட்சியம் உடைய மனிதர்களைத் தேடினும் காணக்கிடைப்பதில்லை. ஒரு சிலர், சின்னஞ்சிறு செயல் களையே இலட்சியம் என்று கருதிக் கொண்டுள்ளனர். வேறு சிலர் பணம் சம்பாதிப்பதையே இலட்சியமாகக் கொண்டுள்ளனர்.

கற்றவர்களும் அறிஞர்களும் வீரர்களும் பணம் சம்பாதிப்பதையே ஒரு நாளும் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொள்ளமாட்டார்கள். சின்னஞ்சிறு செயல்கள்செய்வது, பணம் சம்பாதிப்பது இவையெல்லாம் இலட்சியங்கள் ஆகா. வாழ்க்கையின் படிக்கற்கள் என்று வேண்டுமானால் கொள்ளலாம்.

"குறிக்கோள் இலாது கெட்டேன்" என்று பாடுகிறார் அப்பரடிகள். உடலுக்கு ஆன்மா; மரத்திற்கு வேர்! மனிதனுக்கு இலட்சியம்; வாழ்க்கையில் மனிதன் அடிமையாக இருக்கக் கூடாது. ஒரு வேலையை ஊதியத்தையே குறிக்கோளாகக் கொண்டுசெய்வது அல்லது பயந்து கொண்டு செய்வது என்ற குணமிருந்தாலும் அடிமைத்தனமே யாம்; ஒரு வேலையை - ஒரு பணியை அந்த வேலைக்காகவே தாமே ஆர்வத்துடன் பயன்பாடு கிடைக்கும் வகையில் செய்வது சுதந்திரமான வாழ்க்கையாகும். தாம் எடுத்துக் கொண்ட பணியை முறையாகச் செய்வதே இலட்சியம். சுதந்திரம். இன்பம்.

ஒருவன் தன்னுடைய வாழ்க்கையில் இலட்சியம் எது என்று சிந்தனை செய்யவேண்டும். ஒரு சிலருக்கு தன் வாழ்க்கைக்கு என்று இலட்சியம் நிர்ணயம் செய்துகொள்ளும் சூழல் அமையாது போகலாம். அப்போது நீரும் நிழலும் போலத் தன்னுடைய தோழமையாகப் பழகும் சில நண்பர்களையும் உடன் சேர்த்துக் கொள்ளலாம். பலர் வாழ்வில் இதுவே நடைமுறையில் சாத்தியம். அப்படி எடுத்துக்கொண்ட இலட்சியத்திற்காகவே வாழ்தல் வேண்டும்; போராடவேண்டும்.

(தொடரும்)



# பாப்பா முரசு



சிறுவர் கதை





## வாரம் ஒரு திருக்குறள்

### உட்பகை

**"மனமாணா உட்பகை தோன்றின் இனமாணா ஏதம் பலவும் தரும்."**

மனம் திருந்தாத உட்பகை ஒருவனுக்கு உண்டாகுமானால், அது அவனுக்குச் சுற்றம் சீர்படாமைக்கு காரணமான குற்றம் பலவற்றைத் தரும்.

குறள் : 884

## கறுப்பு பலூன் பறக்குமா?

காற்றை நிரப்பினால் மேலே பறக்கும் பலூன்களை ஒரு பள்ளிக்கூட வாசலில் ஒருவர் விற்றுக் கொண்டிருந்தார்.

ஒரு சிறுமி அவரிடம் கேட்டாள்:

"பலூன் எந்தக் கலரில் இருந்தாலும் பறக்குமா?"

"பறக்குமே"

"சிவப்பு, வெள்ளை, பச்சை, மஞ்சள், ரோஸ் எல்லாக் கலர் பலூன்களுமா?"

"ஆமாம்"

"கறுப்புப் பலூன் கூட பறக்குமா?"

பலூன் விற்பவர் அந்தச் சிறுமியை ஒரு கணம் உற்றுப் பார்த்தார். அந்தச் சிறுமி கறுப்பு நிறமாக இருந்தாள். யோசித்துவிட்டுச் சொன்னார்:

"பறப்பதற்குத் தேவை. "நிறம் அல்ல" உள்ளே என்ன இருக்கிறது? என்பதுதான்"

சிறுமி முகத்தில் மலர்ச்சி. கறுப்பு பலூன் ஒன்றை வாங்கிப் பறக்கவிட்டபடி, துள்ளிக் குதித்து ஓடினாள்.

**ஜோ.ஜெயக்குமார்**

## கணினி சார்ந்த பொது அறிவு

**இன்டர்நெட் பயன்படுத்துவர் சிலர் கணினி சார்ந்த பொதுவான தகவலை இன்னுமும் தெரியாமல் தான் உள்ளனர். கணினி பற்றிய பொது அறிவை தெரிந்து கொள்ளுங்கள்......**

* இன்டர்நெட்டின் தந்தை என்று அழைக்கப்படுபவர் - வின்ட் ஸர்ப்
* www (World wide web) என்னும் இன்டர்நெட் தாரக மந்திரத்தை உருவாக்கியவர் - திமோத்திஜான் பெர்னர்ஸ்லீ. இதன் துவக்க பெயர் Enquire
* கணினி வழி தகவல் பரிமாற்றத்தில் புன்னகை தவழும் முகம் என்பதை குறிக்க :- எனும் கூறியீடு பயன்படுத்தப்படுகிறது. இதை முதன் முதலாக 1982ல் பயன்படுத்தத் துவங்கியவர் - ஸ்கொட் பால்மன்
* கூகுள் தேடுபொறியை உருவாக்கியவர்கள் - லாரிபேஜ், ஸ்சேர்கி பிரின்
* விக்கிபீடியா வலைத்தளத்தை உருவாக்கியவர் - ஜிம்மி வேல்ஸ்
* பேஜ்மேக்கர் எனும் பப்ளிஷிங் சொப்வேரை உருவாக்கியவர் - பால் பிரெயினார்ட், இவர் இந்தியாவின் சூப்பர் கம்பியூட்டர் என்றும் அழைக்கப்படுகின்றார்.
* சி++ எனும் கணினி மொழியை வடிவமைத்தவர் - பியான் ஸ்ட்ரூ ஸ்டெரெப்
* MS-Dos எனப்படும் கணினி நிரலை உருவாக்கியவர் - டிப் பாட்டர்ஸன்
* அப்பிள் கணினியை துவக்கியவர் - ஸ்டீவ் வோஸ்னியாக்
* CD என்ற குறுந்தகடை கண்டுபிடித்தவர் - ஜேம்ஸ் ரஸ்ஸல்
* Vital Information Resources Under Seas எனும் கணினி வார்த்தையின் சுருக்கம்தான் VIRUS
* Commonly operated machine purposely used for trade and Engineering research என்பதன் சுருக்கம்தான் COMPUTER
* கணினி மவுஸை கண்டுபிடித்தவர் - டக்ளஸ் எங்கல்பர்ட்
* Uniform Resource Location என்பதன் சுருக்கம் தான் URL முகவரியாகும்.



## புதிர்கள்

1. பதினொன்றோடு இரண்டைச் சேர்ந்தால் ஒன்றாகும். எப்படி?
2. எவ்வளவு முன்னேறுகிறீர்களோ அவ்வளவு விட்டுச் செல்வீர்கள். அது என்ன?
3. தலையிலிருந்து கால் வரை நான் உபயோகப்படுவேன். அதனால் நான் மெலிகிறேன். நான் யார்?
4. இருபத்தைந்தை எவ்வளவு முறை ஐந்தால் கழிக்க முடியும்?
5. இது உங்களை அழ வைக்கும், சிரிக்கவைக்கும், இளமையாக உணரவைக்கும். நொடியில் தோன்றினாலும் வாழ்நாள் முழுவதும் தொடரும். அது என்ன?
6. என்னால் உங்களுக்கு வியர்க்கும். நீங்கள் பலவீனமாவீர்கள். நான் உங்கள் இதயத்துடிப்பை அதிகரிப்பேன். நான் யார்?
7. அதற்கு கைகள் உண்டு, ஆனால் எதையும் பிடிக்க முடியாது. பற்கள் உண்டு, ஆனால் கடிக்க முடியாது. கண்கள் உண்டு, ஆனால் பார்வை கிடையாது. அது என்ன?
8. என்னால் ஓடமுடியும், ஆனால் நடக்கமுடியாது. எப்போதாவது பாடுவேன், ஆனால் பேசமுடியாது. கைகள் உண்டு, ஆனால் விரல்கள் கிடையாது. தலையில்லை, ஆனால் முகம் உண்டு நான் யார் தெரியுமா?

### விடைகள் :

**1. 11 மணிநேரம் + 2 மணிநேரம் = 1 மணி, 2. கால் தடங்கள் 3. சோப், 4. ஒரு முறைதான் (அதற்குப் பிறகு அது இருபதாகி விடுமே) 5. நினைவுகள், 6. பயம், 7. பொம்மை, 8. கடிகாரம்,**

## இடமறிந்த பேசு!!



ஒரு பிரபலமான பேச்சாளர் ஒரு முறை ஒரு கூட்டத்தில் பேசும்போது இவ்வாறு கூறினார்: என் வாழ்வில் மிகச்சிறந்த நாட்களாக நான் கருதுவது, "நான் இன்னொருவருடைய மனைவியின் உடன் கழித்த நாட்களே என்று".

இதைக் கேட்ட கூட்டத்தினர் அதிர்ச்சி அடைந்தனர், யாரும் எதுவும் பேசவில்லை.

பேச்சாளர் தொடர்ந்தார். அந்த இன்னொருவருடைய மனைவி, "என் தாய் தான்" என்றார்.

கூட்டத்தில் பலத்த சிரிப்பும், கரகோஷமும் ஏற்பட்டது.

இதை கேட்ட பார்வையாளர்களில் இருந்த ஒருவர், வீட்டிற்கு சென்று இதனை தானும் தன் மனைவியிடம் கூறி வியப்பில் ஆழ்த்தநினைத்தார். வீட்டிற்கு சென்ற அவர், இரவு உணவு உண்டபின், தன் மனைவியை நோக்கி," என் வாழ்வில் மிகச்சிறந்த நாட்களாக நான் கருதுவது, "நான் இன்னொருவருடைய மனைவியின் உடன் கழித்த நாட்களே" என்று கூறிவிட்டு அடுத்த வாக்கியத்தை கூறமுற்படுகிறார்.

கண்விழித்து பார்த்தபோது அவர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார், அவர் மனைவிவீசி எறிந்த கொதித்த வெந்நீர்பட்ட கொப்புளங்களுடன்.

## அமெரிக்காவிலேயே அதிகம் சம்பளம் பெறும் நிர்வாகி




கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை அமெரிக்காவிலேயே அதிகம் சம்பளம்பெறும் நிர்வாகிய-ாக இருக்கிறார். கூகுள் நிறுவனத்தின் தாய் நிறுவனமான அல்பபேட் நிறுவனம் சுந்தர் பிச்சைக்கு 1,353 கோடி ரூபாய் மதிப்புள்ள பங்குகளை அளித்ததன்மூலம் இந்த இடத்தை அடைந்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி அல்பபேட் நிறுவனத்திடமிருந்து 2,73,328 கிளாஸ் சி பங்குகளை சுந்தர் பிச்சை பெற்றுக்கொண்டார். இதுவரை இவ்வளவு மதிப்புள்ள பங்குகளை எந்த ஒரு நிர்வாகிக்கும் கூகுள் நிறுவனம் வழங்கியதில்லை. மேலும் அல்பபேட் நிறுவனம் 4.28 கோடி டொலர் மதிப்புள்ள பங்குகளை விஎம்வேரின் தலைமைச் செயலதிகாரி மற்றும் துணை நிறுவனர் டாயனே கிரினேவிற்கு வழங்கியுள்ளது. கடந்த வருடம் 14.8 கோடி டொலர் மதிப்புள்ள பங்குகளை கிரினே பெற்றுக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அல்பபேட் நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி ரூத் போரட்டிற்கு 3.83 கோடி டொலர் மதிப்புள்ள பங்குகள் வழங்கப்பட்டுள்ளன. கூகுள் நிறுவனர்களான லாரி பேஜ்ஜிற்கு 3,460 கோடி டொலர் மதிப்புள்ள பங்குகள் தற்போது உள்ளன. மற்றொரு நிறுவனரான செர்ஹரி பிரினுக்கு 3,390 கோடி டொலர் மதிப்புள்ள பங்குகள் உள்ளன.

# ஐ.நா முக்கியஸ்தரின் இலங்கை விஜயம்

## நல்லிணக்கம், மனித உரிமைகள் விசயத்தில் இலங்கை முன்னேறியுள்ளது

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் முன்னேற்றம் கண்டுள்ளன என்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் கூறினார் என வெளியுறவுத்துறை துணை அமைச்சர் ஹர்ஷா டி சில்வா தெரிவித்துள்ளார். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் இளவரசர் செய்யித் ராத் அல் ஹுஸைன் Prince Zeid Ra'ad Al Hussein நான்கு நாள் பயணமாக 06.02.2016 அன்று இலங்கை வந்தடைந்தார்.

இங்கு வந்துசேர்ந்த அவர் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் அவரது அமைச்சரவையினருடன் சனிக்கிழமை பேச்சுக்களை நடத்தினார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கடந்த ஆண்டு இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு நாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் காணப்படுகின்றன என அல் ஹுஸைன் தெரிவித்தார் என ஹர்ஷா டி சில்வா கூறினார். ஐ.நா ஆணையர் ஹுஸைன் தனது இலங்கைப் பயணத்தின்போது அனைத்து தரப்பு மக்களையும் சந்தித்து பேசியுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை அவர் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் திருகோணமலைக்கும், திங்களன்று கண்டிக்கும் சென்றார். அரசியல் கட்சித் தலைவர்கள், அரச தரப்பினர், சிவில் சமூகத்தினர், மதத் தலைவர்கள் உட்பட பல்தரப்பினரையும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் சந்தித்துள்ளார்.

இதேவேளை அவர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனையும்



மற்றும் முக்கியஸ்தர்களையும் சந்திக்கச் செல்லும் வழியில் காணாமல் போனோரின் உறவினர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

காணாமல்போன தமது உறவினர் களது புகைப்படங்களை ஏந்தியவாறு வடக்கு முதல்வர் காரியாலயத்திற்கு முன்பாக அவர்கள் இந்த கவன ஈர்ப்பை முன்னெடுத்தனர். இறுதிக்கட்ட யுத்தத்தின்போதும் அதற்குப்பின்னரும் காணாமல்போன தமது உறவுகள் பற்றி இதுவரை எவ்வித தகவலும் அறியாத உறவினர்கள், ஐ.நா ஆணையாளரை சந்திப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அப்போது ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் செய்யித் ராத் அல் ஹுஸைன் அவர் பயணம் செய்த வாகனத்தைவிட்டு இறங்கி, "நான் உங்களை சந்திப்பதற்கான நேரத்தில் சந்திக்கிறேன்" என்று காணாமல் போனோரின் உறவுகளிடம் கூறி அவர்களுக்கு மதிப்பளித்தார்.

ஐ.நா ஆணையாளர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் மற்றும் ஆளுநருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார். வடமாகாணம் எதிர்கொள்கின்ற சவால்களை மையப் படுத்தியே பேச்சுக்கள் இருந்தன என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் காணாமல் போனோர் தொடர்பான விசயங்கள், மாகாணத்தின் அபிவிருத்தி ஆகியவை குறித்தும் பேசப்பட்டன என இளவரசர் செய்யித் ராத் அல் ஹுஸைன் பின்னர் கூறினார். இச்சந்திப்பின்போது, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து அரசாங்கத்திற்கு எடுத்துரைக்க வேண்டுமென தாம் ஐ.நா ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டதாகவும், அதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாக ஐ.நா ஆணையாளர் தெரிவித்ததாகவும் விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

அத்தோடு, காணாமல்போன சுமார் நான்காயிரம் பேர் தொடர்பான விபரங்களை கையளித்ததோடு, அவர்கள் பற்றி அறிவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரிடம் தெரிவித்ததாக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

அடுத்த வருடம் தாம் இலங்கை வரும்போது, அகதி முகாம் இருக்கா தென்றும் அனைவரும் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு இருப்பர் என்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் செய்யித் ராத் அல் ஹுஸைன் உறுதியளித்துள்ளார்.

ஐ.நா ஆணையாளர், சபாபதிப்பிள்ளை அகதி முகாமுக்குச் சென்று அங்குள்ள மக்களை சந்தித்து இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார். இதற்கு எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்திற்கு கொண்டுவருவதாகவும், மீள்குடியேற்றம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதாகவும் ஐ.நா ஆணையாளர் இதன்போது குறிப்பிட்டார்.

இதேவேளை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் யாழ்ப்பாண முஸ்லீம்களையும் சந்தித்துள்ளார்.

நல்லூர் கோயிலுக்கு அவர் செல்லும் முன்னர் முன்றலில் பல்வேறு சுலோகங்களை ஏந்தி நின்ற யாழ்ப்பாணம் முஸ்லீம் பிரதிநிதிகள் அவரிடம் மகஜர் ஒன்றினைக் கையளித்தனர்.

தாங்கள் 1990ஆம் ஆண்டு எல்.ரீ.ரீ.ஈ இனரால் பலவந்தமாக இனச் சுத்திகரிப்புச் செய்து வெளியேற்றப்பட்டமை தொடர்பாகவும் யுத்த காலங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களது விபரங்களை ஆணையாளரிடம் கையளித்ததாக யாழ் கிளிநொச்சி முஸ்லீம் சம்மேளனத்தினர் தெரிவித்தனர்.

அத்துடன் முஸ்லீம் மக்களின் மீள்குடியேற்றம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதேவேளை, கிழக்கு மாகாணம் சென்ற ஐ.நா மனித உரிமைகள் கிழக்கு முதல்வர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண அமைச்சர் களையும் சந்தித்துள்ளார்.

நாட்டில் சில காலம் இடம்பெற்ற ஆயுதப் போர் காரணமாக கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் விதவைகளாக்கப்பட்டோர் எதிர்கொள்ளும் வாழ்வாதாரம் உள்ளிட்ட பல பிரச்சினை களுக்கு உரிய தீர்வு காணப்படவேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் ஐ.நா மனித உரிமை ஆணையர் இளவரசர் செய்யித் ராத் அல் ஹுஸைன் இடம் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சரின் காரியாலயத்துக்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் ஹுஸைன் ஞாயிறன்று பிற்பகல் விஜயம்செய்து கிழக்கு மகாண முதலமைச்சருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டபொழுதுதான் இந்தக் கருத்தை வலியுறுத்தியதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்தார். கலந்துரையாடல் தொடர்பாக மேலும் தெரிவித்த முதலமைச்சர்,

வடகிழக்கில் காணாமல் போனோர் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஸ்தாபனம் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. புதிய அரசு வேண்டிய கவனம் செலுத்துவதற்கு ஆலோசனை களையும் அறிவுறுத்தல்களையும் நாம் வழங்குவோம் என ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செய்யித் ராட் அல் ஹுஸைன் தெரிவித்திருப்பது உற்சாகமளிப்பதாக உள்ளது.

தற்போதைய புதிய அரசாங்கத்தில் நாம் அதிக நம்பிக்கை கொண்டுள்ளோம். இதன்மூலம் காணாமல் போனோர் விடயத்தில் இலங்கை அரசு ஒரு தீர்மான முடிவை எடுக்கும் என நம்புகிறோம்.

அதற்குவேண்டிய வலியுறுத்தல் களை உரியவர்கள்மூலம் தெரியப் படுத்தியுள்ளோம். இன்னமும் சிறையில் வாழ்ந்துகொண்டிருக்கும் அரசியல் கைதிகள் விவகாரத்தில் அதிக கவனம் செலுத்திவருவதோடு மாகாண சபை களின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதில் நாமும் அக்கறை கொண்டவர்களாக காணப்படுகின்றோம் குறிப்பாக நிதி விவகாரத்தில் பாரிய முன்னேற்றங்கள் கொண்டுவரப்படவேண்டும்.

கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதில் புதிய திருப்புமுனை ஏற்பட வேண்டும் என்பதிலும் அதிக அக்கறை கொண்டுள்ளோம். மேலும் கிழக்கு மாகாணத்தின் முதலீடு, வேலைவாய்ப்பு, சம்பூர் மீள்குடியேற்றம் ஏனைய பகுதி களில் வாழும் தமிழ், முஸ்லீம் மக்களின் குடியேற்றம் போன்ற விவகாரங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இனங்கள் இணைந்து ஆட்சிசெய்யும் கிழக்கு மாகாணம் அனைத்து மாகாணங் களுக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்கு வது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்பதை ஐ.நா. ஆணையாளர் சுட்டிக் காட்டியதாக முதலமைச்சர் கூறினார். நல்லிணக்கம், மனித உரிமைகள் விசயத்தில் இலங்கை முன்னேறியுள்ளதா என்பதை எதிர்காலம் குறிப்புணர்த்தும்.

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

---



# பரமபத விளையாட்டு!

(15 ஆம் பக்கம் பார்க்க)

ஆட்ட சுவாரஸ்யத்தில் கிருஸ்ணவேணியை மறந்திருந்தார். லேசா நெஞ்சு வலி என்றிருந்தாள். சுக்குத்தண்ணி வைத்து அவளே ஏதோ கை வைத்தியம் போலப் பண்ணிக் கொண்டு நிலைப்படியருகே படுத்திருந்தாள். வெளியே சீதோஷ்ணநிலையே அத்தனை சரியில்லை.

கடைசி ஓவர். ஆறு பந்து - பத்து ரன்கள். ரெண்டு விக்கெட் எடுக்கமாட்டார்கள். எடுக்கக்கூடாது. இந்தியா வெற்றி பெறவேண்டும் என்று படபடப்பாய் இருந்தது. ரொம்ப மோசமான விஷயம்தான். அவருக்கே தெரிந்தது. நம்ம ஆட்கள் அடி விளாசினால் கைதட்டத் தோணுகிறது. எதிரி அடிக்க ஆரம்பித்தால் பலூனில் காத்து போனாப்போல பொங்கும் பால் அடங்கிவிடுகிறது. ஒரு நாலு, மோசமான ஃபீல்டிங்கினால் விட்டதுமே, தெரு பூராவிலிருந்தும் ஹவென்று சத்தம். கால் கப்பைக்குள் புகுந்து பந்து எல்லைக்கோட்டைக் கடந்துவிட்டது. கிழவியும் என முனகி-னாள். அவளுக்குக் காது கேட்காது. தோற்ற அலுப்புடன் அவளிடம் வந்தார்.

என்னடி பண்றது

ம்

உடம்பு சரில்லியா

மம்

டாக்டராண்ட போவமா...

மம்

அவர் எதுவும் கேட்கவில்லை. அப்பவும் அவள் ம் என்றாள். பேச முடியாத உச்ச வலியாய் இருக்கலாம். எப்படி வந்தது தெரியவில்லை. பக்கத்து வீட்டில் போய் அந்தப் பையனைக் கூப்பிட்டார். சிரித்தபடி அந்த ஃபோர் "விட்டதுதான்" என்றான். கொஞ்சம் ஆட்டோ கூட்டிட்டு வரியா, என்றார்.

அவள் செத்துப் போனாள். ஒருவேளை அந்த ஃபோரை விட்டிருக்கா விட்டால் பிழைத்திருப் பாளோ, என நினைத்துக்கொண்டார். சே எனக்குப் பைத்தியம் கடை சியாய் அந்த நர்சிடம் ஏதோ பேச நினைத்தாள் கிருஸ்ணவேணி. கல்யாணம் ஆகிவிட்டதா என்று கேட்கிறாளா, என்றிருந்தது.

பிள்ளைகள் உடனே விமானம், கார்டாக்சி என்று வந்து இறங்கிவிட்டார்கள்.

என்ன செய்ய என்று திகைப்பாய் இருந்தது. யாருடனாவது இனி அடைய வேண்டும். துக்கத்தை விட திகில் அதிகம் உள்ளாறப்பாட் போலிருந்தது. யாரோடும் பெரிதாய்க் கலந்துகொள்ளவில்லை. ரொம்ப சௌகரியமான சாவுதான் அவளுக்கு. வேளை வந்தது. போய்விட்டாள். எல்லாருக்கும் வாய்க்காத சாவு என நினைத்துக் கொண்டார்.

பரமபத சோபனம் விளையாடி-னாளா தெரியாது. பாம்பு கடித்ததோ, ஏணி ஏற்றியதோ கிருஷ்ணவேணி அடைந்தாள் பரமபதம்.

கிருஷ்ணவேணி காரியங்கள் முடிந்த அடுத்த நாள். பகலிரவு ஆட்டம் தொலைக்காட்சியில் பக்கத்து வீட்டில் யாரோ போட்டிருந்தார்கள். பேரன் வந்திருந்தான். உனக்கு கிரிக்கெட் பிடிக்குமா, என்று கேட்டார். மருமகளைப் பார்த்து குழந்தைக்கு போரடிச்சா போடு என்று அவள் முகத்தைப் பார்த்தார். (பூனை ஞாபகம் வந்தது)

யானை போல ஆடினான் சேவாக். என்ன வீச்சு. அவனுக்கு பந்து வீசவே எதிரணி பௌலர்கள் பயந்தார்கள். பேரன் முகத்தில் சிரிப்பு. அவருக்கும் புன்னகை.

எந்தப் போட்டியையும் சௌகரியமாக ஜெயித்ததே இல்லை நம் மக்கள். அதேபோல கடைசிப் பந்து. ரெண்டு ரன்கள். படபடப்பு அதிகமாய் இருந்தது அவருக்கு. ஆ முரளிதரன் எப்பவும் போல அவன் மட்டையை சுர்ஸாக் கட்டையாய்த்தான் சுத்துவான்.

பந்தைப் பார்க்கமாட்டான். ஒரே வீசு வீ... ஊஊஊ... என அழ ஆரம்பித்தார்.



# மருத்துவம்





## வேகமாக பரவும் 'ஜிகா' வைரஸ்...

### சர்வதேச அவசர நிலை பிரகடனம்!

'ஜிகா' வைரஸ் வேகமாக பரவிவரும் சூழ்நிலையில், உலக சுகாதார நிறுவனம் (WHO) சர்வதேச அவசரநிலையை அறிவித்துள்ளது.

டெங்கு, சிக்குன்குனியாவைத் தொடர்ந்து, நுளம்புக்கடியால் புதிய கிருமி தொற்றிவருவது தற்போது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. அந்த கிருமியின் பெயர் 'ஜிகா' வைரஸ். இந்த வைரஸ் முதன்முதலில் 1947ஆம் ஆண்டு உகண்டாவில் உள்ள ஜிகா (Zika) என்ற காட்டில் குரங்குகளை தாக்கியபோதுதான், இந்த கிருமி பற்றி தெரியவந்தது. பிறகு, 1952ஆம் ஆண்டு உகண்டாவிலும், டான்சானியாவிலும் மனிதர்களையும் தாக்கியது. சமீபகாலத்தில், 2007 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில், பசிபிக் நாடுகளில் 'ஜிகா' வைரஸ் தாக்கியது.

அதையடுத்து, கடந்த ஆண்டு அமெரிக்க நாடுகளான பிரேசில் மற்றும் கொலம்பியாவிலும், ஆபிரிக்காவிலும் அக்கிருமி தாக்கியது. 13 அமெரிக்க நாடுகளில் இதன் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. பிரேசில் நாட்டில் கடந்த சில மாதங்களில், எண்ணற்ற குழந்தைகள் உடல் குறைபாடுடன் பிறந்துவருகின்றன. சிறிய தலையுடனும், மூளை பாதிப்புடனும் பிறந்துள்ளன. 3,500 குழந்தைகள் இதுபோல் பிறந்திருப்பதால், இதற்கும், 'ஜிகா' வைரசுக்கும் தொடர்பு இருக்கிறதா என்று விஞ்ஞானிகள் ஆய்வுசெய்து வருகிறார்கள்.

'ஜிகா' வைரஸ், அமெரிக்கா முழுவதும் பரவ வாய்ப்புள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கைவிடுத்தது. உலகம் முழுவதும் பரவக்கூடும் என்ற அச்சமும் எழுந்துள்ளது. இந்த கிருமி தாக்கியவர்கள், இதுவரை குணமானது இல்லை. தற்போது தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இலங்கை, இந்தியாவில், இக்கிருமி தாக்கியதாக இதுவரை எந்த செய்தியும் இல்லை. இந்நிலையில், உலக சுகாதார மையத்தின் அவசரக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு பிறகு, ஜிகா வைரஸ் காரணமாக சர்வதேச சுகாதார அவசரநிலையை பிரகடனம் செய்தது உலக சுகாதார நிறுவனம்.

கடந்த 2007ஆம் ஆண்டு முதல் இதுவரை காய்ச்சல், எபோலா மற்றும் போலியோ காரணமாக மூன்று முறை சர்வதேச அவசர நிலையை சுகாதார மையம் பிரகடனம் செய்துள்ளது. தற்போது, ஜிகா வைரஸ் காரணமாக 4ஆவது முறையாக அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து உலக சுகாதார மைய பொது இயக்குநர் மார்க்ரேட் ஷான் செய்தியாளர்களிடம்



கூறும்போது, "ஜிகா வைரஸை கண்டறிவதிலும் அதை அழிப்பதிலும் சர்வதேச ஒத்துழைப்பு தேவை. அதேநேரத்தில், அமெரிக்காவில் அடுத்த ஆண்டுக்குள் இந்த வைரசால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையானது 4மில்லியனை தாண்டும் என்று மதிப்பிடப்பட்டு உள்ளது. ஜிகா வைரஸ் காரணமாக பயணங்கள் மற்றும் வியாபாரங்களை தடை செய்ய தேவையில்லை. ஜிகா வைரஸ் பாதிப்புள்ள நாடுகளுக்கு பயணம்செய்ய இருப்பவர்கள், தங்கள் குடும்ப மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் நுளம்புகள் கடிக்காதவண்ணம் ஆடைகளை அணிந்து கொள்ளவேண்டும்" என்றார்.

பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவிருக்கும் நிலையில், கர்ப்பினிகளை ஜிகா வைரஸ் வேகமாக தாக்குவதால் அவர்கள் இங்கு வரவேண்டாம் என்று பிரேசில் அரசு அறிவித்துள்ளது.

## பாலில் பூண்டு சேர்த்து குடிப்பதால்...



பூண்டை பாலுடன் சேர்த்துக் குடிக்கலாம். இதனால் உடலுக்கு ஏராளமான நன்மைகள் கிடைக்கும். இந்த பால் குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை அனைவரும் குடிக்கலாம். இந்த பால் மிகவும் சுவையானதாகவும் இருக்கும்.

* உங்களுக்கு திடீரென சளி மற்றும் காய்ச்சல் வந்தால், அப்போது பூண்டு சேர்த்த பாலைக் குடியுங்கள். இதனால் பூண்டில் உள்ள கலவைகள் சளி மற்றும் காய்ச்சலில் இருந்து உடனடி விடுதலைக் கொடுக்கும்.
* உங்கள் முகத்தில் முகப்பரு அதிகம் இருந்தால், பூண்டு கலந்த பாலை முகத்தில் தடவுவதோடு, அவற்றைக் குடித்துவந்தால் பருக்கள் வருவதை முழுமையாகத் தடுக்கலாம்.
* தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் பூண்டு பாலைக் குடித்துவந்தால், தாய்ப்பாலின் சுரப்பு அதிகரிக்கும். அதிலும் பிரசவம் முடிந்த பின், பூண்டு பாலை குடித்து வந்தால், குழந்தைக்கு தினமும் போதிய அளவு தாய்ப்பால் கிடைக்கும். மேலும் உடலில் உள்ள தேவையில்லாத கொழுப்பையும் கரைக்கும்.
* செரிமானம் பிரச்சினை இருப்பவர்கள் பூண்டு பால் குடிப்பது நல்லது. ஏனெனில் பூண்டு, உணவைச் செரிக்கும் செரிமான திரவத்தை தூண்டி, உணவுகள் எளிதில் செரிமானமாக உதவும்.
* பூண்டு கலந்த பாலைக் குடிப்பதன்மூலம் வயிற்றில் வளரும் புழுக்களை அழிக்கலாம். அதற்கு இந்த பாலை காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் குடிக்கவேண்டும்.

## எல்லோரும் அறிந்திருக்க வேண்டிய மருத்துவக் குறிப்புகள்

71. நீரிழிவு பிரச்சினை உள்ளவர்கள் அனைத்து வகை கீரைகள், காய்கள், வாழைத்தண்டு சாப்பிடலாம். வெந்தயம் மிக நல்லது.

72. உப்பில் ஊறிய ஊறுகாய், கருவாடு, அப்பளம், வற்றல் கூடவே கூடாது. அசைவம் வாரத்தில் 100 கிராம் அளவில் சாப்பிடலாம். முட்டையில் வெள்ளைக்கரு மட்டும் ஓ.கே! உயர் ரத்த அழுத்த பிரச்சினை உள்ளவர்களுக்கும் இது பொருந்தும்.

73. மா, பலா, வாழை, காய்ந்த திராட்சை, சப்போட்டா, பேரீச்சை ஆகியவற்றைத் தவிர்க்கலாம். பனை வெல்லம், பனங்கற்கண்டு, தேன், மலைவாழை, லேகியம், பஞ்சாமிர்தம் சேர்க்கவே கூடாது.

74. இரண்டு, மூன்று வெண்டைக் காய்களின் காம்பு மற்றும் அடிப்பகுதியை நீக்கி, நெடுக்குவாட்டில் கீறல்களை போட்டுவிட்டு இரவு முழுக்க டம்ளர் நீரில் மூடி வைக்கவேண்டும். காலை உணவுக்குமுன் இந்த நீரை மட்டும் அருந்திவர, இரண்டே வாரத்தில் சீனியின் அளவு குறையும். இது மேற்கத்திய நாடுகளின் எளிய வைத்தியம்.

75. உடல் எடையைக் குறைக்கிறேன் பேர்வழி என சாப்பாட்டின் அளவை திடீரென குறைப்பது ஆபத்து. உடலில் சீனியின் அளவு வேறுபட்டு, நீரிழிவு நோய் வருவதற்கும் வாய்ப்பிருக்கிறது.

76. நீரிழிவு, டி.பி., கேன்சர், எய்ட்ஸ் ஆகிய நோய்களால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கும், ஸ்டீரோய்டு மாத்திரை சாப்பிடுபவர்களுக்கும் உடலில் எதிர்ப்புச் சக்தி குறைந்து இருக்கும். இவர்களை எளிதில் நோய் தாக்கும். எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம்.

77. வாந்தி, பேதி ஏற்பட்டு மருத்துவமனை செல்ல தாமதமாகும் சூழலில் உடலில் இருந்து வெளியேறிய நீருக்கு இணையாக உடனே சீனி மற்றும் உப்பு கலந்த நீரோ, இளநீரோ குடிக்கவேண்டும்.

78. நடு இரவு அல்லது பயண நேரங்களில் திடீர் தடிமல் அடிக்கிறது. உடனே டாக்டரை பார்க்கமுடியாத நிலை. அதற்காக சும்மா இருக்க வேண்டாம். வீட்டில் இருந்தாலோ அல்லது பயணத்தின் இடையிலோ பரசிட்டமோல் மாத்திரை ஒன்றை பயன்படுத்துவது நல்லது. அதன்பிறகு, 6 மணிநேரத்துக்குள் டாக்டரை சந்திப்பது நல்லது.

79. காதுகளை வாரம் இருமுறை மெல்லிய கொட்டன் துணிகளால் சுத்தம் செய்யவேண்டும். சாவி, ஹேர்பின், பட்ஸ் போன்றவற்றைத் தவிர்க்கவேண்டும். ஏனெனில் பட்ஸ் போடும்போது திட அழுக்குகள் அப்படியே அழுத்தப்படுமேதவிர, வெளியில் வராது.

80. வயிற்றுப்போக்கு விடுபட உடனடி உபாயம் வெறும் கொய்யா இலைகளை மெல்வதுதான்.

81. சாப்பிட்டதும் நெஞ்செரிச்சலா? சிறிது வெல்லம் கரைத்த நீரை அருந்தினால் போதும்.

82. வியர்வை தங்கிய உடையுடேனேயே இருப்பது ஆபத்தானது. அதுவே நோய் தொற்றுக்கான காரணியாக அமைந்துவிடும்.




# திருடன், கொலைகாரன் எல்லோருக்குமா நீங்கள் ஆஜராக வேண்டும்?

## விளக்குமட்டுமா சிவப்பு?

'உள்வீட்டு நீதிமன்றத்தில்' குறுக்கிட விரும்பாத குப்புசாமி, தன் வீடு நோக்கி நடந்தார். டைனிங் டேபிளில் வந்தமர்ந்தார் வேதநாயகம். அவள் கொஞ்சம் 'கூட்டு' எடுத்துவைத்தாள்.

"நாகரிகச் சமுதாயம் 'கூட்டு' வாழ்க் கையையே மறந்துவிட்டது" என்றார் வேதநாயகம்.

அவள் 'குழம்பு' எடுத்து ஊற்றினாள்.

"மனிதர்களுடைய அறிவே குழம்பிப் போயிருக்கிறது" என்றார் வேதநாயகம்.

"உங்கள் 'சிலேடை' நன்றாக இருக்கிறது.

உபன்யாசச் சாமியாராகப் போயிருக்கவேண்டிய உங்களை வக்கீலாக்கி, என்னையும் கொண்டு வந்து வைத்துவிட்டார் மாமா. சமுதாயத்தில் உள்ள பாவப்பட்ட ஜென் மங்கள் எல்லோரையும் நம்மால் காப்பாற்ற முடியுமா?" என்றாள் சரசு.

"எறும்பின் வாய் ஒரு அரிசி யைத் தூக்கமுடிகிறது. நம்முடைய முதுகு எவ்வளவு சுமக்க முடிகிறதோ, அவ்வளவு சுமக்கட்டுமே!" என்றார் வேதநாயகம்.

"இப்படி நீங்கள் செய்வதால் பொலிசாருக்கு உங்கள்மீது பகை வந்துவிடாதா? என்று கேட்டாள் சரசு.

காரியம் செய்வது என்று துணிந்து விட்டால், யாரையாவது பகைத்துக் கொண்டுதான் தீரவேண்டும். "பகையே இல்லாதவன்; என்று ஒருவன் பேர் எடுத்தால் அவன், 'ஒரு காரியமும் செய்யாதவன்; என்று பொருள். காந்திருக்கும் பகைவர்கள் இருந்தார்கள். கடவுளுக்கும் பகைவர்கள் இருந்திருக்கிறார்கள்" என்றார் வேதநாயகம்.

"இதிலே என்ன கிடைக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள் சரசு.

"நமது சட்டத்தின் அடிப்படையே தவறானது என்று நிரூபிப்பது என் நோக்கம். வசதியுள்ளவன், வசதியற்றவனைப் பாழ்படுத்துவதற்குச் சட்டம் ஒரு கருவியாக இயங்குகிறதே தவிர, அதனால் விளையும் நன்மைகள் குறைவு என்று உணர்த்துவதே என் எண்ணம். அதன்மூலம் பத்துப் பேராவது அது பற்றிச் சிந்திக்கட்டுமே! என்றார் வேதநாயகம்.

" எத்தனை பேரோ இதற்கு முன் னால் சிந்தித்திருப்பார்கள். ஆனால் அத்தனைபேரும் இதை எப்படித் திருத்துவது என்ற புரியாமல் செத்துப் போயிருப்பார்கள்" என்றாள் சரசு.

"அப்படிச் செத்துப்போவதில் ஆத்மா விற்காவது ஒரு நிம்மதி உண்டு" என்றார் வேதநாயகம்.

"அதற்காக? திருடன், கொலைகாரன் எல்லோருக்குமா நீங்கள் ஆஜராக வேண்டும்?" என்றாள் சரசு.

"எல்லா திருடர்களுக்கும் நான் ஆஜராகவில்லையே. சமுதாயத்தில் பெரும்பான்மையான திருடர்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வக்கீல் தேவையில்லை. அவர்களே வக்கீல்கள். அவர்களே நீதிபதிகள், ஆனால் எவனொருவனுக்கு எதுவுமே இல்லையோ அவன் உண்மையிலேயே திருடனாக இருந்தால்கூட நான் ஆஜராவேன்" என்றார் வேதநாயகம்.

"திரும்பத் திரும்ப அதே பல்லவியைத்தான் பாடுகிறீர்கள்" என்ற சரசு, சாதத்தை எடுத்து வைத்துத் தயிரை எடுத்து ஊற்றினாள்.

"என்ன செய்வது? பாலுக்குள்ளே தயிர் இருக்கிறது. தயிருக்குள்ளே வெண்ணெய் இருக்கிறது. வெண்ணெய்க்குள்ளே நெய் இருக்கிறது. ஒன்றுக்குள் ஒன்று இருப்பது உலகத்திற்குத் தெரிகிறது. ஆனால் எந்த மனிதருக்குள் என்ன இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கும் திராணி சட்டத்திற்கு இல்லையே? வக்கீல்தான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது! என்றார் வேதநாயகம்.

அவர் சாப்பிடும்போதும் சாப்பிட்டு முடிக்கும்போதும் இந்த வயதில் அவரைப் பற்றிக்கொண்ட காந்தீய உணர்ச்சிகளை எண்ணி வியந்தாள் சரசு.

அன்றைக்கொரு பாவப்பட்டவன் கிடைத்துவிட்டதால் மத்தியானம் கோர்ட்டுக்குப் போகவில்லை வேத நாயகம். மாலையில் அவரும் சரசு வும் கடற்கரைக்குச் சென்று காற்று வாங்கினார்கள்.

அங்கே "காற்று வாங்குதல்" என்ற வார்த்தையைக்கூடக் கேலி செய்தார் வேதநாயகம், " இந்தியாவில் எதையும் வாங்கத்தான் வேண்டியிருக்கிறது - காற்றைக்கூட" என்றார்.

"பாரத சமுதாயத்தில் இரண்டே வகையினர் அதிகமாக இருக்கிறார்கள். ஒருவன் யோக்கியனாக இருந்தால் மடையனாக இருக்கிறான். கெட்டிக் காரனாக இருந்தால் அயோக்கியனாக இருக்கிறான். புத்திசாலியாகவும், யோக்கியனாகவும் உள்ள ஒரு வேலைக்காரன்கூடக் கிடைப்பதில்லை. இவர்களிலே குற்றஞ்சாட்டப்பட்ட நிரபராதிகளைத் தரம் பிரித்து எடுப்பது பெரிய பணி. கடவுள்தான் எனக்கு இந்தப் பணியில் பேரும் புகழும் தரவேண்டும் என்றார் வேதநாயகம்.

ஒரு லட்சாதிபதியின் உணர்ச்சியே அவர் மனதில் நிரம்பி நின்றது.

அன்றிரவு இரவு சரசுவும் வெகு-நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பேச்சு அப்படியே அன்பில் நுழைந்து காதலில் மலர்ந்து அற்புத உறவைக் கொடுத்து, தன்னை மறந்த லயத்தில் இருவரையும் தூங்கவைத்தது.

இரவு இரண்டு மணியிருக்கும். வீட்டின் பின்புறம் ஏதோ சத்தம் கேட்டது.

அதைக் கேட்டும் கேளாமல் அரைகுறைத்தூக்கத்தில் திரும்பிப் படுத்தார் வேதநாயகம்.

பெண்ணின் காதுகள் கூர்மையானவை அல்லவா? ஏதோ மெதுமெதுவாக உடைக்கப்படுவதையும், வளைக்கப்படுவதையும் சரசுவால் கேட்கமுடிந்தது. சத்தம் போடாமல் அவள் வேதநாயகத்தை எழுப்பினாள்.

இருவரும் கொஞ்சநேரம் படுத்தபடியே அந்தச் சத்தத்தைக் கூர்ந்து கேட்டார்கள்.

ஓர் ஆள் குதிக்கின்ற ஓசை கேட்டது.

ஜன்னல் வழியாக ஓர் ஆள் உள்ளே இறங்குகிறான் என்பது அவர்களுக்குப் புரிந்தது.

வேதநாயகத்திற்கு ரிவோல்வர் லைசென்ஸ் உண்டு.

அவர் மெதுவாக எழுந்து, சத்தமில்லாமல், டிராயரில் இருந்த ரிவோல்வரை எடுத்து, சத்தம்போடாமல் கதவைத் திறந்து தயாராக நின்றார்.

அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே அந்த ஆள் மெதுவாக அந்தக் கதவருகே நெருங்கியபோது 'பளிச்' என்று அவர் கதவைத் திறந்து, மார்பில் ரிவோல்வரை வைத்து, 'அசை யாதே, சுட்டுவிடுவேன்" என்றார்.

சரசு ஓடி வந்தாள். வேதநாயகம் விளக்கைப் போட்டார். அந்த ஆளின் முகத்தைப் பார்த்ததும், மூர்ச்சையாகி விடுகின்ற நிலைமைக்கு வந்துவிட்டார் வேதநாயகம்.

ஆம்! அந்த ஆள்தான். அன்று காலையில் அவர் ஜாமீனில் எடுத்த சக்திவேல்!

## ஆயிரத்தில் ஒருவன்

"அடப்பாவி, நீயா?" என்றார் வேத நாயகம்.

பதிலுக்கு, "இது உங்கள் வீடா?" என்று கேட்டான் சக்திவேல்.

"என்ன?" என்று விசாரித்தாள் சரசு.

"இவனைத்தான் நான் காலையில் ஜாமீனில் எடுத்துவிட்டேன்" என்றார் வேதநாயகம்.

"தெரியுமே எனக்கு உங்கள் சமர்த்து! யார் இன்னார் என்று இனம்தெரியாமல் உதவிசெய்வதால் வருகின்ற வினை இது! "பாத்திரம் அறிந்து பிச்சையிடு' என்று தெரியாமலா சொன்னார்கள்? உங்கள் கணக்கு எடுத்த எடுப்பிலேயே தவறாகிவிட்டது."

ரிவோல்வரை இடுப்பிலே சொருகிக்கொண்டு, "அப்படி உட்கார்"



என்று ஒரு நாற்காலியை அவனுக்குக் காட்டினார் வேதநாயகம்.

எல்லா விளக்குகளையும் பிரகாச மாக எரியவிட்டாள் சரசு.

"என்னுடைய இலட்சியத்தையே பாழாக்கிவிட்டாயே பாவி. உனக்கு அறிவில்லை? காலையில் ஜாமீனில் வந்து இரவிலேயே திருட வந்திருக்கிறாயே? உங்களுக்கெல்லாம் எவன் கருணை காட்டுவான்?" என்று சற்றுக் கோபத்துடனேயே சொன்னார் வேதநாயகம்.

"ஏன் நீங்கள் இருக்கிறீர்களே!" என்று குத்திக்காட்டினாள் சரசு.

முகத்தைக் கைகளால் மறைத்துக் கொண்டு அழத்தொடங்கிய சக்திவேல், "பிணந்தூக்க வேண்டும்; பிணந்தூக்க வேண்டும்" என்றான்.

"நடிக்கிறான் பாருங்கள்" என்றாள் சரசு.

"என்ன பிணம்? யார் பிணம்?" என்று அப்போதும் வக்கீல் கேள்வி கேட்டார் வேதநாயகம்.

"என் மனைவியின் பிணம் ஐயா. என் மனைவியின் பிணம்" என்றான் சக்திவேல்.

வேதநாயகத்திற்கு நம்பிக்கை இல்லை.

இவன் திருடன் மட்டுமல்ல. அண்டப் புளுகனும்கூட என்று எண்ணத் தலைப்பட்டார். காலையில் பார்த்தோம். கர்ப்பிணியாக இருந்தாள். அதற்குள் எப்படி இறந்திருக்கமுடியும். அவரது அவநம்பிக்கை உச்சத்திலிருந்தது.

கேலியாகச் சிரித்தபடி, "நான் தவறு தான் செய்துவிட்டேன். உதவுவது என்று ஆரம்பித்துவிட்டால் சில தவறான நபர்களுக்கும் உதவவேண்டிவரும் என்று பரமஹம்சர் சொன்னது சரியாகப் போய்விட்டது.

(விளக்கு எரியும்)

# கூட்டமைப்புக்கு “கிளீன் செக்-மேட்” வைத்தது தமிழ் மக்கள் பேரவை

(08 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

பின்னர், அரசியல் சூழ்நிலை சாதகமாக வருமானால் - அப்போதைய நிலையைக் கருத்தில் எடுத்து - நடைமுறைக்கு வரும் புதிய அரசமைப்பில் திருத்தங்களைச் செய்வதன்மூலம் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளைப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம்.” - என்று ரணில் கூறிவிட்டர்.

இந்த விடயத்தில் தமிழர் தரப்பை - உங்கள் மக்களை - சமாளிப்பது உங்களின் பொறுப்பு.” - என்றும்கூட பிரதமர் ரணில் தெரிவித்துவிட்டாராம்.

“எங்கள் மக்களை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.” - என்று சுமந்திரன், பிரதமர் ரணிலிடம் உறுதியளித்தார் என்றும் கொழும்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

கட்சியின் பெயரையே “சமஷ்டிக் கட்சி” என்று வைத்துக் கொண்டு -

கடந்த தேர்தலிலும்கூட “அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரணதேவி!“ என்ற போக்கில் சமஷ்டி, வடக்கு - கிழக்கு இணைப்பு, சுயாட்சி என்ற கோஷங்களை தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரதான சுலோகங்களாக வைத்து, அதன் மூலம் வாக்குகளை அள்ளிக் கொண்டு - பதவிகளைச் சுருட்டிக் கொண்டவர்கள்', தீர்வு விடயத்தில் மக்கள் கருத்தை ஜனநாயக முறையில் உள்வாங்காமல், எதேச்சாதிகாரமாகவும், தென்னிலங்கைக்கு விலை போகும் விதத்திலும், இரகசியமான முறையில் காய்களை நகர்த்துவது கண்டு கொதித்து எழுந்திருக்கின்றார் முதல்வர் விக்னேஸ்வரன்.

அதன் விளைவுதான் தமிழ் மக்கள் பேரவை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் சிலரின் ஜனநாயக விரோத - சர்வாதிகார - போக்கினால் தீர்வு விடயத்தில் ஒட்டுமொத்தத் தமிழினத்துக்கும் ஏற்பட்டுவிடக்கூடிய அனர்த்தத்தை உய்த்துணர்ந்து கொண்ட தமிழ் புத்திஜீவிகள் பலரும் அந்த முயற்சிக்கு முண்டுகொடுக்க முன் வந்தனர்.

கூட்டமைப்பின் எதேச்சாதிகாரத்துக்கு எதிராக ஏதேனும் செய்தாகவேண்டும் என்ற அதீத ஆர்வக்கோளாறினால் அந்தப் பேரவை முயற்சி அரைகுறைப் பிரசவமாகவே அரங்கேறியிருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால் அதற்கு மறுபுறத்தில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றமையையும் நாம் மறந்துவிட அல்லது மறுத்துவிட முடியாது.

தமிழ்க் கூட்டமைப்பு ஈழத் தமிழ் மக்களின் ஏகோபித்த அரசியல் சக்தி என்று கூறினாலும்கூட, விரும்பும் எந்த தமிழ் அரசியல் தரப்பும் அதில் இணைத்து விடமுடியாது. சம்பந்தர், சுமந்திரன், மாவை போன்றோர் விரும்பினால் மட்டும் யாருக்கும் இடம் அங்கத்துவம் “சீட்” - எல்லாம்.

ஆனால் தமிழ் மக்கள் பேரவை அப்படியல்ல. வருகின்றவர்கள் எல்லோரையும் அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவராயினும், எந்தப் புத்திஜீவி அல்லது அரசியல் தரப்பைச் சார்ந்தவராயினும் அவர்களுக்குக் கதவு திறந்தே இருக்கிறது என்கிறது பேரவை.

டக்ளஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான் போன்றோருக்கும் பேரவையின் கதவுகள் திறந்தே இருக்கின்றன என்று அதன் இணைத் தலைவர்களுள் ஒருவரான முதல்வர் விக்னேஸ்வரன் ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்திருக்கின்றமை மறக்கக்கூடியதல்ல.

தமிழ்க் கூட்டமைப்பு அரசியல் தீர்மானங்கள் எடுப்பது ஜனநாயக முறையில் அல்ல. தலைவர்களின் விருப்புக்கு அமைய மட்டுமே.

ஆனால் பேரவையில் நிலைமை முற்றிலும் மாறானது. எல்லா விடயங்களிலும் அனைத்துத் தரப்பினரின் கருத்துக்கள் உள்வாங்கப்படுகின்றன. ஒட்டியும், வெட்டியும் சூடான கருத்துப் பரிமாற்றங்களுக்கு இடமளிக்கப் படுகின்றது. முழு அளவில் ஜனநாயக முறைமை ஓங்கி ஒலிக்கின்றது.

தமிழர்களின் - ஒரு தேசிய இனத்தின் - அரசியல்ரீதியான வரலாற்றுத் தலைவிதியைத் தீர்மானிப்பதில் அனைத்து மக்களின் கருத்துக்களும் உள்வாங்கப்படுவது அவசியமான பிரதானமானது. அப்படியில்லாமல் ஒரு சிலரின் மூடுமந்திரமான நடவடிக்கைகள் மூலம் ஒட்டுமொத்தத் தமிழினத்தின் மீதும் ஒரு கட்டாய தலைவிதி திணிக்கப்படுவதைத் தகர்த்தெறியும் ஆரம்பப் புள்ளியாகவே பேரவை முகிழ்ந்திருக்கின்றது.

அந்தவகையில் பேரவையின் பிறப்பாக்கமும், குறுகிய காலத்தில் அதன் செயற்பாடுகளும், பெறுபேறுகள்




அமைந்திருக்கின்றன என்பது ஏற்கப்பட வேண்டியதே.

இதனையே பேரவையின் தீர்வு நகல் யோசனை தொடர்பான முன் வரவை வெளியிட்டு வைத்து பேரவையின் இணைத் தலைவர்களுள் ஒருவரான முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரையும் அமைந்திருக்கின்றது.

### முதல்வர் விக்கி உரை

“தமிழ் மக்களின் எதிர்காலமே எமது கரிசனையாகும். இங்கு வெளியிடப்படும் திட்ட வரைவு மட்டுமே தமிழ் மக்களின் ஒரேயொரு தீர்வு என்று நாங்கள் கூறவில்லை. கூறவும் முடியாது. பலவிதமான தீர்வுகளைப் பலரும் முன்வைக்கலாம். ஆனால் இதுவரை காலமும் எமது அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் தீர்வுத் திட்டங்களை உருவாக்கி மக்களிடையே பரப்பி மக்களின் கருத்துக்களை அறிய எவருமே முன்வந்ததில்லை. தமிழ் மக்கள் பேரவை அத்தகையதொரு மகத்தான கைங்கரியத்தில் ஈடுபட்டிருப்பது சிலருக்கு ஒருவேளை மனத்தாக்கத்தைக் கொடுத்திருக்கலாம். தாங்கள் அதைச் செய்யவில்லையே என்ற ஒரு மனக்குறையை அது, அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கலாம்.

“ஆனால் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய கருத்துரைகள், தீர்மானங்கள் கட்சிரீதியாக மட்டுமே வெளிவரவேண்டும் என்று எதிர்பார்ப்பது வருத்தத்திற்குரியது. மக்களுக்காகக் கட்சிகள் இருக்கின்றனவே ஒழிய, கட்சிக்காக மக்கள் இருக்கமுடியாது. கட்சிகள் மக்கள் மனமறிந்து நடந்து கொள்ளவேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டோம் என்ற ஒரே காரணத்திற்காக மக்கள் நலம் சார்ந்த விடயங்களில் மக்களின் மனமறிய முற்படாமல் தான்தோன்றித்தனமாகச் செயற்படக்கூடாது. கடந்த கால கட்சி அனுபவங்களை முன்வைத்து தமிழ் மக்களின் வருங்கால வாழ்வைப் பாழடித்துவிடாதீர்கள் என்று யாவரிடமும் தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

“தமிழ் மக்களின் புத்திஜீவிகள், தமது மக்கள் சார்பாக நடவடிக்கைகள் எடுத்து தமிழ் மக்களுக்கு நன்மை தரக்கூடிய அரசியல் வழிமுறைகளை எடுத்தியம்புவது எந்தவிதத்திலும் பிழையென்று யாராலும் கூறமுடியாது. உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மற்றைய சகல கட்சிகளும் சேர்ந்து தமிழ் மக்கள் பேரவையை ஊக்குவிக்கவேண்டுமேயொழிய எதிர்ப்பைத் தெரிவிக்கக்கூடாது.

“கட்சிக்கான விசுவாசம் என்பது சிலரின் கண்களை மூடிவிட்டது. ஆனால் வடகிழக்கு மாகாண மக்களின் வருங்காலமே முக்கியம். வழி வழியாக வரவிருக்கும் எமது வாரிசுகளின் வருங்கால வாழ்க்கையே எமக்கு முக்கியம். அதற்காக எந்த ஒரு கடினமான பாதையில் பயணிக்கக்கூட நாங்கள் தயங்கக்கூடாது. அரசாங்கங்கள் தயாரிக்கும் அரசமைப்பில் தமிழ் மக்களின் தேவைகள், அபிலாசைகள், நோக்குகள், உரிமைகள் யாவையும் உள்ளடக்கப்படாவிடில் அத்தகைய அரசமைப்பு ஒருபோதும் நன்மை பயக்கப் போவதில்லை.

“உதாரணத்திற்கு 1981ஆம் ஆண்டில் பேசப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைகளே எமக்குப்போதும் என்று கட்சி ரீதியாக நாங்கள் கூறினால் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்று நாங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

“இன்றைய காலகட்டத்தில் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் வலியுறுத்தல்களுக்குக் கட்டுப்பட்டு திணறிக் கொண்டிருக்கின்றது. அரசாங்கத்தினுள் பிளவுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன. இந்த நிலையில் “எதைத் தந்தாலும் தாருங்கள் நாம் அதை ஏற்றுக் கொள்வோம்” என்ற மனோபக்குவம் எங்களிடம் இருப்பது சரியென்று எனக்குப் படவில்லை.

“எமது தொடர் பாரம்பரியம் 2000 வருடங்களுக்கு மேலானது. இதனை மனதில் நிறுத்தி வடகிழக்கு மாகாணங்களில் வாழும் எமது மக்களின் சரித்திர ரீதியான உரிமைகளைப் பாதுகாக்கும் வண்ணம் அரசமைப்பு அமையவேண்டும் என்பதே எமது அவா.

“அவற்றை மனதில் முன்னிறுத்தியே இந்த வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது என்று தயாரிப்புக் குழு கூறியுள்ளது. அதனைப் பரிசீலித்துப் பார்ப்பது எமது கடப்பாடாகும். சில இடங்களில் முரண்பாடுகள் காணப்படலாம். ஒவ்வாத தன்மை எழக்கூடும். மேலதிக ஏற்புக்கள் தேவை என்று மனதிற்குப் படலாம். இவை

அனைத்தும் மக்களால் பரிசீலிக்கப் பட்டுத் தயாரிப்புக் குழுவிற்குத் தெரியப்படுத்தப்படவேண்டும். நான்கூட அவ்வாறான எனது கருத்துக்களை வெளியிடுவேன். இந்த வரைவை யார் தயாரித்தார்கள் என்பதிலும் பார்க்க எந்தளவுக்குக் குறித்த வரைவு எமது தமிழ் மக்களின் உள்ளக் கிடக்கைகளை, எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலிக்கின்றது என்பதே முக்கியம்.

“எமது வரைவு முற்றிலும் மாற்றப் படவேண்டும் என்றுகூட மக்கள் விரும்பலாம். அத்தகையதொரு நிலை வந்தாலும் அதை நாம் ஏற்றுக்கொள்வோம். காரணம் இந்த செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மை அவசியம். ஜனநாயக வழிமுறை அவசியம். தமிழர் நலம் பேணும் ஆத்மார்த்த எதிர்பார்ப்பும் அவசியம். கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, மக்கள் நலம் தேடும் ஒரு புனித கைங்கரியத்தில் நாம் யாவரும் ஈடுபட்டுள்ளோம் என்பதை நாம் மறத்தலாகாது.

“எமது தமிழ் மக்கள் பேரவை பல நல்ல நடவடிக்கைகளுக்கு முன்னோடியாகப் பரிணமித்துள்ளது. எமது தமிழ் மக்களிடையே அரசியல் யாப்புரீதியான சிந்தனைகளை மேலோங்கச் செய்துள்ளது. அதாவது வெறும் கட்சி அடிப்படையில் சிந்திக்காது தமிழ் மக்களின் தூரகால நலம் பற்றிச் சிந்திக்கவைத்துள்ளது.

”எமது தமிழ் மக்கள் பேரவை எந்தக் கட்சிக்கும் சார்பாகவோ எதிராகவோ நடக்க முன்வராததால் அவர்கள் வெளிக்கொண்டு வந்திருக்கும் வரைவை மக்கள் யாவரும் சுதந்திரமாகவும் இதய சுத்தியுடனும் பரிசீலிக்க வழிவகுத்துள்ளது. பல்கட்சியினர் பலர் சேர்ந்து கலந்துறவாடியதால் கட்சிகளுக்கு அப்பால் நின்று கடமையாற்ற வழி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்து அரசியல் ரீதியாக இதுவரை செயற்பட்ட தமிழ் மக்களின் கட்சிகள் யாவும் மக்கள் மனோநிலைக்கு மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டிய ஒரு நிலையை எழுப்பியுள்ளது. அரசமைப்பு மாற்றங்கள் எவ்வளவு முக்கியமானவை, எத்துணை தொடர் விளைவுகள் கொண்டவை, எந்தளவு கடமையுணர்ச்சியுடனும் கண்ணியத்துடனும், கரிசனையுடனும் பரிசீலிக்கப்படவேண்டியவை என்பது இப்பொழுது சகலராலும் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

“அடுத்ததாக, பெரும்பான்மை தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களுக்குச் செயலுரு கொடுத்துள்ளது இந்த வரைவு என்று கூறலாம். அதாவது எமது தேர்தல் மேடைகளில் சில சொற்களைப் பாவித்துக் கைதட்டல் வாங்கிய காலம் போய் அச்சொற்களின் தார்பரியம் என்ன, தகைமைகள் என்ன, தத்துவங்கள் என்ன என்றெல்லாம் அலசி ஆராய ஒரு சந்தர்ப்பம் அளித்துள்ளன தமிழ் மக்கள் பேரவையின் செயற்பாடுகள். ஆகவே சொற்களுக்குச் செயலுரு கொடுக்கத் துணைபுரிந்துள்ளது தமிழ் மக்கள் பேரவை. தேசியம் என்றால் என்ன, சுயாட்சி என்றால் என்ன, சமஷ்டி என்றால் என்ன என்று மக்கள் கேட்டு அவற்றிற்கான பதிலைப் பெற்றுக் கொள்ள வழி அமைத்துத் தந்துள்ளது தமிழ் மக்கள் பேரவை.

“மேலும் அரசாங்கமானது யாவரிடமும் புதிய அரசியல் யாப்பு வரைவிற்கான கருத்தறியும் ஒரு செயற்பாட்டில் தற்போது ஈடுபட்டிருக்கும்போது எமது செயற்பாடுகள் அதற்கு ஒத்திசைவாக நடந்தேறிவருவது திருப்தியை அளிக்கின்றது. எந்த ஒரு தனிநபரும், சங்கமும், மக்கள் குழுவும், ஏன் கட்சிகளுங்கூட தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்படும் கருத்தாவணத்தை அடிப்படை ஆவணமாகப் பாவிக்க நாம் வழி அமைத்துக் கொடுத்துள்ளோம். மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் எமது தமிழ் மக்கள் தலைவர்கள்கூட தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்து என்ன என்பதை ஆராய்ந்தறிந்து அதனை வெளிக்கொண்டு வரவும் தயங்காதிருப்பது எமக்கு மன மகிழ்வைத் தருகின்றது.

“எமது செயற்பாடு தமிழ்பேசும் மக்கள் கருத்தறிந்து செயற்படும் ஒரு நிலைக்கு அரசாங்கத்தை அழைத்துச் சென்றால் அதுவே எமது வெற்றியென்று கருதலாம். “பதின்மூன்றாவது திருத்தமே தீர்வு, அதற்கு மேல் எதுவுந் தரமுடியாது, சமஷ்டியை வழங்கமுடியாது”- என்றெல்லாம் கூறும் ஆளுங்கட்சி அவற்றிற்கப்பால் சென்று எமது மக்கள் மனம் அறிய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. கட்சிகளை மையமாக வைத்து இப்பிரச்சினைய்யை அணுகாமல், களநிலையை அறிந்து, கருத்துக்கு முதலிடம் கொடுத்து, சர்வதேச தமிழ்ப் பேசும் மக்களின் ஒருமைப்பாட்டுடனும் எமது தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடனும் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் - அதாவது வடகிழக்கு மாகாணத் தமிழரும், முஸ்லிம்களும், மலையக மக்களும் - நிலையான ஒரு அரசியல் தீர்வைப் பெற எமது இந்த கைங்கரியமானது வழி வகுக்கட்டும்.” - என்று கூறினார் முதல்வர் விக்னேஸ்வரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவுசெய்வதில் தொடங்கி, பல திட்டங்கள், செயற்பாடுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்து ஆரம்பித்துள்ள போதிலும் அவை எவையும் குறித்த காலத்துக்குள் செயலுருப் பெறவே இல்லை.

ஆனால், தமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்து ஒரு குறுகிய காலத்துக்குள்ளேயே, பல தரப்பு புத்திஜீவிகளையும் சிந்தனையாளர்களையும் ஒன்றிணைத்து - பல தரப்புக் கருத்துக்களையும் ஜனநாயகரீதியில் உள்வாங்கி - சரியோ, பிழையோ தீர்வுக்கு முன்மாதிரியான, காத்திரமான ஒரு நகல் வரைவை வெளியிடவும் செய்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒப்பிடுகையில் இதுவும் பேரவைக்கு ஒரு “பிளஸ் பொயிண்ட்”தான்.

# வாராந்த செய்திக்கொத்து

## உண்மைகளை வெளிப்படுத்தாவிடின் அடுத்தகட்ட நகர்வுகள் கடினமான-தாக அமையும்!- அரசாங்கம்



இலங்கை உள்ளக விசாரணை பொறிமுறைகளை கையாண்டாலும் எமக்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியமாகின்றது என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார். சர்வதேசத்தை இணைத்துக் கொண்டு இலங்கையின் சிக்கல்களை மாற்றியமைப்பதே சாதகமான வகையில் அமையும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் விஜயம் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே அமையுமென நம்புகின்றோம்.

## 31186 பேர் மீள்குடியேற முடியாத அவலநிலை! ஐ.நா ஆணையாளருக்கு தெரிவிப்பு



யாழ்.வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் 22 கிராமசேவ-கர் பிரிவுகளில் 9059 குடும்பங்களை சேர்ந்த 31186 பேர் சொந்த நிலங்களில் மீள்குடியேற முடியாதநிலையில் இடம்பெயர்ந்தோருக்கான நலன்புரி முகாம்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மேற்கண்டவாறு வலி,வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு குழு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு வழங்கிய அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. யாழ்.சபா பதிப்பிள்ளை நலன்புரி முகாமிற்கு சென்றிருந்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு வழங்கிய அறிக்கையிலேயே மேற்படி தகவல்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## புகலிட கோரிக்கையாளர்கள் படகு விபத்து 33 பேர் பலி!



சட்டவிரேதமான முறையில் புகலிட கோரிக்கையாளர்கள் பயணித்த இரு வேறு படகுகள் துருக்கி கடற்பரப்பில் வைத்து விபத்துக்குள்ளானதில் 33 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

துருக்கியின் பாலிகேசிர் மாகாணத்திற்கு அருகில் இடம்பெற்ற படகு விபத்தில் 22 பேரும், ஏஜியன் கடற்பரப்பில் இடம்பெற்ற மற்றுமொரு படகு விபத்தில் 11 பேர் உள்ளடங்கலாக 33 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. க்ரீஸ் தீவான லெஸ்பாஸ்க்கு செல்ல முயற்சித்த புகலிடக் கோரிக்கையாளர்களின் படகுகளே இவ்வாறு விபத்துக்குள்ளாகி இருப்பதாகவும் அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## எம்.பியாகிறார் பொன்சேகா!



வெற்றிடமாக இருக்கின்ற ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பி பதவியை ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அங்கீகரித்துள்ளது. கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

## இழுவைப்படகு தடை செய்யும் சட்டமூலம் நாளை நாடாளுமன்றில்



இயந்திர இழுவைப்படகு பயன்பாட்டை தடை செய்யுமாறு வலியுறுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் சட்டமூலம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. கடந்த 1996 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கம் மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் சட்டத்தில் திருத்தங்களை வலியுறுத்தும் வகையில் இந்த சட்டமூலம் அமைந்துள்ளது. இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் உலகில் சிலிக்கு அடுத்தபடியாக இயந்திர இழுவைப்படகு பயன்பாட்டை தடைசெய்ய வலியுறுத்தும் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தும் இராண்டாவது நாடாக இலங்கை பதிவாகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மஹிந்தவின் பிரசாரத்தை முறியடிக்க பொன்சேகாவை களமிறக்க முயற்சி



போர்க் குற்றச்சாட்டு தொடர்பில் மகிந்த ஆதரவு எதிர்க்கட்சியினர் சிங்கள மக்கள் மத்தியில் செய்து வரும் பிரசாரத்தை முறியடிக்க அரசாங்கம் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் யோசனைகளை நிறைவேற்ற அரசாங்கம் முயற்சிப்பதாகவும், இதனால் இலங்கைக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் மகிந்த ஆதரவு எதிர்க்கட்சியினர் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்துவருகின்றனர். இந்தப் பிரசாரம் தற்போதைய அரசாங்கத்தின்மீது சிங்கள மக்களுக்கு ஆதரவைக் குறைக்கவோ, ஆத்திரமூட்டவோ செய்யக்கூடும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

## வடபகுதியில் அடுத்த வருடம் அகதி முகாம் இருக்காது! செயிட் அல்ஹூசைன்



இலங்கைக்கு தாம் அடுத்த வருடம் வரும்போது அகதி முகாம் இருக்காதென்றும் அனைவரும் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருப்பர் என்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையா-ளர் செயிட் அல் ஹூசைன் உறுதியளித்துள்ளார். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா ஆணையாளர், சபாபதிபிள்ளை அகதி முகாமுக்குச் சென்று அங்குள்ள மக்களை சந்தித்து இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார். இதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்திற்கு கொண்டுவருவதாக அவர் கூறியுள்ளார். அத்துடன் மீள்குடியேற்றம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதாகவும் ஐ.நா ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரவூப் ஹக்கீம் - துருக்கி நாட்டின் பிரத மர் அஹ்மெட் டவுடோக்லு சந்திப்பு



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசிய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களுக்கும் துருக்கி நாட்டின் பிரதமர் அஹ்மெட் டவுடோக்லு அவர்களுக்கிடையிலான முக்கிய சந்திப்பு துருக்கி நாட்டின் பிரதமர் அவர்களின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த திங்கட்கிழமை காலை நடைபெற்றது. இதில் முக்கியமாக இலங்கையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், நாட்டின் வடபகுதியில் இடம்பெயர்ந்து, மீளக்குடியேறும் மக்களுக்கும் மனிதாபிமான அடிப்படையில் வீடுகளை அமைத்துக் கொடுப்பது தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்பட்டது.

# வடக்கின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களின் பிரதிபலிப்புகள் என்ன?

**மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள்தான் இப்படி என்றால், பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களில் நடப்பதோ ஆகப்பெரிய கோமாளிக்கூத்துக்கள் என்று மக்கள் கூறுகின்றார்கள். கூட்டங்களை அறிவித்தால் பாராளுமன்ற உறுப்பினர்களான விஜயகலாவும் அங்கஜனும் ஒருவருக்கொருவரில் யார் பெரியவர் என்பதிலும் மத்திய அரசுக்கு யார் முக்கியமானவர் என்பதிலும், தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றவகையில் தமது பணிப்புரைகளையே அதிகாரிகள் கேட்டு நடக்கவேண்டும் என்றும் நடந்துகொள்வதைப் பார்த்து அதிகாரிகள் மிரண்டு போய் இருக்கின்றார்கள்.**

வடமாகாணத்தில் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களை நடத்தி முடிப்பதற்குள் மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் பெரும்பாடு படுகின்றார்கள். இணைத்தலைவராக வடமாகாண முதலமைச்சர் இருந்தாலும் ஏனைய இணைத்தலைவராக இருக்கக்கூடியவர், ஒரு அந்தஸ்துள்ள மத்திய அமைச்சராக இருக்கவேண்டும் என்று முதலமைச்சர் தொடர்ந்தும் விமர்சித்து வருகின்றார்.

இணைத்தலைவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்படுவது பொறுத்தமற்றது என்றும், தராதரமற்றது என்றும் முதலமைச்சர் தொடர்ந்தும் கூறி-வருவதால் இப்போதெல்லாம் முதலமைச்சரோடு ஒரே மேசையில் இணைத்தலைவர்களாக இருப்பதற்கு வடக்கின் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலபேர் வெட்கப்படுகின்றார்கள்.

இதுவரையிலும் நல்லாட்சி அரசாங்கத்தில் முழுமையான அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெறவே இல்லை. ஒருவர் வந்தால், அடுத்தவர் வரவில்லை என்றவகையில் ஏதோ ஒருவருடைய பிரசன்னக் குறைவோடுதான் சம்பிரதாயத்திற்கு கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆனாலும் சிலபேர் முதலமைச்சருக்கு சமமாக ஏதோ தங்களைவிட்டால் மத்திய அரசுக்கு வேறு ஆட்கள் இல்லை என்ற எண்ணத்தில் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் வந்து இருந்து கொண்டு அலம்புறதைப் பார்த்தால் முதலமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் விசர் பிடிச்சிடும்போல இருக்கின்றது.

இதுகளையெல்லாம் வாக்குப்போட்டு அதிகாரத்தில் இருத்தின சனம் திருந்தாதவரைக்கும் இதுகள் திருந்தாது என்று ஒற்றை வார்த்தையில் அதிகாரிகள் திட்டிற மாதிரித்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்துகொள்கின்றார்கள்.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள்தான் இப்படி என்றால், பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களில் நடப்பதோ ஆகப்பெரிய கோமாளிக்கூத்துக்கள் என்று மக்கள் கூறுகின்றார்கள்.

கூட்டங்களை அறிவித்தால் பாராளுமன்ற உறுப்பினர்களான விஜயகலாவும் அங்கஜனும் ஒருவருக்கொருவரில் யார் பெரியவர் என்பதிலும், மத்திய அரசுக்கு யார் முக்கியமானவர் என்பதிலும், தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றவகையில் தமது பணிப்புரைகளையே அதிகாரிகள் கேட்டு நடக்கவேண்டும் என்றும் நடந்துகொள்வதைப் பார்த்து அதிகாரிகள் மிரண்டு போய் இருக்கின்றார்கள்.

இருவரும் கூட்டங்களுக்கு வருகை தந்து உருப்படியான எதையாவது செய்தால் பரவாயில்லை. அதிக நேரத்தை தமது போன்களை நோண்டுவதிலேயே கூட்டத்தின் அதிக நேரத்தை செலவு செய்கின்றார்கள். அதையும் சகித்துக் கொண்டு கூட்டத்திற்கு அழைத்தால், கூட்டத்திற்கு வருவதற்கே காய்ச்சல், தலைவலி, தலைசுத்து என்று சுத்துமாத்துக் கதை சொல்லி அதிகாரிகளுக்கு தலைசுத்த வைக்கின்றார்கள்.

அக்காச்சிக்கு தலைசுத்தா இருப்பதால் தனக்கு சார்பாக சர்வாவை அனுப்பிவைப்பதாக அதிகாரிகளுக்கு சொல்லுறதும், சர்வா வந்து தனக்குப் பக்கத்தில சரிசமமாக இருந்தால் எனது மரியாதை என்னாவது என்று அவாவுக்கு தலைசுத்து என்றால், எனக்கு நெஞ்சுவலி வரமுடியாது கூட்டத்தை கேன்சல் பண்ணுங்கோ என்று அண்ணன் அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதுமாக பிரதேச அபிவிருத்திக் கூட்டங்கள் படாதபாடு படுவதாக தமது குறைகளை சொல்வதற்காக கூட்டத்துக்குப் போன மக்கள் புலம்பிக்கொண்டு போகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் இத்தனை இழுபறிக்குள் சிக்கிக்கொண்டுள்ளதைப் பார்க்கும்போது, குரங்குகள் அப்பம் பிரித்த கதையாகப் போகாமல் இருந்தால் சரிதான்.

**விதுரன்**

# வாரமொரு காரம்



## பயணிகள் விழிப்படைந்தால் மட்டுமே சாரதிகள் திருந்துவர்

"பயணிகள் விழிப்படைந்தால் மாத்திரமே சாரதிகள் திருந்துவர்" எனும் தொனிப்பொருளை நாம் அனைவரும் சிந்தித்தாக வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது. நீதிமன்ற உத்தரவுகள் ஊடாக சிலவற்றை நடைமுறைப்படுத்தும் போது பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளமையால் சட்ட அமுலாக்கங்கள் இறுக்கமாக இருந்தும்கூட தவறுகள் இடம் பெறுகின்றன. உதாரணமாக போக்குவரத்துப் பொலிசாரைக் கண்டவுடன் நிதானமாக ஓடும் சாரதிகள் பொலிசார் இல்லாத இடங்களில் தமது சுயரூபத்தைக் காட்டுகின்றனர். ஆகவே போக்குவரத்துப் பிரிவு வாகன சாரதிகளைத் திருத்துவதற்கு பயணிகள் விழிப்படையவேண்டும்.

அண்மையில் வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி ஆகியவற்றை மோதி தள்ளியதனால் 5 வயது சிறுமி உட்பட 3 பேர் படுகாயமடைந்ததுடன் அந்த வாகனம் வீதியோரத்தில் இருந்த வங்கி ஒன்றின் பெயர் பலகையையும், குறித்த வங்கியின் ATM இயந்திர பகுதியையும் உடைத்து தள்ளியுள்ளது. குறித்த விபத்துச் சம்பவம் பலாலி வீதியில் திருநெல்வேலி சந்திக்கு அருகில் கடந்த 03 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது, வசாவிளான் - யாழ்ப்பாணம் இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பயணிகள் பேரூந்து இலங்கைப் போக்குவரத்துப் பிரிவிற்குச் சொந்தமான பேரூந்தை முந்தி ஓடுவதற்காக மிகை வேகத்தில் வீதியில் பயணித்துள்ளதுடன், வீதி ஒழுங்கை மீறி முன்னால் சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முயன்றவேளை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் எதிரே வந்த முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியதுடன், வேகத்தை கட்டுப்படுத்தமுடியாமல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேரூந்தும் குறித்த மினி பஸ்சும் போட்டிக்கு ஓடும்போது உள்ளிருந்த பயணிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டிருந்தால் இவ்விபத்தினைத் தடுத்திருக்கலாம். துன்பியல் சம்பவம் இடம்பெற்றபோது விழிப்படைந்த பயணிகள் ஏன் முன்பு விழிப்படையவில்லை என்பதுதான் சிந்திக்கவேண்டிய விடயமாகும். தற்போது இவ்விபத்தின் சூடு இருக்கும்வரை சற்று நிதானமாக ஓடப்போகும் சாரதிகள் அது தணிந்த பின்பு மீண்டும் பழமைக்கோலம் கொள்ளப் போகின்றார்கள். இதனைத் தொடர்ந்து தடுப்பதற்கு என்ன வழி என்பது தொடர்பாகத்தான் சிந்திக்க வேண்டும்.

பயணிகள் ஒன்றிணைந்து வேகத்தை மட்டுப்படுத்த இனிவரும் காலங்களிலாவது துணியவேண்டும். ஒருமித்து கோசமிடும்போது சாரதி வேண்டுகோளைக் கடைப்பிடித்தே ஆகவேண்டும். அதற்கும் கட்டுப்படவில்லையானால் முறைப்பாடு செய்யும்போது சாரதிகள் திருந்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்படலாம்.

இலங்கையில் நாலரை மணித்தியாலத்திற்கு ஒரு தடவை ஒரு வீதி விபத்து இடம்பெறுவதாக சுகாதார அமைச்சின் அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாலரை மணித்தியாலத்திற்கு ஒரு தடவை இடம்பெறும் வீதி விபத்துக்களில் ஒருவர் வீதம் இறப்பதாகவும் ஏறக்குறைய ஆறு வாகன விபத்துக்கள் தினமும் இடம் பெறுவதாகவும் இதில் மூன்று பேர் தினமும் காயத்திற்கு உள்ளாவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூன் 30ஆம் திகதி வரை இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 2086 பேர் காயமடைந்துள்ளனர். 69 பேர் உயிரிழந்துள்ளனர். இக்காலப் பகுதியில் 448 மோட்டார் சைக்கிள் விபத்துக்களும், 171 முச்சக்கரவண்டி விபத்துக்களும், 69 பஸ்களுடன் சம்பந்தப்பட்ட விபத்துக்களும், 218 பாதசாரிகள் விபத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

இதேவேளை, வீதி விபத்துகள் காரணமாக வருடாந்தம் இரண்டாயிரம் முதல் இரண்டாயிரத்து 500 வரையிலானவர்கள் நாட்டில் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. நாட்டில் வருடாந்தம் சுமார் எண்பதாயிரம் வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாக கணக்கிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

இதில் சுமார் முப்பதாயிரம் விபத்துக்கள் பாரதூரமானவை என்பதுடன் வீதி விபத்துக்களினால் நாளாந்தம் ஆறு பேர் வரை உயிரிழப்பதாகவும் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, எமது நாட்டில் ஒவ்வொரு நிமிடமும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் புதிதாக வீதிக்கு வருவதாக மோட்டார் வாகனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 148 மோட்டார் சைக்கிள்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன்படி மாதத்திற்கு கிட்டத்தட்ட 20525 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இதனடிப்படையில் ஒரு தினத்திற்கு 933 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தினத்திற்கு வேலைசெய்யும் நேரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் ஒரு மணித்தியாலத்திற்கு 117 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்படுகின்றன எனவும் அது கிட்டத்தட்ட நிமிடத்திற்கு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்ற எண்ணிக்கையில் இருப்பதாகவும் மோட்டார் வாகனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# இந்தவாரம் உங்கள் பலன்

(11.02.2016 தொடக்கம் 17.02.2016 வரை)

### மேடம்

புலி பசித்தாலும் புல்லை தின்னாது என்பது உங்களைப் பொறுத்த வரை உண்மைதான். நீங்கள் கோபப்பட்டால் அதில் ஒரு நியாயம் இருக்கும். உங்களின் பூர்வ புண்யாதிபதி சூரியன் இந்த மாதம் முழுக்க இலாப வீட்டிலேயே வலுவாக அமர்வதால் சவாலான காரியங்களைக்கூட சிறப்பாக செய்துமுடிப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் ஆதரவாக இருப்பார்கள். சொந்த ஊரில் வாங்கியிருந்த இடத்தை கட்டுவதற்கான முயற்சியில் இறங்குவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. பெரிய பொறுப்புகள் வரக்கூடும். குழந்தை பாக்கியம் உண்டாகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலை அமையும். வாகனத்தை சீர்செய்வீர்கள். நண்பர், உறவினர்கள் வீட்டு விசேஷங்களையெல்லாம் முன்னின்று நடத்துவீர்கள்.

### இடபம்

துயரங்களுக்காக துவளாத நீங்கள் நாளை நமதே என்ற நம்பிக்கையில் வாழ்வீர்கள். நல்லது செய்தே நலிந்தவர்கள். சப்தமாதிபதி செவ்வாய் சாதகமான வீடுகளில் செல்வதால் நீண்டநாட்களாக இழுபறியாக இருந்து வந்த வேலைகள் சிறப்பாகமுடியும். எங்கு சென்றாலும் மதிப்பு, மரியாதை கூடும். தாம்பத்தியம் இனிக்கும். உங்களுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தியவர்களை இனம் கண்டறிந்து ஒதுக்கித் தள்ளுவீர்கள். உறவினர், நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. சர்ப்பக்கிரகங்கள் மற்றும் குருவின் போக்கு சாதகமாக இல்லாததால் அலைச்சல், தூக்கமின்மை வந்துபோகும். இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தலைக்கவசம் அணிந்து கொண்டு செல்லுங்கள்.

### மிதுனம்

வித்தியாசம் பார்க்காமல் பழகும் நீங்கள், வீட்டு நலனுடன், நாட்டு வளர்ச்சி குறித்தும் அதிகம் யோசிப்பீர்கள். புறநகர் பகுதியில் அரை கிரவுண்டாவது இடம் வாங்கவேண்டுமென்று முயற்சிசெய்வீர்கள். வழக்குகள் சாதகமாகும். வரவேண்டிய பணம் கைக்கு வரும். வீடு கட்ட, வாங்க வங்கிக் கடன் கிடைக்கும். அரைகுறையாக நின்ற வீடுகட்டும் பணியை தொடங்குவீர்கள். அவருடன் மனவருத்தங்களும் வரக்கூடும். குரு சாதகமாக இல்லாததால் எவ்வளவு பணம்வந்தாலும் செலவுகளும் கூடிக்கொண்டே போகும். நல்லவர்கள், நீண்டகால நண்பர்களுடன் சிறுசிறு விவாதங்கள் வந்துபோகும். சில வேலைகளை உடனே முடிக்க முடியாமல் தடை, தாமதம் ஏற்படும்.

### கடகம்

எல்லோரும் நல்லவர்களே என நினைக்கும் நீங்கள் தன்னைச் சுற்றி இருப்பவர்கள் சுகமாய் வாழ பாடுபடுவீர்கள். பழைய பிரச்சினையை மாறுபட்ட கோணத்தில் யோசித்து புதுத்தீர்வு காண வழி கிடைக்கும். பல வி.ஐ.பிகளை தெரிந்து வைத்திருந்தும் உங்களுக்கு அவசர நேரத்தில் யாரும் உதவ முன்வராமலிருந்தார்கள் அல்லவா! அந்த நிலை மாறும். குடும்பத்தில் அமைதி நிலவும். பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்துகொள்வார்கள். சகோதரங்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பார்கள். அவருடன் இருந்த கருத்து வேறுபாடுகளும் விலகும். அநாவசிய செலவுகள் குறையும். ஆனால், அத்தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும்.

### சிங்கம்

வஞ்சப் புகழ்ச்சியால் சுற்றியிருப்பவர்களின் தவறுகளை சுட்டிக்காட்டும் நீங்கள், எப்போதும் நீதி நேர்மைக்கு குரல் கொடுப்பவர்கள். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளில் பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். 7ஆம் திகதி வரை 6ம் வீட்டிலேயே சுக்கிரனும் மறைந்திருப்பதால் குடும்பத்திலும் கணவன், மனைவிக்குள் வாக்கு வாதங்கள் வரும். சமையலறை சாதனங்கள், எலக்ட்ரோனிக் சாதனங்கள் பழுதாகும். சிறுசிறு விபத்துகள் வரக்கூடும். சாலை விதிகளை மீறாமல் வாகனத்தை இயக்குங்கள். சவாலான காரியங்களைக்கூட கையில் எடுத்து முடிக்க துணிவீர்கள். குடிநீரை காய்ச்சி அருந்துங்கள். தர்மசங்கடமான சூழ்நிலைகளும் அதிகரிக்கும்.

### கன்னி

எப்போதும் தியாகம் செய்துகொண்டு இருக்கும் நீங்கள், பிரதிபலன் பாராத சேவையால் எல்லோர் மனதிலும் இடம்பிடிப்பவர்கள். அரைகுறையாக நின்ற காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. வாகனத்தை அதிவேகமாக இயக்கவேண்டாம். இரவில் அதிகநேரம் கண் விழித்து எந்த காரியத்தையும் செய்யவேண்டாம். பல் மற்றும் ஈறுகளில் வீக்கம் வர வாய்ப்பிருக்கிறது. சகோதர, சகோதரிகளால் நல்லது நடக்கும். வீடு, மனை வாங்குவது, விற்பது சுலபமாக முடியும். குருவும், ராகுவும் 12ல் நிற்பதால் திடீர் பயணங்கள், அலைச்சல், தூக்கமின்மை வந்துபோகும். கோயில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள்.

### துலாம்

எல்லோரையும் எடுத்த எடுப்பிலேயே நம்பும் நீங்கள், காலம் கடந்துதான் சிலரின் கல் மனதை புரிந்துகொள்வீர்கள். உங்களின் ராசிநாதனான சுக்கிரன் இந்த மாதம் முழுக்க சாதகமான வீடுகளில் செல்வதால் மகிழ்ச்சி தங்கும். மனப்போராட்டங்கள் ஓயும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். அனைத்து இடர்பாடுகளையும் கடக்கும் சக்தி உண்டாகும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். இந்த மாதம் பிறக்கும்போது சூரியன், கேது ஆகிய கோள்கள் 5இல் நிற்பதால் பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் இந்த மாதம் முழுக்க கூடுதல் அக்கறை செலுத்துங்கள். வழக்கில் தீர்ப்பு தள்ளிப் போகும்.

### விருச்சிகம்

கனிவான விசாரிப்பால் மற்றவர்களையும் கவர்ந்திழுக்கும் நீங்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசமாட்டீர்கள். சுக்கிரனும், புதனும் சாதகமான வீடுகளில் செல்வதால் உங்களுடைய நீண்டநாள் கனவு நனவாகும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். கணவன், மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். மனைவி வழி உறவினர்களுக்கு உதவுவீர்கள். சுபச்செலவுகள் இருந்து கொண்டிருக்கும். நீண்டநாட்களாக மனைவி கேட்டுக்கொண்டிருந்ததை வாங்கித் தருவீர்கள். உங்களின் புகழ், கௌரவம் உயரும். வீடு, மனை வாங்க முன் பணம் தருவீர்கள். சகோதர, சகோதரிகளால் பயனடைவீர்கள். ராசிக்கு பிரபல யோகாதிபதியான சூரியன் 4ல் அமர்ந்திருப்பதால் வேலை தேடிக்கொண்டிருந்தவர்களுக்கு வேலை அமையும்.

### தனுசு

தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருக்கும் நீங்கள் அடுத்தவர் விஷயத்தில் அநாவசியமாக தலையிடமாட்டீர்கள். கடந்த ஒரு மாதகாலமாக உங்கள் ராசிக்கு 2ம் வீட்டில் அமர்ந்து கொஞ்சம் வேகமாகவும், காரமாகவும் பேசவைத்த சூரியன் இப்போது 3ல் நுழைந்திருப்பதால் உங்களின் புதிய முயற்சிகள் யாவும் வெற்றி பெறவைப்பார். தடைகளெல்லாம் நீங்கும். அவர்கள்மூலமாக கடினமான காரியங்களையும் நீங்கள் முடித்துக் காட்டுவீர்கள். தந்தைவழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். தந்தையாருடன் இருந்த பிணக்குகள் நீங்கும். அவரின் ஆரோக்கியம் சீராகும். உங்களின் பூர்வ புண்யாதிபதி செவ்வாய் சாதகமான வீடுகளில் செல்வதால் மகனுக்கு வேலை கிடைக்கும்.

### மகரம்

எதிராளிகளையும் சிந்திக்கவைக்கும் நீங்கள், சுற்றுப்புறச் சூழலுக்கு கட்டுப்படாமல் தனக்கென தனிப்பாதையில் செல்பவர்கள். கடந்த மாதம் முழுக்க உங்கள் ராசியிலேயே நின்று முன்கோபம், சோர்வு, களைப்பையும் ஏற்படுத்திய சூரியன் இப்போது உங்கள் ராசியைவிட்டு விலகி 2ல் அமர்ந்ததால் பெரியநோய் இருப்பதைப் போன்ற பிரமை விலகும். ஆழ்ந்த உறக்கமில்லாமல் தவித்தீர்களே! இந்த மாதத்தில் நிம்மதியாக தூங்குவீர்கள். செவ்வாய் சாதகமான வீடுகளில் செல்வதால் தைரியம் பிறக்கும். மனக்குழப்பங்கள் நீங்கும். சகோதர, சகோதரிகள் உங்களின் உண்மையான பாசத்தை புரிந்துகொள்வார்கள். புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! நல்ல பதில்வரும்.

### கும்பம்

ஆர்ப்பாட்டம் இல்லாமல் எதையும் சாதிக்கும் நீங்கள், பெரியோர், சிறியோர் என்றில்லாமல் எல்லோரிடமும் பணிவாக நடந்து கொள்வீர்கள். இந்த மாதம் உங்கள் ராசிக்குள் சூரியன் நுழைந்திருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தப்பாருங்கள். ராசிக்குள் கேதுவும், 7இல் ராகுவும் நிற்பதால் பணத்தட்டுப்பாடு, கொடுக்கல், வாங்கல் பிரச்சினைகள் இருக்கும். தூக்கம் குறையும். எதிர்மறை எண்ணங்கள் வரும். சின்ன சின்ன விஷயங்களையும் போராடி முடிக்க வேண்டிவரும். என்றாலும் குருபகவான் 7ம் வீட்டில் நிற்பதால் உங்களுடைய திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். விலை உயர்ந்த தங்க ஆபரணம் வாங்குவீர்கள்.

### மீனம்

எடுத்தோம் கவிழ்த்தோம் என்றில்லாமல் ஆழமாக யோசித்து முடிவெடுக்கும் நீங்கள், கடந்துவந்த பாதையை ஒரு போதும் மறவாதவர்கள். உங்கள் ராசிக்கு 12ம் வீட்டில் சூரியன் நுழைந்திருப்பதால் செலவீனங்கள் ஒருபக்கம் இருந்து கொண்டேயிருக்கும். ஆனாலும் சுபச் செலவுகளும் அவ்வப்போது உண்டு. உங்களைச் சுற்றியிருப்பவர்கள், நெருங்கியிருப்பவர்களுக்கு ஏதேனும் செய்யவேண்டுமென்று நினைத்தீர்களே! அவர்களுக்கெல்லாம் விலை உயர்ந்த பொருள்வாங்கித் தருவது அல்லது அவர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவது என்று பல காரியங்களையும் இந்த மாதத்திலே நீங்கள் செய்வீர்கள். 6ம் வீட்டிலேயே குரு தொடர்வதால் சிலரின் ஆசை வார்த்தைகளில் ஏமாந்துவிடாதீர்கள்.





## மதுபான கடத்தல்

சவூதி அரேபியாவுக்குள் மதுபான போத்தல்களை கடத்த முயன்ற நபர் அதிகாரி களிடம் சிக்கினார். இவரின் கடத்தல் முயற்சியை காட்டுகின்ற படங்கள் இவை.







## மாட்டை தந்தத்தால் குத்தி கொன்ற யானை!!

கென்யா நாட்டில் உள்ள வனப்பகுதியில் காட்டு யானை ஒன்று மாடு ஒன்றை தந்தங்களால் குத்தி தாக்கி கொன்ற காட்சிகளை புகைப்படப்பிடிப்பாளர் ஒருவர் தனது கெமராவில் பதிவு செய்துள்ளார்.

உறங்கிக்கொண்டிருந்த மாடு ஒன்றுக்கு அருகில் வந்த பெண் யானை ஒன்று தனது தந்தங்களால், மாட்டை குத்தி நிலத்தில் அடிக்கும் காட்சி புகைப்படங்களில் பதிவாகியுள்ளது.

சிறிது நேரத்தின் பின்னர் மாடு இறந்து போயுள்ளது. சம்பவம் நடைபெறும்போது மேலும் சில சிறிய யானை சம்பவத்தை பார்த்து கொண்டிருந்தபோதும், அவை தாக்குதலில் சம்பந்தப்படவில்லை.

இந்த அபூர்வமான காட்சியை 56 வயதான கிம்பர்லி மவுரர் என்ற புகைப்படப்பிடிப்பாளர் பதிவுசெய்துள்ளார்.

## பொலிஸ் டான்ஸ்

நூறு கோடியினர் கிளர்ச்சி அமைப்பின் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்போம் என்கிற நிகழ்ச்சி திட்டம் இந்தியாவில், சண்டிகார் மாநிலத்தில் நடத்தப்பட்டபோது மாணவிகளும், பெண் பொலிஸாரும் ஒன்றாக நடனம் ஆடினார்கள்.

## தொடக்கமும் முடிவும்...










இந்தியாவின் முதன் முதலில் நீருக்கடியில் கட்டப்பட்ட உணவகமான ரியல் போஸிடான், துவங்கப்பட்ட ஒரே நாளில், பாதுகாப்பு காரணங்களுக்காக சீல் வைக்கப்பட்டு அதிகாரிகளால் மூடப்பட்டுவிட்டது. இதுகுறித்து கூறிய அகமதாபாத் காவல்துறை ஆய்வாளர் தேவங் தேசாய், "ரியல் போஸிடான் கட்டத்தை நிலத்திற்கு அடியில் அண்டர்வாட்டார் உணவகமாக கட்ட, போதிய அனுமதிகளை முறையாக அதன் உரிமையாளர் பெறவில்லை. மேலும் இந்த உணவகத்தின் நீர்வாழ் காட்சி சாலையில் (அக்வாரியம்) தண்ணீர் கசிகிறது. முறையாக அனைத்து சான்றிதழ்களையும் பெற்றபின்னரே உணவகம் செயல்பட அனுமதி வழங்கப்படும்" என தெரிவித்தார். 2.5 கோடி ரூபாய் செலவில், சுமார் 4500 மீன் வகைகளை கொண்டு கட்டப்பட்டுள்ளது. இந்த உணவகம். இந்தியாவின் முதல் அண்டர் வாட்டர் ரெஸ்டாரெண்ட் என ஆவலோடு பார்வையிட காத்திருந்த மக்களுக்கு பெரிதும் ஏமாற்றமே!

## தேவாலயம்

பார்வையாளர்களை கவர்ந்த தேவாலயம் - நம்ப முடிகிறதா?

தாய்வானில் பெண்களின் காலணி போல் முற்றிலும் கண்ணாடிகளால் வடிவகைக்கப்பட்ட தேவாலயம் ஒன்று பார்வையாளர்களை வெகுவாக கவர்கிறது.

தாய்வானில் உள்ள சியாய் கவுண்டி என்னும் இடத்திலேயே இந்த மிளிரும் கண்ணாடி தேவாலயம் அமைக்கப்பட்டு வருகிறது.







இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டீ.டி என்டர்பிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் பெப்ரவரி 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.